81

ஞாயிறு

கலையாக்கங் கருதிய வெளியீடு

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, சென்னை-20.

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரோன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

தொகுதி 1

முன்பனி
பின்பனிக்
கதிர்கள்

மார்கழி—தை
மாசி—பங்குனி
ஸ்ரீமுக ஆண்டு

யாழ்ப்பாணக் கலாநிலையம்

1933—1934

82

ஞாயிறு

கலை ஆக்கங் கருதி இருதிங்கட் கொருமுறை வெளிவருவது

ஆசிரியர்

உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர்

உசாத்துணைவர்கள்

திரு சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்.
உயர்திரு சுவாமி விபுலாநந்தர்
வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசஐயர்
வித்துவான் ந. சுப்பையாபிள்ளை
ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார்
வியாகரண மகோபாத்தியாய
பிரம்மஸ்ரீ வை. இராமசாமிசர்மா
கனம். சுவாமி ஞானப்பிரகாசர்
பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை
வழக்கறிஞர் திரு வே. நாகலிங்கம்
திரு க. நவரத்தினம்

உதவியாசிரியரும் பொறுப்பாளரும்

திரு க. கி. நடராஜா

குறிப்பு.—கட்டுரைகள், மதிப்புரைக்குரிய நூல்கள், பத்திரிகைகள் முதலாயின ஆசிரியர்க்கும், ஆண்டுக் கட்டணப்பொருள், விளம்பரம் முதலாயின பொறுப்பாளர்க்கும் அனுப்பப்படுதல் வேண்டும்.

கலாநிலையத்தின்
நூலாராய்ச்சிக் கழக அங்கத்தினர்

திருவாளர் சு. நடேசபிள்ளை, பி. ஏ., பி. எல்.
வித்துவான் சி. கணேசஐயர்
உயர்திரு சுவாமி விபுலாநந்தர்
உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர்
வியாகரண மகோபாத்தியாய வை. இராமசாமிசர்மா
வழக்கறிஞர் திரு வ. குமாரசுவாமி, பி. ஏ.
கனம். சுவாமி ஞானப்பிரகாசர்

83

உள்ளுறை

	பக்கம்
புத்தபகவான்	385
இருபனிப் பருவ வருணனை	387
செழுங்கதிர்ச் செல்வம் ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியார்	388
பாவலர் சொற் போற்றிய காவலர் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம்	396
திருவாய்மொழி ஸ்ரீமான். அ. சுந்தரராஜ ஐயங்கார், பி. ஏ.	411
சாளுக்கிய அரசர்களின் சிற்பக் கோயில்கள் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார்	418
யோக தர்சனம் திரு. க. விசுவலிங்கம்	424
தொல்காப்பியம் எழுத்ததிகாரம் வித்துவான் திரு. ந. சுப்பையாபிள்ளை	432
தமிழகத்துத் தருக்கநூல் வளர்ச்சி திரு. பொ. கைலாசபதி, பி. எஸ்சி.	437
யாழ்ப்பாணச் சரித்திரம் முதலியார் திரு. செ. இராசநாயகம்	440
வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள் வரலாறு	446
பாடசாலைகளில் இலக்கியக் கல்வி பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர்	453

84

பக்கம்

இசைத்தமிழ்க் கல்வி 459
பண்டித திரு. செவ்வந்திநாத தேசிகர்

இருளின் மிளிரும் ஒளி,
அல்லது துன்பத்தில் துலங்கும் இன்பம் 466
திரு. க. கி. நடராஜன்

ஆசிரியர் குறிப்புக்கள் 475

நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சிகளும் 478

பன்மணிக்கோவை 484

மதிப்புரைகள் 493

கலாநிலையத்தின் மூன்றும் ஆண்டு அறிக்கை 503

சித்திரப்படம்

புத்த பகவான் முன்பக்கம்

—

புத்த பகவான்

அநுராசபுரத்தில் உள்ள சிலையுருவம்

புத்த பகவான்

மூற்பக்கம் காட்டப்பெற்றுள்ள உருவம் புத்த பகவானைக் குறிக்கின்றது. இவ்வழகிய கற்சிலை அநுராசபுரத்தின் பாங்கரிலுள்ள அடர்ந்த வனத்தின் மத்தியில் இன்று காணப்படுகின்றது. இசசிலையிருக்கும் இடம் பண்டைக்காலத்தில் அழகிய கருங்கற் கோவில்களும், பௌத்தசமயப் பள்ளிகளும் நிறைந்த ஒரு பெரும் நகரமாக விளங்கியிருத்தல் வேண்டும். அங்குக் காணப்படும் அழிந்த கட்டிடங்களே இதற்குப் போதிய சான்றுகளாகும். காலவளர்ச்சியாலும், வெப்ப தட்ப விகற்பங்களாலும், இவ்வுருவம் மிகவும் சிலமடைந்து, உருக்கலைந்து இருப்பினும், சிற்பத்திறனை நன்கு ஆராய்ந்து உணரவல்லார்க்கு இன்றும் பெருமகிழ்ச்சியையளித்தேவருகின்றது. செங்கற்களால் கட்டப்பட்ட ஒருசிறிய மேடையில் இது இப்போது வைக்கப்பட்டிருப்பினும், புத்தசமயஞ் சிறந்து விளங்கிய காலத்து அழகுவாய்ந்த ஆலயத்துள் வைத்துப் போற்றப்பட்டிருத்தல்வேண்டும். உலகத்தின் பலபாகங்களிலுங் காணப்பெறும் புத்தர் திருவுருவங்களுள் சிறந்தனவாகக் கருதப்படும் மூன்றனுள் இவ்வுருவமும் ஒன்றாகும். மற்றைய இரண்டும் வட இந்தியாவிலுள்ள சாரநாத் (Sarnath) என்னும் நகரிலும், ஜாவாவிலுள்ள போரபதூர் (Boro-Budur) என்னும் இடத்திலும் காணப்படுகின்றன. இச்சிலையின் காலம் கிறிஸ்துவிற்குப்பின் இரண்டாம் நூற்றூண்டாகவேண்டுமென்பது சிற்ப நூல்வல்லார் கருத்து.

சர்தாரணமாக நோக்குபவர்கட்கு இவ்வுருவத்தின் சிறப்பு விளங்குவதில்லை. அநுராசபுரத்தின் பண்டைப் பெருமைகளுக்கு அறிகுறிகளாய் அழிந்து கிடக்கும் சிற்ப உருவங்களையும், அழகிய கட்டிடங்களையும் பார்வையிடச் செல்லுமநேகர் இதனை வெளிப்படையாகவே பார்த்து இதன் அழகினை நுகராதே திரும்புகின்றனர். சிற்ப உருவங்களைக் கூர்ந்து பார்த்து அநுபவிக்கும் ஆற்றல் வாய்ந்த சிலரே இவ்வுருவத்தின் அமைப்பையும், அமைதியையும், மனோசாந்தத்தையும் நுணித்து நோக்க வல்லாராவர்.

இச்சிலையை உற்றுநோக்குவார்க்கு இதன் பெருமை விளங்காதிருத்தல் அரிது. மாலைப்பொழுதில் இயற்கை அமைதியுற்றபின், எங்கணும் சாந்தம் நிலவும் வேளையில் குளிர்ந்த பசுமை நிறைந்த

சோலையின் மத்தியில் நாம் சென்று, ஏகாந்தமாகச் சுகாசன மிட்டு அகத்துள் ஆநந்தம் அரும்ப கருணை பொலிந்தவதனத் துடன் சுகித்திருக்கும் இத்திருவுருவத்தின் முன் நிற்போமாயின், அப்பாக்கியம் நம் தவப்பயனேயாகும். அந்நேரத்தில் மனத்துள் எழும் இன்ப உணர்ச்சி எழுதுந்தரத்ததன்று. மனோநிக்ரகத்தி னால் எழும் வீரம், வைராக்கியம், கருணை, பரவசம் முதலாங்குணங் களுக்கு இத்திருவுருவம் ஓர் எடுத்துக்காட்டாகும். இதன் தேக அங்கங்கள் பருமையாகத் தோற்றினும், ஜடத்தன்மையற்றதாய், பர வசப்பட்ட இதயதாமரையைத் தன்னகத்தே கொண்டதாய், சாத் விகம் நிறைந்து விளங்கும் வடிவினதாய் இருக்கின்றது.

அகத்தின் ஆநந்த நிலை முகத்தில் மலர்ந்திருப்பதை இவ்வுரு வம் நன்கு காட்டுகின்றது. உண்ணவுண்ணத் தெவிட்டாத இன் பத்தினை நுகர்ந்து தனித்திருக்கும் ஓர் நிலையை இவ்வுருவம் காட்டுவதுபோல் எவ்வுருவமும் காட்டுவதில்லை. தூய்மையும், கருணையும், சாந்தமும் நிறைந்த இச்சிலையை எமக்களித்த சிற்பி யின் திறன் போற்றற்குரியதே. இலங்கையின் பலபாகங்களில் இங்குமங்குமாகச் சிதறுண்டு கிடக்கும் இவ்வித அழகிய உருவங் களை நாம் பலகாலுஞ் சென்று பார்த்து இன்புறுவது பெரிதும் வேண்டப்படும் ஒரு செயலாகும்.

க. நவரத்தினம்.

ஃ

இரு பனிப் பருவவருணனை

மார்கழியும் தையும் முன்பனிப் பருவத்திற்கும், மாசியும் பங்குனியும் பின்பனிப் பருவத்திற்கும் உரிய மாதங்களாம்.

இப்பருவங்களின் பெயரே அவைகளின் இயல்பை ஒருவாறு உணர்த்தும். முன்பனிக்காலத்தில் இரவும் பகலும் சரிசமமாக இராமல், முன்னது நீண்டும் பின்னது கொஞ்சம் குறுகியும் இருக்கும்; மக்கள் யாவரும் கம்பலம் முதலாம் போர்வைகளைப் போர்த்தே இரவில் நித்திரை செய்வர்; மூடுபனி புகைபோல் நாற்புறமும் கவிந்து நிற்கும்; இப்பருவத்திலேதான் தென் இந்திபத் தமிழ்நாட்டிலும் இங்கும் சில கொடிய நோய்கள் பரவுகின்றன; வீட்டைவிட்டு வெளிப்புறப்பட யாரும் விரும்பார்; இப்பருவத்தின் முதலாம் மாதமாகிய மார்கழியே பன்னிரு மாதங்களிலும் மிகச் சிறந்ததென நூல்கள் கூறுநிற்கும். ஆசாரசீலர் பலரும் இம்மாதத்தில் வைகறையில் துயில் எழுந்து, ஸ்நானம் செய்து சிவபூஜை முதலாம் நற்கருமங்களைச்செய்வர்; தேவாலயங்களிலும் இம்மாதத்தில் வைகறையில் தினந்தோறும் திருப்பள்ளியெழுச்சி சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது; சைவர்களால் 'திருவெம்பாவை' யும், வைணவர்களால் 'திருப்பாவை' யும் ஓதப்படுகின்றன; இம்மாதத்தில் தமிழ்மாதர்கள் அதிகாலையில் எழுந்து பல நிறமுடைய கொடிப்பூக்களால் தங்கள் வீடுகளை அலங்கரிப்பர்; கூதிர்க்காலத்தில் உள்ளீடுகொண்டு தலைசாய்த்து நின்ற நன்செய்ப்பயிர்கள் இப்பருவத்திலேதான் அறுக்கப்படும்; பலவகைக் கரும்புகளும், கிழங்குவகைகளும், மஞ்சளும், அவரை முதலாம் கறிகாய் வகைகளும் இக்காலத்தில் மிகுதியாகக் கிடைக்கும்; செவ்வந்திப்பூவே இப்பருவத்திற்கு மிகச்சிறப்பானது; பொங்கல் என்ற நன்னாள் இப்பருவத்தின் இரண்டாம் மாதமாகிய தை முதலாம்நாள் கொண்டாடப்படுகின்றது.

பின்பனிப் பருவத்தில் பகல் நேரத்தில் வெய்யிலின் வெம்மை மாசியளவும் மக்கள் பொறுக்கும் அளவில் இருந்து, பங்குனியில் மிக அகோரமாகிவிடும். புன்செய்த்தானியங்கள் அறுவடையாகும் காலம் இதுவே.

வை இ.

செழுங்கதிர்ச் செல்வம்

ஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதியார் அவர்கள்

இயற்றியது

(297-ம் பக்கத் தொடர்ச்சி)

அறுசீர் ஆசிரிய விருத்தம்

28. மண்ணோர் காணு வகையெழினி
மழையான் மறைத்து வானத்தின்
கண்ணே நீநின் குழுவுடனே
கங்குல் பகலாப் பயில்கூத்தை
அண்ணல் கோடைக் காலமுற்றும்
அவனிக் காடும் பொருள்தெளிப்பாய்;
விண்ணோர் தலைவா வேதமணி
விளக்குச் சுடரே! செழுங்கதிரே!

29. காலை யந்திப் பொழுதினிலே
கதிர்க்கை யாலே பலநிறத்தை
நீல வானத் திடைக்குழைத்து
நீதா னித்தந் தீட்டிவந்தும்
சாலப் பெருத தகைகுறித்தோ
தவிர்த்துப் பின்னு மழிக்கின்றாய்;
பாலர் பள்ளி மணலெழுத்தைப்
பயில்கின் றாயோ? செழுங்கதிரே!

30. ஆங்குற் றுயிராய்க் கிடக்கவைத்த
அதற்குஞ் சினவாள் கொலைசெய்த
தீங்கைக் குறித்துத் தன்மகன்மேல்
சேர்க்கு மயலார் மேற்கனன்று
தாங்கி மகனைக் காக்குமொரு
தாய்நா ணுருந் தகையுமிலேன்
யாங்குப் பெறுவே னினதன்பை
யாதென் னிலையே? செழுங்கதிரே!

31. எல்லார் தமையும் நீவருமுன்
எழுப்பிப் பின்னர் வருகின்றாய் ;
பொல்லா வினையேன் றனித்துன்னைப்
புகன்று குறைகள் போக்கற்கும்
ஒல்லா திங்ஙன் வாளுளும்
ஓடி வீணு வொழிந்ததுவே ;
செல்லாங் கால மெலாநொடிக்குட்
செகத்திற் காக்குஞ் செழுங்கதிரே !

32. தொற்று பனியின் றுளியூடே
தோன்றி யவற்றை மணிமுத்தும்
பற்றும் பவழ மெனமருட்டிப்
பள்ளிச் சிறுரைப் பயன்படுத்தி
எற்று புனலி னிடைவானத்(து)
இலங்கும் வில்லைக் கொணர்ந்தவரைக்
கற்றுக் களிக்கப் பயில்விக்குங்
கடவுட் சோதிச் செழுங்கதிரே !

33. திங்க ளிரவிற் றன்னுடனே
யுடுவுந் திகழத் தான்றிகழ்ந்(து)
அங்க ணுலகி லொளிபரப்பி
யாட்சி புரியு மதுபோலத்
தங்கு மதியு முடுவுமுன்றன்
சந்நி தானத் தொளிர்கிலவாய்
மங்கித் திரியு மறையாதோ ?
மறையா நேர்மைச் செழுங்கதிரே !

34. நீசென் றனையோ வெனமெல்ல
நீட்டித் தலையைக் காட்டிமன
மாசொன் றியவெங் கள்வரொடு
வனத்தின் மாவு மதியுடுவும்
தேசொன் றியவாய் மண்விண்ணிற்
றிரிந்து மிளிருந் திறமென்னே ?
பாசொன் றிமயப் பருப்பதத்துப்
பனிநீர் நெகிழ்க்குஞ் செழுங்கதிரே !

35. தீய வற்றே டளாய்த்தூய்மை
தீர்ந்த புனலைச் சேர்த்தெடுத்து
மேய மாசெல் லாங்கழுவி
மினுக்கித் துடைத்துப் பினுமாடச்
சேயை விடுக்குந் தாய்போலச்
செகத்திற் களிக்குந் திருத்தாயே!
ஆயற் கரிய வரும்பொருளே!
அன்பிற் கெளிய செழுங்கதிரே!

36. நன்றே செயினும் விதிமுரணி
நலிவே செயினும் நாடாமற்
கன்றே யூட்டுந் தாய்போலக்
கடைக்க ணேங்கா லெனக்காப்ப(து)
ஒன்றே புரியு மொருதலைவா!
உனையான் மறந்தா லுய்வேனோ?
மன்றே புகுந்து மணமுடித்த
மைந்தா! வாழி செழுங்கதிரே!

37. நீகுற் றேவல் செய்கென்ன
நின்னைப் பணிப்பேன்; சேயாகி
ஏகுற் றின்பா றருகென்ன
வேங்கி யழுவேன்; யான்றாயாப்
போகிப் பால்தந் துனைக்கொஞ்சிப்
புளகிப் பேனென் னுடலமெலாம்;
மோகக் காதல் நாடகத்தின்
முறையோ மொழியாய்? செழுங்கதிரே!

38. அடர்க்குங் கதிரின் வெந்தீயும்,
ஆகாச் செய்மைப் பெருவழியும்,
இடைக்கொண் மனிதர் தேவர்க்காம்
இழிவோ டுயர்வு மிபாங்கொளித்த?
படுக்கைக் குள்ளே நாய்தன்னைப்
படுத்துச் சேய்போல் வளர்ப்பதுவுந்
தொடுக்கு மன்பாங் கிழமையன்றோ?
சூழ்ந்து வழங்காய்; செழுங்கதிரே!

39\. தன்னை வளர்த்த நீரோடுந்
தன்மெய் கலவாத் தகைதுறந்து
நின்னை யன்றிப் பிறவற்றை
நேர்நோக் காம லிடவெல்லாம்
முன்னைப் பாவம் போயகல
முற்றுந் தவத்தாற் கண்டுமலர்
இன்ப மரைக்கே யாட்பட்டாய்
இனியென் செய்கேன் செழுங்கதிரே!

40\. ஈட்டற் குரிய பொருளோட்டி
ஈட்டற் காகா மிடியீட்டி
கூட்டற் குரிய கிளையோட்டி
கோடற் காகாத் தனிமைகொண்டு
வாட்டற் காகா வுடல்வாட்டி
வருதற் காகாச் சுகம்பொருத்தும்
மாட்சிப் பெருக்கே! யிருக்காதி
மறைக்கோ ருயிரே! செழுங்கதிரே!

41\. பெற்ற திருவைப் பிறிதாக்கிப்
பேணாப் பிறிதை யுரித்தாக்கிக்
கற்ற வறிவை யிருளாக்கி
கல்லா விருளை யொளியாக்கி
உற்ற நனவைக் கனவாக்கி
உதவாக் கனவை நனவாக்கி
மற்றவ் விருளைப் பகலாக்கும்
மாயா மாயா! செழுங்கதிரே!

42\. புறத்துப் பொருளைப் பறித்தெறிந்து
புலனைக் கதவைத் தாளிட்டுக்
குறித்துக் காவல் புரிபோதே
குறியா தென்னுட் குறுகியங்கே
நிறத்தோ டிருக்கும் பெருங்கள்வா!
சிக்கென் றுன்னை வலிந்துபற்றிச்
சிறைக்குட் படுத்தற் குண்மறைந்து
செல்லும் மாயா! செழுங்கதிரே!

43. வாளா விருந்த பாழ்நிலத்தை
வளைந்து புனைந்து மன்றாக்கி,
நாளே யதனுள் வீற்றிருந்து,
நாடா ளாட்சி வேந்தாற்றின்
ஆளா கதற்கங் கியா(து)எற்றம்?
ஆங்கென் னுவை யிடமாக்கி,
மாளா வாழ்வே! புகுந்துனை நீ
வாழ்த்திப் புனைந்தாய் செழுங்கதிரே!

44. யான்செங் கதிரோ? இதுவானோ?
யான்றான் யானோ? இதுமண்ணோ?
தேன்செய் இன்பத் தெளிவுண்டு
திகைத்துப் போனே னறிகில்லேன்;
ஊன்செய் நனவோ? அஃதன்றி
உறங்குங் கனவோ? பிறிதேயோ?
நான்செய் தவத்தி னற்பேறே!
நவிலாய் கவினர் செழுங்கதிரே!

45. எல்லா வுயிரு மென்மக்கள்;
எல்லா உலகு மவர்க்குரிய;
எல்லா நுகர்வு மினியவர்க்கே;
என்றே தேறிப் பேராசை
எல்லாம் போக்கி யானுய்ய
என்னை மணந்த மணவாளா!
எல்லாம் வல்ல மாமாயா!
இனியா னஞ்சேன் செழுங்கதிரே!

46. விடியற் போழ்தில் துயிலுணர்ந்து
விழிக்கு மோர்நா ளுன்றெய்வ
வடிவைக் கண்டு மூர்ச்சித்து
மயங்கிக் காதல் வலைப்பட்டு
நொடியிற் கருக்கொண் டுனையேயான்
நோற்ற தவத்தின் பேறாகப்
படியிற் பெற்று வளர்க்கின்றேன்
பாலா! வாழி செழுங்கதிரே!

47. வான முகட்டின் மறையொளியாய்
மழைக்குண் மருவி மின்னுகிப்
போன துளியாய்ப் புவிபுகுந்து
புசிக்கு மமுதட் போந்தியான்கொள்
ஞானக் கருவாய் வளர்ந்துதித்து
நளின விழியா லெனைமயக்கித்
தேனைச் சொரிந்தென் கவலையெலாந்
தீர்க்குந் திருவே ! செழுங்கதிரே !

48. சற்றுத் துயினீத் துணைக்காணுஞ்
தருணந் தன்னிற் சராசரங்கண்
முற்று மொவ்வோ ரணுமயமாய்
முறையே நின்னுள் தூங்கிவரும்
பெற்றி யறிந்து மூர்ச்சித்துப்
பித்துற் றுறங்கி மறந்தெழுந்த
மற்றப் பகலே யுனைச்சேயாய்
மயங்கா நின்றேன் செழுங்கதிரே !

49. முந்திப் பிந்திப் போரெதிர்ந்தும்
முகமன் புரிந்தும் வருந்தாமல்,
எந்த இடத்தும் எப்போதும்
எண்ணின் முன்னர் வந்தெய்தி,
அந்த இடத்தில் அப்போதே
அவாவும் பொருளாய்த் தானுகிச்
சிந்தை களிக்க நுகர்விக்குஞ்
சிந்தா மணியே ! செழுங்கதிரே !

50. செல்வஞ் சிறிது மில்லாதேன்,
தேசும் வலியுஞ் சிறிதுமிலேன்,
நல்ல கலையுஞ் சொல்வலியும்
நாடிற் சிறிதும் பெற்றில்லேன்,
சொல்லி முயன்று நின்றுமிலேன்;
சோரா அன்புண் டெனிலில்லேன்
புல்லி உனையான் களிக்கின்றேன்;
புகலா யிதென் ? செழுங்கதிரே !

51. புகழ்தற் குரியா னிவனென்று
புகழா ரேனும் இவனொருவன்
இகழ்தற் குரியான் என்றென்னை
இகழ்தற் கேனு மொருவரில்லாத்
தகையுற் றெவரும் பொருட்படுத்தாத்
தன்மை யேனைச் சார்ந்திரங்கி
வகைசெய் தருளைப் பாலித்த
வள்ள லே! என் செழுங்கதிரே!

52. எல்லா ஆற்ற லும்,எல்லா
இயல்பும், எல்லாக் கலையுணர்வும்,
எல்லா நலன்சேர் பெருங்குணனும்,
எல்லா வற்றுப் பெரும்பேறும்,
எல்லாச் சிறப்பு மினிதளித்தாய்;
இயம்பும் இவற்றென் றில்லேனுக்(கு)
எல்லாந் தானய் வேறுமாய்
இருக்கு மிருமைச் செழுங்கதிரே!

53. கன்றுந் தீய தொன்றேனுங்
கலவா தோடப் புடம்வைத்து
நன்றுக் கிடனும் பெருந்தவங்கள்
நான்முற் பிறப்பிற் பலபயின்றேன்
என்றிவ் வுலகோ டொருயானும்
இன்றே யுணர்ந்து வியப்பெய்த
வென்று மணந்து சுகம்விளைத்து
விளையும் விளைவே! செழுங்கதிரே!

54. உன்றன் இயல்பொன் றுணராமுன்
உன்மேற் காத லாற்றெடுத்து
மன்னும் பெருக்கி னலைப்பட்டு
மயங்கித் திரியு நிலைக்கிரங்கி
நன்று புரிந்தா யதுபெற்ற
நாளே தொடங்கிப் பிறவற்றும்
ஒன்று முனையான் கண்டவற்றை
உவக்கின் றேனே; செழுங்கதிரே!

55. காட்ட லோடு காண்பதுவுங்
கலக்கக் கலந்த ஒருகலப்பே!
ஈட்டு முணவோ டுண்பதுவும்
இயைவான் இயைக்கும் ஓரியைபே!
கேட்ட லோடங் கிசைப்பதுவுங்
கிழமை கொளச்செய் கிழமையே!
கூட்டிப் பிரிக்கப் பிரித்தவற்றை
கூட்டற் குரிய செழுங்கதிரே!

அள்ளிப் பருகிலுமென்? ஆனந்த மேலீட்டால்
துள்ளிக் குதித்தாடித் தோயினுமென்?—உள்ளத்தாம்
காதல் தணியாதே; கங்குல்பக லென்பதற்றுப்
போதக் கதிர்ப்பரவை புக்கு.

செழுங்கதிர்ச்செல்வம் நிறைவேறியது.

பாவலர்சொற் போற்றிய காவலர்

வேலணையூர்
பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் எழுதியது

(317-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒருகாலிவ் வேந்தன் சேரனது தலைநகராய கருவூரை முற்றுகையிட்டிருந்தான். சேரனோ இவனோடு எதிர்த்து மலையும் ஆற்றலின்றி மதிலை அடைத்துக் கொண்டு உள்ளிருந்தான். அடைமதிற் பட்டிருக்கும் நகர மக்கள் அடையும் இன்னல்கள் அளவிடற் பாலதா? இதனை அறிந்த அருண்மிக்க பெரும்புலவராய ஆலத்தூர் கிழார் வளவனிடம் சென்று அவனை நோக்கிக் 'காவலனே! காக்கள் தோறும் காவன் மரங்களைத் தறிக்கும் ஓசை தன் ஊரிலே கோயிற்கண் சென்று ஒலிக்கவும், அவ்விடத்து, மானம் இன்றி இனிதாக இருந்த வேந்தனுடன் இவ்விடத்து நின் முரசு ஒலிக்க நீ பொருதாயென்பது, கேட்டார் நாணுந் தன்மை உடையது. நீ அவனைக் கொல்வாயாயினும், கொல்லாது விடுவாயாயினும், அவற்றால் நினக்கு உண்டாகும் உயர்ச்சியை நாம் கூற வேண்டுவதின்று. நீயே எண்ணி அறிவாய்! எனும் அரும் பொருளமைந்த

"[1] அடுநை ஆயினும் விடுநை ஆயினும்
நீஅளந்து அறிதிநின் [2] புரைமை வார்கோல்
செறிஅரிச் சிலம்பிற் குறுந்தொடி மகளிர்
[3] பொலஞ்செய் [4] கழங்கில் [5] தெற்றி ஆடும்
தண்ணான் பொருநை வெண்மணல் சிதையக்
கருங்கைக் கொல்லன் அரஞ்செய் அவ்வாய்
[6] நெடுங்கை [7] நவியம் பாய்தலின் நிலையழித்து
[8] வீகமழ் நெடுஞ்சினை புலம்பக் [9] காவுதொறும்
கடிமரம் தடியும் ஓசை தன்னூர்
நெடுமதில் வரைப்பில் கடிமனை [10] இயம்ப

[1] கொல்வாயாயினும். [2] உயர்ச்சி. [3] பொன்னான் செய்யப்பட்ட. [4] கழற்சிக்காய். [5] வேதிகை. [6] நெடியகை. (பிடி) [7] கோடாலி. [8] பூநாறும். [9] சோலை. [10] ஒலிப்ப.

> ஆங்குஇனிது இருந்த வேந்தனொடு ஈங்குநின்
> சிலைத்தார் முரசங் கறங்க
> மலைத்தனை என்பது நாணுத்தகவு உடைத்தே" (புறம். 36)

என்னும் செய்யுளைக் கூறினர். இதனைக் கேட்ட வண்டமிழ் வளவன் போரொழிந்து மீண்டான்.

3. நலங்கிள்ளி

ஒப்புபர்வு அற்ற காவலனும் பாவலனும் விளங்கிய இவ்வேந்தன் நெடுங்கிள்ளி என்னும் அரசன்மேற் கொண்ட அளப்பருஞ் சிற்றத்தால் அவன்றன் தலைநகராய உறையூரை முற்றுகையிட்டிருந்தான். இதனைக் கண்ட தாவா நல்லிசைத் தண்டமிழ்ப் புலவராய கோவூர் கிழார் இருவரையும் நோக்கி,

'பெரிய பனையின் வெள்ளிய தோட்டைச் சூடின சேரவேந்தன் அல்லன். கரிய கொம்பினை உடைய வேப்பமாலையை அணிந்த பாண்டியன் அல்லன். நினது கண்ணியும் நின்னுடன் பொருவோன் கண்ணியும் ஆத்தியாற் கட்டப்பெற்றன. அதனால் நும்முள் ஒருவர் தோற்பினும் தோற்பது நும் குடியன்றோ? இருவர் வெல்லுதல் இயற்கையும் அன்று. ஆகையால் நுமது செய்கை நும் குடிக்குத் தக்கதன்று. இத்தகைய நும் மாறுபாடு நும்மைப்போலும் வேந்தர்க்கு உடம்பு பூரிக்கும் உவகையைச் செய்யும். ஆகவே எவ்வாற்றானும் இதைத் தவிர்தலே நமக்குத் தக்கது' எனும் பொருளமைந்த

> "இரும்பனை வெண்தோடு [1] மலைந்தோன் அல்லன்
> கருஞ்சினை வேம்பின் [2] தெரியலோன் அல்லன்
> நின்ன [3] கண்ணியும் [4] ஆர்மிடைந்து அன்றே
>
> நின்னொடு
> பொருவோன் கண்ணியும் [4] ஆர்மிடைந்து அன்றே
> ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே
> இருவீர் [5] வேறல் இயற்கையும் அன்றே
>
> அதனால்,
> குடிப்பொருள் அன்றுநும் செய்தி கொடித்தேர்
> நும்மோ ரன்ன வேந்தர்க்கு
> [6] மெய்ம்மலி உவகை செய்யும்இவ் [7] இகலே" (புறம். 45)

---

[1] சூடினோன். [2] மாலையோன். [3] மாலையும். [4] ஆத்தியால் கட்டப்பட்டது. [5] வெல்லுதல். [6] உடம்பு பூரிக்கும். [7] மாறுபாடே.

எனுஞ் செய்யுளைக் கூறினர். பன்னயங் கெழுமிய பாவின் விழுப்பம் அறிந்த வேந்தன் தன் பகைவனெடு சந்துசெய்துகொண்டு திரும்பினன்.

இன்னும் அமருடற்றி வெற்றி பெறலே பெறலரும் யாக்கைக்கு உறு பொருள் என்று எண்ணி அமர் பல உடற்றிய இவ் அரசன் உறையூர் முதுகண்ணன் சாத்தனுரெனும் அருந்தமிழ்ப் புலவர் கூறிய 'மக்கட் பிறப்பில், உலகத்துப் பயனிலாப் பிறப்புகள் சிறப்பிலாத குருடும், கூனும், குறளும், செவிடும், ஊமும், மாவும், தசைத்திரளும், மருளும் உளப்பட எட்டெனை ஆன்றோரால் முன்னரே கூறப்பட்டுளது. நிற்க.

நினது பகைவர் செம்பொறியை யுடைய காட்டுக் கோழிச் சேவல் கூவித் தினைப்புனங் காப்போரைத் துயில் எழுப்புவதாகிய காட்டின்கணுளர். நீயோ! கழையாகப் பறித்தெறியப்பட்ட கரும்பு வாவியிலுள்ள தாமரைப்பூ சிதற விழுவதால் அது கூத்தர் ஆடுகளத்தை ஒக்கும் உண்ணாட்டினை உடையாய். ஆதலால், இத்தகைய நினது பெருஞ் செல்வம் அறம் பொருள் இன்பம் எனும் மூன்றையும் செய்தற் குதவும் தகையது. இதனை நீ இதுவரை செய்யாதிருத்தல் நின்னைப் பாதுகாவாமையே எனும் அருங் கருத்தமைந்த

"சிறப்பில் [1] சிதடும் உறுப்பில் [2] பிண்டமும்
கூனும் குறளும் ஊமுஞ் செவிடும்
[3] மாவும் [4] மருளும் உளப்பட வாழ்நர்க்கு
எண்பேர் எச்சம் என்றுஇவை எல்லாம்
பேதமை அல்லது ஊதியம் இல்லென
முன்னும் அறிந்தோர் கூறினர் இன்னும்
அதன்திறம் அத்தையான் உரைக்க வந்தது
வட்ட வரிய செம்பொறிச் சேவல்
[5] ஏனல் காப்போர் உணர்த்திய கூஉம்
கானத் தோர்நின் [6] தெவ்வர் நீயே
புறஞ்சிறை மாக்கட்கு அறங்குறித்து அகத்தோர்
புயத்துஎறி கரும்பின் விடுகழை தாமரைப்
பூம்போது சிதைய வீழ்ந்தெனக் கூத்தர்

---

[1] குருடு. [2] தசைத்திரள். [3] விலங்குவடிவாகப் பிறப்பது. [4] அறிவின்றி மயங்கியிருப்பது. [5] தினைப்புனம். [6] பகைவர்.

ஆடுகளங் [7] கடுக்கும் அகநாட் டையே

அதனால்,

அறமும் பொருளும் இன்பமு மூன்றும்
[8] ஆற்றும் பெருமநின் செல்வம்
ஆற்று மைநிற் போற்று மையே'' (புறம். 28)

எனும் அரும்பொருளொடு சொல்வளம் பழனிய அகவலைக் கேட்டு அமருடற்றலை விட்டு அறஞ்செய்வதிலேயே கண்ணுங் கருத்துமா யிருந்தான்.

4. நெடுங்கிள்ளி

நற்றமிழ் வேந்தனாகிய நலங்கிள்ளியுழைநின்று உறையூர் நண்ணிய இளந்தத்தன் எனும் நல்லிசைப் புலவரை இவ்வேந்தன் தன் பகைவனிடம் இருந்து வந்த ஒற்றனென்றெண்ணிக் கொல்வான் புக்கனன். இதனைக்கண்ட கோவூர் கிழார் எனும் புலவர் பெருமான் அரசனைத் தீச்செயலினின்று நீக்கவும் புலவரை உய்விக்கவும் உன்னி, 'பழுமரம் தேரும் பறவைபோல் அரியவழி பலவற்றையும் நெடிய என்றெண்ணாது கடந்து, திருந்தாத நாவால் தாம் வல்லபடி பாடி ஆண்டுப் பெற்ற பரிசிலான் மகிழ்ந்து பொருளை ஓம்பாது சுற்றத்தை ஊட்டித் தாமும் உண்டு, தம்மைப் புரப்போராற் பெறும் சிறப்பு ஏதுவாக இப்பரிசிலான் (புலவன்) வாழும் வாழ்க்கை உயர்ந்த புகழையுடைய நிலம் ஆளும் திருப்பொருந்திய நும்மை ஒக்கும் தலைமையும் உடைத்து. அன்றியும் கல்வி முகத்தால் தம்மொடு மலைந்தார் நாணத் தமது கல்வியான் வென்று, தலையெடுத்து நடந்து, அவ்விடத்து இனிதாக ஒழுகுவதல்லது பிறர்க்குக் கொடுமை செய்யவும் இவ்வாழ்க்கை அறிந்ததோ இல்லை' எனும் பொருள் அமைந்த பின்வரும் செய்யுளைக் கூறினர்.

''வள்ளியோர்ப் [1] படர்ந்து புள்ளிற் போகி
நெடிய என்னாது [2] சுரம்பல கடந்து
வடியா நாவின் வல்லாங்கு பாடிப்
பெற்றது மகிழ்ந்து சுற்றம் [3] அருத்தி
ஓம்பாது உண்டு கூம்பாது வீசி
வரிசைக்கு வருந்தும்இப் பரிசில் வாழ்க்கை
பிறர்க்குத் தீதறிந்து அன்றோ இன்றே,

திறப்பட,

[7] ஒக்கும். [8] செய்வதற் குதவும்.

[1] நினைத்து. [2] காடுகள்பல. [3] ஊட்டி.

[4] நண்ணார் நாண அண்ணாந்து ஏகி
ஆங்கினிது ஒழுகின் அல்லது ஓங்குபுகழ்
மண்ணாள் செல்வம் எய்திய
நும்மோர் அன்ன [5] செம்மலும் உடைத்தே" (புறம். 47.)

இச்செய்யுளின் செம்பொருளைச் சீர்தூக்கித் தெளிந்த தேர்வேந்தன் புலவரைக் கொல்லாது விட்டுவிட்டான்.

5. சேரமான் அந்துவஞ் சேரலிரும்பொறை

ஒருமுறை சோழன் முடித்தலைக் கோப்பெருநற்கிள்ளி எனும் அரசனுடைய அரசுவா மதங்கொண்டு பாகரையும் மதியாது அரசனோடு அவன்றன் பெரும்பகைவனுய இவ்வேந்தன் நாட்டினூடு சென்றது. பகைவன் யானையொடு தன்னாட்டுள் வந்ததைக் கண்ட காவலன் கலங்கிச் சினந்தனன். சினந்த அமயத்தில் இவனுடன் இருந்த புலன் அழுக்கற்ற அந்தணாளராய உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் எனும் புலவர் பெருந்தகை யிவனை நோக்கி, 'புலியினது தோலாற் செய்யப்பட்ட கவசம் சிதைய எய்த அம்புகள் போழப்பட்ட பரந்துயர்ந்த மார்பினையுடைய கூற்றம் போன்ற களிற்றின் மேலோனே, யாரென்று வினவுவாய் ஆயின், வயலிடத்து மயிலுகுத்த பீலியை உழவர் நெற்சூட்டுடனே திரட்டும், கொழுவிய மீனையும் விளைந்த கள்ளையுமுடைய நீராகிய வேலியை உடைய (சோழ) நாட்டை உடையோன். கடலின் கண்ணே இயங்கும் ஒத்த இக்களிறு சுறவினத்தை ஒத்த மறவர் சூழத் தன்னை மருவிய பாகரை அறியாது மதம்பட்டது. (இதனாலேயே அவனிங்கு வந்தனன் அன்றிப் போர் செய்ய வந்தானல்லன்.) ஆகையால் இவன் நோயின்றித் திரும்புவானாக' எனுங் கருத்தமைந்த செய்யுளைக் கூறினர்.

"இவன்யார் என்குவை ஆயின் இவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
[1] மறலி அன்ன களிற்றுமிசை யோனே
[2] களிறே,
முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்

[4] மலைந்தோர். [5] தலைமை.
[1] யமன். [2] யானை.

சுறவினத்து அன்ன வாளோர் மொய்ப்ப
[3] மரிஇயோர் அறியாது [4] மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதில் அம்ம
பழன [5] மஞ்ஞை உகுத்த பீலி
கழனி உழவர் [6] சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடு [7] கிழ வோனே" (புறம். 13)

இச்செய்யுணுதலிய செம்பொருளின் விழுப்பம் அறிந்த அரசன் தன்சினம் தணிந்து வாளாவிருந்தனன்.

6. இளங்குமணன்

இவ்வேந்தன் தன் மூத்தோனாய குமணவள்ளல்மேற் கொண்ட கோபத்தால் அவன்றனை அருங்கானகத்து அலையுமாறு கலைத்து விட்டான். அருங்கானகத்து அமர்ந்திருந்த அரசனிடம் பைந்தமிழ்ப் புலவராய பெருந்தலைச் சாத்தனார் சென்று 'இன்மை தீர்க்குங் குடிப்பிறந்தோயே! பசியால் வாடும் தாயிடம் பால்காணாது பாலன் தாய்முகம் நோக்க, தாய் என்முகம் நோக்க, நான் நின்முகம் நோக்கி வந்தேன். ஆதலால் பரிசில் பெறாது என் மனைக்குத் திரும்பேன்' என்றிரந்தார்.

இலனென்னும் எவ்வம் உரைக்கலாற்றா இதயம் உடைய வள்ளல் உடனே "அருங்கவிப் புலவோய் அந்த நாள் வந்தாயிலை, அருங்கான் மேவிய இந்நாள் வந்தாய்; ஆயினும் தலைதனைக் கொடுபோய் தம்பிகைக் கொடுத்து விலைதனை மீட்டுன் வறுமை நோய் களைக எனக் கூறி வாளை அவர் கைக்கொடுத்தான். வாளைக் கைப்பற்றியபாவேந்தன் பார் வேந்தரிருவரையும் ஒற்றுமைப்படுத்த எண்ணி, குமணனை அங்கிருக்க எனப்பணித்து இளங்குமணனிடம் ஏகி வாளை அவனுக்குக் காட்டி,

'தாளின்கண் தாழ்ந்த ஓசையை உடைய மணிகள் ஒன்றற்கொன்று மாறி ஒலிக்கும் புகர் நுதலை உடைய யானையைப் பாவலர்க்குக் கொடுக்கும் வயமான் தோன்றலை, நின் தமயனைக் கண்டு பாடிநின்றேன். பரிசிலன் வாடினனாகப் பெயர்தல் நாடிழந்ததனினும் நனி இன்னாது என நினைந்து தன்னிற் சிறந்தது பிறிதின்மையின் தலையை வெட்டும்படி வாளைத் தந்தான். (வாளைக்கொண்டு வள்ளலின் தலையை வெட்டி உன்னிடம் அளித்துப் பரிசில் பெறின், தமை

[3] மருவிய. [4] மதம். [5] மயில். [6] நெற்சூட்டு. [7] உடையோன்.

யனைக் கொன்ற கொடுங்கோலன் எனும் இழிவு உனக்கு எய்தும் ஆதலான், உனக்கு அவ்விழிவு எய்தாமல் உன்னை அவனோடு ஒற்றுமைப்படுத்தி அளவில் புகழை உண்டாக்கலாம் என்று உவகையோடு வந்தேன்' எனும் பொருள் அமைந்த

"மன்னா உலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறீஇத் தாமாய்ந் தனரே
துன்னருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்
இன்மையின் இரப்போர்க்கு [1] ஈஇ யாமையில்
தொன்மை மாக்களில் தொடர்புஅறி யலரே
[2] தாடாழ் படுமணி [3] இரட்டும் [4] பூநுதல்
ஆடியல் யானை பாடுநர்க்கு [5] அருகாக்
கேடில் நல்லிசை வயமான் தோன்றலைப்
பாடி நின்றெனனாகக் கொன்னே
பாடுபெறு பரிசிலன் வாடினன் பெயர்தலென்
நாடிழந் ததனினும் நனியின் னாதென
வாள்தந் தனனே தலையெனக் கீயத்
தன்னிற் சிறந்தது பிறிதொன்று இன்மையின்
ஆடுமலி உவகையொடு வருவல்
ஓடாப் [6] பூட்கைநின் கிழமையோற் கண்டே" (புறம். 165)

எனும் செய்யுளைக் கூறினர்.

கல்லும் கரைந்துருகும் கனிந்த மொழிகளைக் கேட்ட இளங்குமணன் இதயம் உடன்பிறப்பெனும் உணர்வால் நெகிழ்ந்தது. 'உடற்பிறப்பிலா உடம்புபாழ்'; 'எம்பியை ஈங்குப் பெற்றேன் என்னெனக்கரியது' முதலிய வாக்கியங்களை எண்ணினான். தமிழ்ப் புலவர்க்குத் தலையையும் கொடுக்க இயைந்த தலையாய வள்ளலாம் தன் தமையனுக்குத் தான் செய்த தீங்குகளை எண்ணி எண்ணித் துக்கசாகரத்து மூழ்கினான். 'அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர், புன்கணீர் பூசல் தரும்' என்பதற்கு இலக்கியமாக இலங்கினான். பின்னர், ஒருவாறு தேறி நால்வகைப் படையும் நகரமாந்தரும் சூழ நற்றமிழ்ப் புலவரொடு குமணன் வதிந்த கானகம் சென்று அவன்றன் அடிபணிந்து நாட்டிற்கு அழைத்து வந்து அரசாளுரிமையை அன்பொடு அளித்தான்.

---

[1] கொடாமையில். [2] தாளின்கண் தாழ்ந்த. [3] ஒலிக்கும். [4] புகர்நுதல். [5] கொடுக்கும். [6] மேற்கோள்.

7. சேரன் செங்குட்டுவன்

கற்பரசியாம் கண்ணகிக்குக் கல்லெடுக்க வடதிசைச் சென்ற காலத்துக் கடுஞ் சினத்தொடு வந்து எதிர்த்த கனகவிசயரைச் சிறைப்படுத்திய இக்காவலன், அவர்களை மற்றைத் தமிழ் அரசர்களுக்கும் காட்டி வருமாறு நீலன் முதலிய ஒற்றர்களிடம் கட்டளையிட்டான். அங்ஙனம் காட்டச் சென்ற ஒற்றர்கள் மீண்டு வந்து, பாண்டியன், "கொல்லாக் கோலத்து உயிர் உய்ந்தோரை வெல் போர்க்கோடல் வெற்றம் அன்று" எனவும், சோழன், "தவப் பெருங் கோலம் கொண்டோர்தம்மேல் கொதி அழற்சீற்றம் கொண்டோன் கொற்றம் புதுவது அன்று" எனவும் மொழிந்தனர் எனக் கூறினர்.

கூறிடலும், தாமரைச் செங்கண் தழல் நிறம் கொள்ள நக்க இவ்வேந்தனை 'மன்னவர் மன்னனே வாழ்க, நின் கொற்றம் வாழ்க' என அருகிருந்த அருமறை தேர் அந்தணாளராய மாடலன் வாழ்த்தி,

> "அரைச ரேறே அமைக நின் [1] சீற்றம்
> ....
> இகழாது என்சொற் கேட்டல் வேண்டும்"
> (சிலப்பதிகாரம், 28. 124-128.)

என்று கூறி, பின்னர், காலத்தை அரசன் வீணே கழித்தமையை,

> "[2] வையங் காவல் பூண்டநின் நல்யாண்டு
> [3] ஐயைந்து இரட்டி சென்றதற் பின்னும்
> அறக்கள வேள்வி செய்யாது யாங்கணும்
> மறக்கள வேள்வி செய்வோ யாயினை"
> (சிலப்பதிகாரம், 28. 129-132)

என்பதாலும், யாக்கை நிலையாமையை,

> "கடற்கடம் பெறிந்த [4] காவலன் முதலா
> ....
> [5] சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து
> மதுக்கொள் வேள்வி வேட்டோ னீரு
> [6] மீக்கூற் றாளர் யாவரும் இன்மையின்
> யாக்கை நில்லாது". (சிலப். 28. 135-150)

என்பதாலும், செல்வ நிலையாமையை,

---

1 கோபம். 2 பூமி. 3 இருபத்தைந்து. 4 அரசன். 5 அமராபதியிற் பூதங்கள். 6 மேற்பட்ட வார்த்தையை யுடையவர்கள்.

"மல்லன்மா ஞாலத்து வாழ்வோர் மருங்கில்
செல்வம் நில்லாது என்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரில்
கண்டனை அல்லையோ? காவல் வேந்தே"

(சிலப். 28. 151-154)

என்பதாலும், இளமை நிலையாமையை,

"இளமை நில்லாது என்பதை எடுத்தீங்கு
உணர்வுடை மாக்கள் உரைக்க வேண்டா"

(சிலப். 28. 155-156)

என்பதாலும், செய்வினை வழித்தாய் உயிர் செல்லும் என்பதை,

"[7] திருஞெமிர் [8] அகலத்துச் செங்கோல் வேந்தே!
[9] விண்ணோ ருருவின் எய்திய நல்லுயிர்
[10] மண்ணோர் உருவின் மறிக்கினும் மறிக்கும்
மக்கள் யாக்கை பூண்ட மன்னுயிர்
மிக்கோய் விலங்கின் எய்தினும் எய்தும்
விலங்கின் யாக்கை விளங்கிய இன்னுயிர்
கலங்குஅஞர் நரகரைக் காணினும் காணும்
ஆடுங் கூத்தர் போலாருயிர் ஒருவழிக்
கூடிய கோலத்து ஒருங்குநின் றியலாது
செய்வினை வழித்தாய் உயிர்செலு மென்பது
பொய்யில் காட்சியோர் [11] பொருளுரை"

(சிலப். 28. 157-168)

என்பதாலும் அரசனுக்கு நன்கு விளக்கிப் பின்னும் அவனை நோக்கி,

"[12] புலவரை யிறந்தோய்! அரும்பொருட் பரிசிலேன்
அல்லேன் யானும், மலர்தலை யுலகத்துப்
பெரும்பேர் யாக்கை பெற்றநின் நல்லுயிர்
(பிற) உயிர்போகு [13] பொதுநெறிப் போதல் பெறேன்"

(சிலப். 28. 171-174)

---

7 இலக்குமி பொருந்திய. 8 மார்பு. 9 தேவர். 10 மனிதர். 11 மெய்யுரை. 12 அறிவெல்லை கடந்தோய். 13 பிறந் திறப்போரெல்லாம் போதும் வழி.

ஆதலால் நீ,

"[14] வானவர் [14] போற்றும் [14] வழிநினக் களிக்கும்
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பார்
அருமறை மருங்கின் அரசற்கு ஓங்கிய
[15] பெருநல் வேள்வி தான்செயல் வேண்டும்"
(சிலப். 28. 175–178)

அன்றியும், நாளைச் செய்குவேன் என்பாயாயின்,

"................................இன்றே
[16] கேள்வி [16] நல்லுயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை" (சிலப். 28. 179–182)

ஆதலின், [17] வேள்விக்கிழத்தி இவளொடுங் கூடி இன்றே செய்வாயாக எனக் கூறினான். உடனே கொற்றவன் கோபந்தணிந்து அந்தணன் சொற்படி அருமறைவேள்வியினைச் செய்தனன்.

இன்னணம் செங்குட்டுவனது சீற்றத்தைத் தணித்த செந்தண்மை பூண்ட அந்தணனாய மாடலன் பண்டைப் பாவலர் வரிசையில் வைத்தெண்ணப் படாதவனாயினும், அரசனின் ஆத்திரத்தை அகற்றுவான் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை முதலியவற்றை உதாரண முகந்தான் எடுத்துக்காட்டி விளக்கினானாதலாலும், மீக்கூற்றாளர் பலரையும் அவர்களின் வீரச் செயல்களையும் எடுத்துக் கூறினானாதலாலும், "மாதவி மடந்தை கானற் பாணி கனக விசயர் தம் முடித்தலை நெரித்தது" எனச் சிலப்பதிகாரக் கதையையே சுருக்கிக் கூறிய சொல்வன்மையினானாதலாலும், பெரும்புலவராகிய இளங்கோ அடிகளால் "குறையாக் கேள்வியன்", "நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை மாமறை முதல்வன்" எனப் பலவாறு புகழப்பெற்றானாதலாலும், இன்னும், குமரியொடு வடவிமயத் தொருமொழி வைத்துலகாண்ட செங்குட்டுவன் இவன் சொற்படி நடந்தானாதலாலும், இவன் நல்லிசைப் புலமையும், நுண்மாண் நுழைபுலமும் நாவன்மையும் உடையான் என்பது மலையிலக்கே. நிற்க.

ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோராய அருந்தமிழ் அறிஞர், மேலெடுத்துக் கூறியவாறு அரசர்கள் வெகுளிவாய்ப் பட்ட அமயங்களில் மாத்திரமன்றிப் பிற அமயங்களிலும்

---

14 மோட்சமார்க்கம். 15 இராசசூயம். 16 கேள்வி அளவான நல்ல உயிர். 17 வேண்மாள்.

"அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தைதாய் என்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்குநீர் வேலி
மொழிநின்று கேட்டன் முறை"
(பு. பொ. வெண்பமாலை, 9, 33.)

என்றிவ்வாறு நல்லறிவுச் சுடர் கொளுத்தி வந்தனர்.

கடையெழுவள்ளல்களில் ஒருவனும் கானமஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கியவனுமாகிய பேகன், தன் காதலியாகிய கண்ணகியைப் பிரிந்திருந்த காலத்துத் தன்னை நோக்கி வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலர்,

"கைவள் ளீகைக் கடுமான் பேக
யார்கொல் அளியள் தானே [1] நெருநல்
[2] சுரனுழந்து வருந்திய [3] ஒக்கல் பசித்தெனக்
[5] குணில்பாய் முரசின் இரங்கும் அருவி
நளிஇருஞ் சிலம்பில் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னு நின்மலையும் பாட இன்னாது
[6] இகுத்த கண்ணீர் நிறுத்தல் செல்லாள்
முலையகம் நனைப்ப விம்மிக்
[7] குழலினை [7] வதுபோல் அழுதனள் பெரிதே"
(புறம். 143.)

எனவும், கரணம் அமைந்த காசறு செய்யுட் பரணர்,

"இஃதியாம் இரந்த பரிசில்அஃது இருளில்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னா துறைவி [8] அரும்படர் [9] களைமே" (புறம். 143)

எனவும், மறுவில் வாய்மொழி அரசில் கிழார்,

"நன்னாடு பாட என்னை நயந்து
பரிசில் நல்குவை ஆயின் [10] குரிசில்நீ
நல்கா மையின் [11] நைவரச் [12] சாஅய்
அருந்துயர் உழக்குநின் [13] திருந்திழை [14] அரிவை
ஒலிமென் கூந்தற் கமழ்புகை கொளீஇத்

---

[1] நேற்று. [2] காட்டில் நடந்து. [3] சுற்றம். [5] குறுந்தடி. [6] சொரியப்பட்ட. [7] குழல் இரங்கி ஒலிப்பதுபோல். [8] பெரிய துன்பத்தை. [9] தீர்ப்பாயாக. [10] தலைவனே நீ. [11] கண்டாரிரங்க. [12] மெலிந்து. [13] திருந்திய ஆபரணங்களையுடைய. [14] பெண்.

தண்கமழ் [15] கோதை புனைய
வண்பரி நெடுந்தேர் பூண்க [16] நின்மாவே" (புறம். 146.)

எனவும், திருந்திய நாவுடைப் பெருங்குன்றூர் கிழார்,

"நெருநல் [17] ஒருசிறைப் [18] புலம்புகொண்டு உறையும்
அரிமதர் மழைக்கண் [19] அம்மா அரிவை
நெய்யொடு துறந்த [20] மையிருங் கூந்தல்
புதுமலர் [21] கஞல இன்று பெயரின்
அதுமன்எம் பரிசில் ஆவியர் [22] கோவே" (புறம். 147.)

எனவும் கூறியவற்றைக் கேட்டுத் தன் காதலியைத் தழுவிக் கொண்டமையும்; சேரமான் ஒள்வாட் கோப்பெருஞ் சேரலிரும்பொறையை நோக்கி நரிவெரூஉத் தலையாரெனும் நல்லிசைப் புலவர்,

"அருளும் அன்பும் நீக்கி நீங்கா
[1] நிரயங் கொள்பவரொ டொன்றாது காவல்
[2] குழவி கொள்பவரின் [3] ஓம்புமதி"

எனவும், பாண்டியன் நெடுஞ்செழியனை நோக்கிக் குடபுலவியனார்,

"அடுபோர்ச் [4] செழிய இகழாது வல்லே
நிலனெளி மருங்கின் நீர்நிலை பெருகத்
[5] தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளா தோர்இவண் தள்ளா தோரே"

எனவும், பாண்டியன் கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதியை நோக்கி, இரும்பிடர்த் தலையார் எனும் பெரும்புலவர்,

"நிலம் பெயரினும் நின்சொற் பெயரல்"

எனவும், பாண்டியன் தலையலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை நோக்கி, நாநலம் வாய்ந்த நல்லியற் கவிஞராய மாங்குடி கிழார்,

"வாளின் வாழ்நர் [6] தாள்வலம் வாழ்த்த
இரவன் மாக்க ளீகை [7] நுவல
ஒண்டொடி மகளிர் [8] பொலங்கலத்து ஏந்திய

---

[15] மாலை. [16] நின்னுடைய குதிரைகள். [17] ஒருபக்கத்து. [18] தனிமை கொண்டு. [19] அழகிய மாமை நிறம். [20] மைபோன்ற கரிய. [21] நெருங்க. [22] அரசே.

1 நரகம். 2. குழந்தை. 3 பாதுகாக்குதி. 4 பாண்டியனே. 5 தளைத்தோர் + தளையாதவர். 6 முயற்சி வலியை. 7 சொல்ல. 8 பொற்கலத்தில்.

110

தண்கமழ் [9] தேறன் மடுப்ப மகிழ்சிறந்து
ஆங்கினிது ஒழுகுமதி [10] பெரும ஆங்கது
வல்லுநர் வாழ்ந்தோ ரென்ப."

எனவும், சோழன் நெய்தலங்கானல் இளஞ்சேட் சென்னியை நோக்கி, திருந்திய செந்நாவிருங்கலைப் புலவராய ஊன்பொதி பசுங்குடையார்,

"நீ [11] மெய் கண்ட தீமை காணின்
ஒப்பநாடி அத்தக [12] ஒறுத்தி
வந்தடிபொருந்தி [13] முந்தை நிற்பிற்
தண்டமும் [14] தணிதி நீ"

எனவும், இலவந்திகைப் பள்ளித் துஞ்சிய நன்மாறனை நோக்கி மருதனிள நாகனாரெனும் அரும்புலவர்,

"[15] களிறும் தேரும் [16] மாவும் மறவரும்என
நான்குடன் [17] மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் [18] கொற்றம்
அதனால் நமரெனக் கோல் [19] கோடாது
பிறரெனக் குணங் [20] கொல்லாது
ஆண்மையும் சாயலும் வண்மையும் மூன்றும்
உடையை யாகி யில்லோர் [21] கையற
நீநீடு வாழிய நெடுந்தகை"

எனவும், சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கித் தெள்ளூற்ற தீந்தமிழ்ப்புலவராய வெள்ளைக்குடிநாகனார்,

"[22] கண்பொர விளங்குநின் விண்பொரு வியன்குடை
வெயில்மறைக் கொண்டன்றோ அன்றே வருந்திய
குடிமறைப் பதுவே கூர்வேல் வளவ
....
வருபடை [23] தாங்கிப் பெயர்புறத் தார்த்துப்
பொருபடை [24] தரூஉங் [25] கொற்றமும் [26] உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே
மாரி பொய்ப்பினும் [27] வாரி குன்றினும்

---

9 தேன். 10 பெரியவனே. 11 உண்மையாகக் கண்ட. 12 தண்டி. 13 முன்னே. 14 தணி. 15 யானை. 16 குதிரை. 17 மாட்சிமைப்பட்ட தாயினும். 18 வெற்றி. 19 வளையாது. 20 கெடாது. 21 இல்லையாக. 22 கண்ணொளியோடுமாறுபட. 23 எதிர்த்து. 24 தருகின்ற. 25 வெற்றியும். 26 கலப்பை. 27 விளைவு.

இயற்கை அல்லன செயற்கையில் தோன்றினும்
காவலர்ப் பழிக்கும்இக் கண்ணகன் [28] ஞாலம்
அதுநன்கு அறிந்தனை யாயின் நீயும்
[29] நொதும லாளர் பொதுமொழி கொள்ளாது
[30] பகடு [31] புறந் தருநர் பாரம் ஓம்பிக்
குடிபுறந் தருகுவை ஆயினின்
[32] அடிபுறந் தருகுவர் [33] அடங்கா தோரே"

எனவும், சோழன் நலங்கிள்ளியை நோக்கி முத்தமிழ்த்துறையின் முற்றப்போகிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார்,

"கொடியோர்த் [34] தெறுதலும் செவ்வியோர்க்கு அளித்தலும்
[35] ஒடியா முறையின் [36] மடிவிலை ஆகி
நல்லதன் நலனும் தீயதன் தீமையும்
இல்லை யென்போர்க்கு [37] இனனா கிலியர்"

எனவும், கூறியனவும் மேற்கூறியதை வலியுறுத்துவனவாம்.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் எனும் வேந்தன் பகைவரொடு பொருதச் சென்றபொழுது, என்பகைவரைப் போரில் தேருடன் புறங்கொடுத்தோடச் செய்யேனாயின்,

"அறனிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தே னாகுக"

எனவும், தலையாலங்கானகத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், என்னை யிழித்துக் கூறினாரைப் போரில் தாக்கிக் கைப்பற்றேனாயின்,

"என்னிழல் வாழ்நர் செல்நிழல் காணாது
கொடியன்எம் இறையெனக் கண்ணீர்ப் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலே னாகுக"

எனவும் கூறிய வஞ்சினங்களால், பண்டைத் தமிழ்க் காவலர் முறை திரிந்து கொடுங்கோல் நடத்துவதையும், குடிபழி தூற்றுவதையும் எத்துணை இழிந்தனவாக எண்ணியிருந்தனர் என்பது இனிது விளங்கும்.

---

28 உலகம். 29 குறளை கூறுவார். 30 எர். 31 பாதுகாப்பார். 32 பாதம். 33 பகைவர். 34 தண்டித்தலும். 35 இடையறுத. 36 சோம்பலில்லாதவன். 37 இனமாகாதொழிவாயாக.

இத்தகைய எண்ணமுடையாராய் இருந்த இகல் வேந்தர், தம்மை அத்தகைய செயல்களினின்றும் நீக்குதற்கு முத்தமிழ்த் துறையின் முற்றப் போகிய புலவர்கள் கூறிய புன்னுனிப் பனியில் மன்னுமாமலை உருத்துன்னி நின்று ஒளிர்தரல் போலச் சிற்றள வினவாகிய சொற்றொடர்களில் சிறந்தமைந்தனவாகிய பெரும் பொருள் தோன்றத் திகழும் பொன்மொழிகளை எவ்வாறு போற்றி யிருப்பர்?

இன்னும், இயற்றமிழிலக்கண முதனூலாகிய தொல்காப்பியப் புறத்திணையியலில் கூறப்பெற்ற செவியறிவுறூஉ, வாயுறை வாழ்த்து முதலிய துறைகளும் பாவலர் காவலர்க்கு நல்லறிவு கொளுத்துதலைப் பற்றியனவே. இன்னணம் இருங்கலைவாணர் இகல்வேந்தர்க்கு அறிவு கொளுத்தலைத் தன்னகத்தடக்கிய இலக்கணநூல் தேங் கமழ் கஞ்சத் திசைமுகன் தந்த பொங்கு நீருடுத்த விம்மலர்தலை யுலகத்துள்ள பிறமொழிகள் ஒன்றிலேனும் உளதாக அறியப்பட் டிலதாயின், என்னே! எம் தாய் மொழியாம் தமிழ் மொழியின் தனிப் பெருமை. இஃதொன்றே கடவுளரும் காதல் கொள்ளும் இதன் கழிபெருஞ் சிறப்பிற்குக் காட்டாகாதா?

"நெல்லும் உயிரன்று நீரும் உயிரன்று
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்"

"மாதவர் நோன்பும் மடவார் கற்பும்
காவலன் காவல் இன்றெனில் இன்று"

என்பவற்றை நன்கறிந்த நம் தமிழ்ப் புலவர்கள், அரசர்களுக் கருகிருந்து அவர்களை நல்வழிப் படுத்துதலே நாட்டிற்குச் செயும் நன்னலமெனநினைத் தவர்தம்மை நல்வழிப் படுத்தினமையாலன்றோ நம் பண்டைத் தமிழரின் தனிப்பெருமை யின்றும் பிறங்கி யெமக் கும் பெருமிதத்தை அளிக்கின்றது?

முற்றும்.

113

திருவாய்மொழி

அ. சுந்தரராஜ ஐயங்கார் அவர்கள், பி. ஏ. எழுதியது

I

பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் பக்திவெள்ளம் பெருகித் தமிழ்நாடெங்கும் இடங்கொண்டு புதியதொரு கிளர்ச்சியை எழுப்பிப் பெருவாழ்வு அளித்தது. அக்காலம் பக்தரும் மூக்தரும் இறைவனது கீர்த்திவெள்ளத்தில் மூழ்கிக் காதல்மையலேறி ஆனந்தமேலீட்டினாலே பலபடியாகப் பாடியும் ஆடியும் எங்கும் பரந்தனர். இத்தகைய பூரணமான வாழ்க்கைநலத்தை ஆதாரமாகக் கொண்ட கலைவளர்ச்சிக்கு ஒத்த பருவத்திலேதான் ஈசுவரானுபவஜனிதமான மிகப் பலவாய தெய்வக்கவிகள், ஒலிமிக்க பாடல்கள், ஞானக்கலைகள் மதிநலஞ்சான்ற பெரியார் பலர் நாவினின்றும் மலர்ந்தன. அவைகள் அடியார்களருளிய தேவார திருவாசக மாதியனவும், ஆழ்வார்களருளிய திவ்யப் பிரபந்தங்களுமாம். இம் 'முத்தமிழ்த்துறையின் முறைபோகிய உத்தமக் கவி' ஞர்கள் நாட்டிய கற்பகமனைய இப்பரமகவிகளே 'பாலைத் தமிழர் இசைகாரர் பத்தர் பரவும்' அழியாச் செல்வங்களாக இற்றைஞான்றும் விளங்குவன.

அவற்றுள் ஆழ்வார்களருளிச் செயலாகிய 'நாலாயிர திவ்யப் பிரபந்தம்' வைணவர்களது தமிழ்வேதமாக விளங்குவது. இந்நூலின்கண்ணே சுவை நிரம்பிய பல பிரபந்தங்கள் அடங்கியுள. இவற்றின்கண்ணே வேதம், இதிஹாஸம், பாகவதாதி புராணங்கள் முதலியவற்றிற் புதைந்து கிடந்த அர்த்த சாராம்சங்கள் நிரம்பியுள்ளன. ஈசுவரனது குணங்களெல்லாம் விளங்குகின்ற இப்பனுவல்களில் அவதாரவைபவங்களும், அவற்றின் ரகசியங்களும், பத்திநெறி நின்றோர் அறியத்தகும் பல உட்கிடைகளும் அமைந்துள்ளன. மேலும் அவ்வரலாறுகளிற் சிற்சில காலங்களிலே சிலர் அடைந்த மனோநிலைமைகளை ஒப்புமையானும் வேட்கை மிகுதியானும் இவ்வாழ்வார்கள் அடைந்து தாமாயதன்மை கைகழிந்து பாடிய செவிக்கினிய பாடல்கள் பல இவற்றின்கண்ணே பயிலும். எனவே முக்கால முணர்ந்த முனிவர் வாய்மொழிகளிற் காணப்பெறும் சுவை சாராம்சங்களெல்லாம் தமிழ்மக்கள் அநுபவிக்குமாறு இப்பிரபந்தங்களிற் காணலாகும்.

இத்தகைய பிரபந்தங்களுள் மேலே சொல்லிய தன்மைகளில் சிறந்து விளங்குவது நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி. இவ்விருந்தமிழ்நூலைப் பூர்வாசிரியர்களும் பண்டைத் தமிழ்க்கவி களும் பெரிதும் விரும்பிப் போற்றி வளர்த்துவந்தனர். ஸ்ரீமந். நாதமுனிகள் முதலிய பெரியோர் இதனைத் திராவிட வேதசாக ரம் என மதித்துப் போற்றிவந்தனர். கம்பரும் தமது சடகோப ரந்தாதியிலே 'ஆயிரம் மாமறைக்கும் அலங்காரம்; அருந்தமிழ்க் குப் பாயிரம்; பனுவற்கெல்லாந் தாய்; மும்மைத் தமிழ்' என்று பலபடியாகக் கூறினர். திருவரங்கத்தமுதனாரும் இராமானுசநூற் றந்தாதியில் இந்நூலைக் குறிக்குமிடங்களில், 'தென்குருகைப்பிரான் பாட்டென்னும் வேதப் பசுந்தமிழ்', 'வாட்டமிலா வண்டமிழ் மறை' என்றிவ்விதம் சுட்டிச் செல்வர். பட்டரும், இறைநிலையும் உயிர்நிலையும் தக்க நெறியும் ஊழ்வினையும் வாழ்வினையும் ஓதும் இத்திருவாய்மொழியாகிய யாழினிசை வேதத்தியல் என்பர். இந்நூலுக்கு நல்லுரை வகுத்த சான்றோரும் இவ்வாழ்வாரைக் குறித்து, 'இவர்க்கு ஒப்புச்சொல்ல வல்லார் ஸம்ஸாரிகளிலுமில்லை; நித்திய ஸூரிகளிலுமில்லை; தம்படிதாமு மறியார்; ஸம்ஸாரிகளு மறியார்; ஸர்வேசுவரனு மறியான்' என்று பலபடியாகக் கூறுநிற் பர். முன்னிருந்த பெரியோர்களெல்லாம் இந்நூலை தெய்வநிலை யில் வைத்துப் போற்றிப் பலவாறாக வளர்த்துவந்தனர்.

II

இவ்வண்ணம் எல்லாப்படியாலும் சிறப்பெய்திய இந்நூலின் எழில்நலம் முதலியனவெல்லாம் சொல்வன்மை பொருள்நலம் என்னும் இருபகுதியினுள் அடங்கும். சொல்வன்மையாவது கவி மாண்பு. பொருள்நலமாவது பொருள் நிலையும் அதனைக்கூறும் முறைமையுமாம்.

உலகின்கண்ணே இன்கவிபாடும் உண்மைக் கவிகள் சிலரே யாவர். இந்நாவின் செல்வம் கருவிலே அமைந்ததொரு திரு. பிறவியிலேயே இத்தகைய தன்மை வாய்ந்த நல்லிசைப் புலவர் செய்யுள்களெல்லாம் சீர் தளையிட்டு அணிவகுத்த சொல்லடுக்குக ளல்ல; இவைகள் நாவினியல்பாலே பாவினியல்பு அமைந்து அநுயஸமாகத் தாமே சுரந்த பாக்கள்; வாக்கியலால் சொல் நடந்து பொருளும் அததுவாக அமைவுற்று நிற்பது. மனத்தி னலே வரைந்த அளவினும் பன்மடங்கு விஞ்சிய பொருள் மலிந்து தானே அடைந்து நிற்கும். இத்தன்மைகளோடு கவி ஞரின் இருதயம் விளங்குமாறு பாவம் மனோநிலை முதலியவற்

ஞேடு பொருந்திய ஐந்திணை நெறிகளை உற்று நோக்குவார்க்கு ஐயந்திரிபற உணர்த்தவல்ல சொல்லாற்றலைக் கொண்டு விளங்கும். சொல்லளவில் ஓதற்கெளிதாகிப் பொருளாழத்தை நோக்க உணர் தற்கரிதாகும்; எனினும், பெரியபொய்கைக்கு அணைகோலியது போன்று சொல்லாற்றலானும் அவாய்நிலையானும் பெருகிச் செல் லும் பொருட்பரப்பை வரையறுத்து நிற்கும். இச்செய்யுள்களெல் லாம் பிரதம பாவத்தில் ஓசை இன்பத்தால் வசீகரித்துப் பின்பு ஓதுந்தோறும் உணர்ச்சியுதவி அர்த்த பாவத்தை விஸ்தரித்துக் கொண்டே செல்லும். இங்ஙனே கவிஞரது உணர்ச்சியையும் மனோபாவத்தையும் ஓதுவாரது உள்ளத்தின்கண்ணே கண் கூடாக்கும்.

மேலே சொல்லிய தன்மைகளெல்லாம் புலவர் பாடல்களி னும் இவ்வாழ்வாரும் இவர் போன்ற இன்கவிபாடும் பரமகவிக ளின் பாக்களின்கண்ணே பன்மடங்கு சிறந்து நிற்கும். இயற் கைக்கவிகள் ஒருபேரியாற்றினை நிகர்க்கும்; பரமகவிகள் ஆழ்ந்து கிளர்ந்தெழும் கடலினை ஒக்கும்; சொல்லின் இனிமையும் பொருளின் விரிவும் பன்மடங்கு சிறந்து தோன்றும்; வான விலாசம் போன்று விரிகின்ற பொருட்பெற்றியானது கலக்கமற் றுத் தெளிகின்ற ஊற்றுநீர் போன்று பருகுவோரது வேட்கை யினளவுக்குத் தக்கவாறு சுரந்துகொண்டே வரும்; கற்பகவிருக்ஷம் போன்று நாடிய பொருளெலாம் நல்கும். சாதாரணக்கவிகள் பாடிய ஒரு காவியத்தில் அமைந்த சுவைமுழுவதையும் இத் தெய்வக்கவிகளது சில பாடல்களே அளிக்கும். இன்பதுன்ப மிகுதியாற்றோன்றிய சிலசொற்களில் வெளிப்படையாக் காணும் பொருளினும் அச்சொற்கள் தோன்றுவதற்கு நிலமாயிருந்த மனோபாவம் பெரிதும் விரிந்ததாகும்; அப்பாவத்தினும் பரந்து நின்றது அதற்கு மூலமாக நின்ற இன்பதுன்ப நிலைகள். இவ்வண்ணமே இவ் இன்பக்கவிகள் பழகப்பழகப் பொருள்நிலை ஆழ்ந்துகொண்டே செல்லும். இவற்றின் ரஸம் முதலியவற்றை எவ்வளவுகாலம் அநுபவித்தாலும் நுகர்ச்சி முடிவு செல்லாதபடி அப்பொழுதைக்கப்பொழுது ஆராவமுதாய் இருக்கும். இவற்றின் தன்மையை உணருந்தோறும் மேன்மேலெனக் கிளர்ந்துவரும் உணர்ச்சியுதவி நினைக்குந்தோறும் 'ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சொரிந்த'படி செல்லும்; இங்ஙனே மேன்மேலும் பெருகிய வேட்கையை விளைக்கும்.

இவ்வியல்புகளெல்லாம் முழுதும் நிரம்பிய நம்மாழ்வார் போன்ற தெய்வக்கவிஞர் பாடல்களேயே கருவிலேயே பாவின் செல்வம் அமையப்பெற்ற நல்லிசைப் புலவர்களும் காமுறுவர். காரிகைகற்றுக் கவிபாடும் புன்கவிகள் தம்மினும் எவ்வளவு இழிந்தவரோ அவ்வளவு இப்பரமகவிகள் தம்மினும் உயர்ந்திருத்தலைப் பிரத்தியக்ஷமாக உணர்ந்தவர்களாதலின் இக்கவிகளை அத்தகையினரும் ருசிப்பதற்கு ஏதுவாயிற்று. இவ்வேற்றத்திற்கு முக்கிய காரணம் தெய்வக்கவிகளின் தூய்மை எனலாம். தானும் பரிசுத்தமாகித் தன்னைச்சேர்ந்தாரையும் பரிசுத்தமாக்கும் புண்ணிய தீர்த்தங்கள் தம்மளவில் எல்லாவகையாலும் தூய்மையுற்றுத் தெளிந்து, படிகின்றவரது மனமாசு தீர்த்து மெய்ம்மயிர் சிலிர்த்து சிந்தை சொல் செயல்களை அமைவுறச் செய்கின்றன. ஈசுவரன் தீர்ந்த அடியவர் தம்மைத் திருத்திப் பணிகொள்வது போன்று இத்தெய்வமணங் கமழும் இசைமாலைகளெல்லாம் கல்விகேள்விகளின் முடிந்த பயனாய சீரிய ஒழுக்கத்தையும் அதனோடுற்ற வாய்மையின் வழித்தாய மனநலத்தையும் அளித்துத் தமக்கேயாகப் பணிகொள்ளும் இயல்பின. இதுபற்றியன்றே கம்பரும் இத்திருவாய்மொழி 'உயிருருக்கும்; புக்கு உணர்வு உருக்கும்; உடலத்தினுள்ள செயிருருக்கொண்ட நந்தீங்குருக்கும்' என்றனர். நம்மாழ்வாரும் 'தூய ஆயிரம்' என்றும், 'தீர்த்தங்களாயிரம்' என்றும் கூறியுள்ளமை ஈண்டு உணரத்தக்கது.

இப்பெருமைக்கு இன்னொரு காரணமுங் கூறலாகும். தெய்க்கவிஞர் தம்மின்கவிகளைத் தம்வல்லமை கொண்டு பாடிய தாக எஞ்ஞான்றும் கருதுவதிலர். ஈசுவரனது குணங்களேயும் புகழையும் கூறத் தம்மை அறியாதவராகவே எண்ணியிருப்பர்; ஆதலின் நாவியலாற் றம்பாடிய பாடல்களெல்லாம் அவனே தம்மை ஒரு கருவியாகக் கொண்டு பாடினன் என்றே மதிப்பர். நம்மாழ்வார் இவ்வண்ணம் பல இடங்களிற் கூறியுள்ளார். ஈசுவரன் தன்னுள்ளே புகுந்து கவிபாடியமைக்குத் தாம் செய்யும் கைம்மாறு ஒன்றும் இல்லாமையைக் கூறுமிடத்து இவர், *"ஈசுவரன் தன்புகழைத் தன்முகமாகத் தானே பாடுதலுஞ் செய்திலன்; முன்புள்ள முனிவராழ்வார்களேக் கொண்டும் பாடுவித்தானிலன்; நேர்படக்கவிசொல்லும் நீர்மை எனக்கில்லாமையினல் ஒப்பிலாத் தீவினையேனுகிய என்னையே இதற்கு ஏற்றவன் என்று

* திருவாய்மொழி; VII, 9.

கருதி என்னைத் தன்மயமாக்கி என் நாவின்கண் நின்று தன்னைத்தானே பார்பரவு மின்கவிகளைச் சீர்பெற என்னாலே பாடிக் கொண்டான்'' என்று கூறுவர். இதனையே வேறு இடங்களிலும், 'பண்ணார் பாட லின்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி' எனவும், 'என்னெஞ்சத் துள்ளிருந்திங் கிருந்தமிழ்நூ லிவை மொழிந்து' எனவும், 'மாயக்கவியாய்வந்து என் நெஞ்சும் உயிரும் உள்கலந்து நின்றாரறியாவண்ணம் என் நெஞ்சுமுயிரு மவையுண்டு தானேயாகி நிறைந்தானே' என்றும் இவ்வுண்மை நிலைபெறக் கூறுவர். இத்தகைய ஈசுவரன் தானேயாகி நிறைந்து நின்ற நிலையிலே எழும் நாவியன்மொழிகளே ஈசுவரன் அருள்மொழியாமென்று முற்ற உணர்ந்த பெரியோர் கூறுவர். ஆகவே இவ்வாறாகிய தன்மையினின்று கவிபாடினாரைத் தெய்வக் கவிகள் என்று கொள்ளத் தட்டில்லை.

மயர்வற மதிநலம் அருளப்பெற்ற இவ்வாழ்வார் பெற்ற பகவதநுபவநிறைவே சொற்பட்டு இத்திருவாய் மொழியாக வெளிப்போந்தது. இத்தகைய இன்பக்கவி பாடுதற்குப் பாங்கான 'வாரிமாறாத பைம்பூம்பொழில் சூழ்' செழுங்குருகூரில் இவ் 'வண்டமிழ் நூற்கநோற்று', 'உலகம் படைத்தான் கவி'யாகத் தோன்றியருளினார். இவ்வாறு இவர் பாடிய தீதிலாத ஒண்தமிழ்களெல்லாம் பொய்யில்பாடல்கள்; நாவியலாற்றோன்றிய தோற்றங்களெனினும் ஆய்ந்த தமிழ்மாலைகள்; சோர்விலாத அந்தாதிகள்; குழலின்மலியச் சொன்ன இவ்வாயிரமும் சுவையில் பாலோடு அமுதொப்பன; கட்டெழில; கேடிலாதன; இத்தீர்த்தங்களாயிரமும் மாந்தர் தெருள்கொள்ளச் சொல்லியவை; அவா நடத்த நடந்தமையாலே வேட்கையாற் சொன்ன இப்பாடல்களெல்லாம் அடியார்க்கு இன்பமாரியாகிய ஆராவமுதம். இத்தகைய பாவியல்புகளால் இவ்வாழ்வார் ஈசுவரனை அடைந்து எவ்வாறும் இன்பத்தை மனத்தான் ஈங்குப் பெற்றாரோ அதனை ஒத்த இன்பத்தை ஒருபடியாக அடைவிப்பது இதன் கவி மாண்பு.

இத்தகைய தீங்கவிகளைத் தாம் பாடி இவற்றாலே தாம் ஈசுவரனுக்கும் அவனடியார்க்கும் தொண்டுசெய்து அடைந்த பேரானந்தத்தைப் பல இடங்களில் வெளியிட்டிருக்கின்றார். இவ்வின்ப மேலீட்டினாலே ஏனைய புலவர்களையும் பார்த்து, "யான் மானிடம் பாட வந்த கவியே னல்லேன்; உலகம் படைத்தான் கவி; அவன் உளனாக என் நாவி லின்கவியை யான் ஒருவர்க்கும் கொடுக்கி

லேன்; புலவீர்! நீவிரும் மன்னுமனிசரைப் பாடாது மின்னார் சடை முடி விண்ணவர் தாதையைப் பாடுமின்; பாடின் ஊழிதோறூழி நிலாவப்போம் வழியைத் தருவான்' என்று பரோபதேசஞ்* செய்வர். ஈசுவரன் தன் பெருமை யெல்லாந் தோன்ற வந்து கலந்த பிரீதியாலே தாம் அவனை இசைமாலைகளேத்தி வீவிலின்பம் மேவினமை‡யைக் கூறுமுகத்தால் தாம் இக்கவி பாடினமையான் யாதொரு குறைவின்மையையும் யாவரும் தமக்கு நிகரின்மையையும் கூறுகின்றார்; 'சொல்மாலைகள் ஏற்ற நோற்றேற்கு இனி என்ன குறை எழுமையுமே'; 'அரியதுண்டோ எனக்கு இன்றுதொட்டும் இனி என்றுமே'; 'சொல்மாலைக ளமைக்க வல்லேற்கு இனி யாவர் நிகர் அகல் வானத்தே'; 'வண்டமிழ் நூற்க நோற்றேன் அடியார்க் கின்ப மாரியே'; 'வீவில்கால மிசைமாலைகளேத்தி மேவப்பெற்றேன்'; 'வீவிலின்பம் மிக எல்லை நிகழ்ந்தனன் மேவியே'; 'நாளும் மகிழ் வெய்தினேன்'; ஆதலின், வானக் கோனைக் கவிசொல்ல வல்லேற்கு இனி மாறுண்டோ' என்றிங்ஙனம் இன்கவிபாடிப் பெற்ற பேரா ஆனந்தத்தை வெளியிடுவர்.

இத்தகைய நிகரிலின்பத்திற்குக் காரணம் யாவர்க்கும் இன்பமளித்து பகவதநுபவத்திற்கு எல்லைநிலமாகிய பாகவதர்க்குச் செய்யுந் தொண்டைத் தாம் எவ்விதக் குறைவுமின்றி இந்நூல்வாயிலாகச் செய்ய நின்றமையேயாகும். இப்பாடல்களை 'இன்பம் பயக்க எழில்மலர் மாதரும் தானும் இவ்வேழுலகும், இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து' விண்ணோர்பிரான் கேட்டருள்வன். இச்செவிக்கினிய செஞ்சொல்லை வானவரும் நீராகி நெஞ்சழியக் கேட்டு ஆரார்கள். இவைகளெல்லாம் தொண்டர்க்கு அமுதுண்ணச்செய்த சொன்மாலைகள்; அடியார்க்கு இன்பமாரி; இசைகாரர் காமுறும் பண்ணார் தமிழ். இவருடை பாசுரம் 'மரங்களும் இரங்கும்வகை' யன்றோ இருப்பது! இத்தன்மைகளால் அடியார் யாவர்க்கும் 'உண்ணுஞ் சோறும் பருகு நீர் தின்னும் வெற்றிலையுமாக' இருக்கும். இத்தகைய இன்பப்பாடல்களை தம்மைப் போல் ஆராத காதலையுடைய அடியார்குழாங்களுடன் இங்கு அநுபவிப்பதினும் பெரிய பேறு வானுலகத்தினும் காண்கிலர். "இங்கே திரிந்தேற் கிழுக்குற்றென்? இருமாநிலமுன் உண்டுமிழ்ந்த, செங்

---

* திருவாய்மொழி; III, 9.

‡ ௸ IV, 5.

கோலத்த பவளவாய்ச் செந்தாமரைக்க ணென்னம்மான், பொங் கேழ் புகழ்கள் வாயவாய்ப் புலன்கொள்வடி வென்மனத்தாய், அங் கேய் மலர்கள் கையவாய் வழிபட்டோட அருளிலே'', ''வழிபட் டோட் அருள்செய்து மாயன்கோல மலரடிக்கீழ்ச், சுழிபட்டோ டும் சுடர்ச்சோதி வெள்ளத் தின்புற்றிருந்தாலும், இழிபட்டோ டும் உடலில் பிறந்து தன்சீர் யான்கற்று, மொழிமொட்டு ஓடும் கவியமுதம் நுகர்ச்சியுறுமோ முழுதுமே'' என்று அவர் கூறுமாற் றால் நன்கு விளங்கும்.

இதுகாறுங் கூறியவாற்றால் இம்மொழிபட்டு ஓடும் இக்கவியமு தம் ஈசுவரனது வாய்மொழியாகவே கொள்ளத்தகுமென்றும், இத் தூய ஆயிரம் தீர்த்தங்களென்றும், இவற்றை எங்ஙனே சொல்லி னும் இன்பம் பயப்பன என்றும், 'புவிப் பாவலர்தம் முள்ளத் துளேயும் நின்று தித்திக்கும்' இயல்பின என்றும் இந்நூலின் கவி மாண்பு ஒருவாறு ஸ்தூலமாக விளக்கலாயிற்று. இனி, இதன் பொருளியல்பு இத்தகையதென ஆராய்தல் நேரிது.

(தொடரும்)

தமிழருள் கலையறிவு மீள வளம்படல்

இலங்கைத் தமிழர்கடமை.

யாழ்ப்பாணத்தின்கண் சென்ற எப்ரல் 13-ஆம் நாள் ஆங்கிலத்தில் வெளிப்போந்த இந்து சாதனம் என்னும் பத்திரிகையின் தமிழ்ப்புத்தாண்டுச் சிறப்பிதழில் தமிழ்ப்புலமையாளரும் வழக்கறிஞருமாகிய திரு. வ. குமார சுவாமி அவர்கள், பீ. ஏ., மேற்குறித்த சிறந்த பொருளைப்பற்றி வரைந்த நீண்டதொரு கட்டுரையில் 'நாட்டின் பொலிவுக்குக் கலை அறிவின் வளம் மிக இன்றியமையாதது' என்று வற்புறுத்தியவழிக் கீழ்வருமாறு குறிப் பிட்டுள்ளார்கள்:—

"தமிழ்க் கலைகளை வளரச் செய்ய வேண்டுமென்னும் பேரவா வினையுடைய நிகழ்ச்சிமுறைகளோடு சிறிது காலத்திற்கு முன் தோன்றியதும், அரசாட்சியினர்தம் ஆதர வில்லாததுமாகிய "கலா நிலையம்" என்னுங் கழகம் பொருள் அளவில் தனக்குரிய உதவியை யும் பிறவற்றையும் யாழ்ப்பாணத்துப் பொதுமக்களிடமிருந்து வேண்டுமளவிற்குப் பெறுகின்றிலது. அக்கழகம் தக்க பொருளுதவி யால் ஊக்கப்படுத்தப்பெறுமாயின், தமிழ்க்கலைகளின் ஆராய்ச்சி களைப் பெருக்கவேண்டுமென்று அக்கழகத்தார் வெளிப்படுத்திய நோக்கங்கள் நிறைவேறுமென்று நம்பப்படலாகும்."

சாளுக்கிய அரசர்களின் சிற்பக் கோயில்கள்

கோவை. திரு. சி. சு. நாராயணசாமி முதலியார் அவர்கள் எழுதியது

வட இந்தியாவிலுள்ள புண்ணியப்பதிகளில் சைவ—வைணவ மதங்களுக்குரிய கடவுளர்கள் இனிதமர்ந்து அருள்வதற்குப் பேரரசர்களும், சிற்றரசர்களும், பெருநிதிக் கிழவர்களும் அன்பு நெறியும், அருள் உள்ளமுங் கொண்டு, வானளாவிய கோபுரங்களையும், இந்திர விமானங்களையும்; ஆயிரக்கால், நூற்றுக்கால் மண்டபங்களையும்; அர்த்தமண்டபம், மகாமண்டபம், வேதமண்டபம் முதலிய பல்வகை மண்டபங்களையும் தம்மிடத்தே கொண்ட பேராலயங்களையும்; சிற்றாலயங்களையும் அழகின் அவதாரங்களாகவும், சிற்பநிலையங்களுக்கு வைப்புநிதிகளாகவும் விளங்கும்படி கோடிக்கணக்கான பொருள்களைச் செலவிட்டுக் கட்டுவித்தார்கள். அவைகள் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்திருந்தும் இன்றும் அழியா நிலையில், இன்ப உருவில், தமது பழைமையான இந்திய சிற்பக் கலையின் அற்புதத் திறமையை நமக்கு அறிவுறுத்திக் கொண்டிருக்கின்றன. ஒப்புயர்வற்ற ஓவியங்களைத் தம்முள் மிகுதியாகக்கொண்ட பேராலயங்கள் பற்பல, வடநாட்டில் ஏராளமாக இருப்பதைத் தென்னாட்டவருட் சிலரே அறிவர். பெரும்பாலோர் அறியாதிருப்பதற்கு, அறிந்தார் அவைகளின் அருமை பெருமைகளை விவரப்பட வெளிப்படுத்தாது வாளாவிருந்ததே காரணமெனலாம். கண்பெற்றார் கண்டுகளிக்க வேண்டிய காட்சிகள் இன்னின்னவையென்பதையும், யாத்திரையாகச் சென்று தெரிசிக்கவேண்டிய சிவமூர்த்தங்கள் இன்னின்னவையென்பதையும் தமிழன்பர்கள் அறியும்பொருட்டுத் தலப்பெயர் மூர்த்திப் பெயர் முதலியவற்றைத் தெளிவுபெற நாம் இதன்கீழ் சுருக்கமாக விவரிக்கின்றோம். அவை வருமாறு:

கி. பி. 610– ஆம் ஆண்டு முதல் 644-ஆம் ஆண்டுவரை 'பலாசிகா' மாகாணத்தில் 'கலட்கி' ஜில்லாவைச்சேர்ந்த 'வாதாவி'யில் 'சாளுக்கிய ஜயசந்திரன்' என விருதுப்பெயர் புனைந்து, மன்னர்மன்னனாக யாவரும் பரவும் மேவருஞ் சிறப்புடன் விளங்

கியவன், 'இரண்டாம் புலிகேசி வல்லபன்' என்னும் பெயரினன். இவன் தனது முன்னோர் கைக்கொண்டு செய்துவந்த சாளுக்கிய சிற்ப முறையைவிட்டு, தனது சமகாலத்தில் விளங்கிய காஞ்சிப் பல்லவர்களது நவீன சிற்பமுறையைத் தழுவி, வல்லம், திரிசிராப்பள்ளி, மஹேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், பல்லாவரம், பாமண்டூர், காஞ்சீபுரம் முதலிய தலங்களில் கட்டப்பட்டுள்ள கோவில்களையும், குடவரைக் கோவில்களையும் முன்மாதிரியாகக் கொண்டு, தனது இராஜ்யத்தின் முக்கியமான திருத்தங்களில் சிவ—விஷ்ணு—பௌத்த மதங்களுக்குரிய தெய்வங்களுக்குப் பலகற்றளிகள் பெருஞ் செலவில் எடுப்பித்தான். இங்ஙனம் எடுப்பித்த ஆலயங்களில், சிற்பத்தொழில் ஆரம்ப நிலையிலிருந்து பூர்ண வளர்ச்சிபெற்று உன்னத நிலையில் உயர்ந்து விளங்கும் வரையுள்ள ஓவியங்கள், ஒப்புயர்வற்றவகையில், கண்விருந்துகளாகவும், மட்டற்ற மகிழ்ச்சியை விளைக்கக் கூடியவைகளாகவும் விளங்கின. இவை சிறிது சிறிதாகத் தட்சணமெங்கும் பரவி நிலைபெறுவதற்கும் ஆயின.

வடநாட்டு மகாராஷ்டிர வீரவேந்தர்களாகிய சாளுக்கியர், சிம்மவிஷ்ணு, பல்லவமகேந்திரபோத்தரயன் முதலிய பல்லவ அரசர்களது சிற்பமுறைகளைப் பின்பற்றுவதற்கு முன்னர், அவர்களுடைய புராதனக்கோவில்கள் வடநாட்டுச் சிற்ப முறையைத் தழுவியனவாயிருந்தன. இரண்டாம் புலிகேசியானவன் வாதாபியின் அரிசியாசனத்தமர்ந்து, அளவற்ற தனது பராக்கிரமத்தால் அரசுசெய்யத் தொடங்கியபின்னர் மலைகளைச் சிற்றுளிகளைக்கொண்டு கல்லரண்மனை, அல்லது கண்கவர் மாளிகை யென்று காண்போர் கருதுமாறு குடைவிக்கப்பட்ட குடவரைக் கோயில்களே குகைக் கோயில்கள். இவைகள் நிஜாம் ராஜ்யத்தில் மிகுதியானவை.

இரண்டாம் புலிகேசிவல்லபன் தனது ஆட்சியில், தனது நாட்டில் சில பாகங்களில் சாளுக்கியசிற்பத்துடன் பல்லவசிற்ப முறைகளையும் தழுவி, புதிதாக அமைத்த ஆலயங்களைப்பற்றியே நாம் இங்கு விவரிக்கத் தொடங்குவது:

I. நிஜாம் ராஜ்யத்திலுள்ள 'குக்கனூர்' என்னும் சிவதலத்திலுள்ளது கல்லேசுவரர் ஆலயம். இக்கோயிலில் பல்லவர் சிற்ப முறைகள் வெளியமைப்பில் காணப்படினும், உள்ளிடங்களில் சாளுக்கியர்களின் ஆரம்பசிற்பமுறையின் அடையாளங்களையுடைய சித்திரங்கள் சில காணப்படுகின்றன. அவை: கோபுரத்தின்மீதும்,

நடுப்பாகத்திலும் பல மாடிகள் உயரத்தில் குறுகலாகவும், அடுக்கடுக்காகவும், வரிசைவரிசையாகவும் கட்டப்பட்டும், சுவர்முனைகள் அல்லது விளிம்புகள் குழிந்தும், நீண்டும், உடைபட்டனவுமான மாதிரிகளைக் கொண்டன. மற்றும் விமானங்களில் குதிரைலாட வடிவமான மூர்த்திமாடங்கள் இருக்கின்றன; அவற்றின்மீதுள்ள சிகரம் மேல்விதானமுடையதாகவும், விதானங்களுக்கு வைத்துள்ள சித்திரத்தூண்கள் நேர்த்தியாக உருட்சி செய்யப்பட்டனவாகவும் இருக்கின்றன. இவைகளே சாளுக்கியர்களின் பழமையான சிற்ப முறைகள்.

II. 'கதக்' என்ற ஊருக்கு அருகிலுள்ள 'லால்குண்டி' என்னும் தலத்தில் விளங்குவது காசி விஸ்வேஸ்வரர் ஆலயம். இவ்வாலயத்தில் விளங்குஞ் சித்திரங்கள் மிகுதியானவை. அவை—அழகுமிக்க பல்வேறு செடி கொடிகள்; பல்வகை மலர்கள்; பிறையையும் முழுமதியையும்போன்ற வளைவுகள்; குரங்கு, மான், பசு, யானை, குதிரை சிங்கம் முதலிய விலங்கினங்கள்; கிளி, அன்னம், நாகணவாய்ப்புள், வௌவால் முதலிய பறவையினங்கள் முதலியன. இவைகளின் உருவங்களை சாளுக்கியசிற்பிகள் தங்கள் கைத்திறம் சிறக்கவும், பூர்ணபாண்டித்யம் விளங்கவுமாகச் சித்திரித்தார்கள். ஓவியங்கள் மிக மனோரம்மியமானவைகளாகவும், அழகும், தெளிவும், அதிசயமும் கூடியனவாகவும், சிற்பவடிவுகளுக்கு வைப்புநிலயங்களாகவும் விளங்குகின்றன. அல்லாமலும், அவ்வுருவங்கள், குழிந்து காணப்படவேண்டியவிடங்களில் குழிந்தும், பருமனாயிருக்கவேண்டியவிடத்தில் பருமனாகியும், வளைந்து காணவேண்டியவிடங்களில் வளைந்தும், கூர்மையாயிருக்கவேண்டியவிடங்களில் கூர்மையாயும், பளபளப்புள்ள இடங்களில் பளபளப்பாயும் இனிதமைந்து காணப்படுவனவாம். இவைகள் ஓவியவல்லார்களின் உயர்ந்த லட்சியங்களை நமக்கு அறிவுறுத்துவனவாம். மற்றும், ஆலயப் பிராகாரங்களிலுள்ள தூண்கள், சுவர்கள், நிலைகள், உத்திரங்கள், போதிகைகள், கொடுங்கைகள் முதலியவைகளில் செதுக்கப்பட்டுள்ள திவ்யாலங்காரங்கள் நேத்திரானந்தமாகவும், வெகு திட்ப நுட்பங்களாகவும் சிறந்து, கண்டு மகிழ்வோர்களை, வாய்கொண்டமட்டும் புகழ்ந்து கூறும்படி உற்சாகத்தை ஊட்ட வல்லனவாயும் இருக்கின்றன.

அம்மட்டோ! இவ்வாலயத்தில், பிறிதோரிடத்திலும் காணாத புதியவிதமான அமைப்பொன்று அதிசயமாகக் காணப்படுகின்றது. அது—கருப்பக்கிருகத்திற்கு மேலுள்ள விமானத்தில் சிறியதொரு

கருப்பக்கிருகமும், குறுகலான அந்தராளமும், அதற்கு இருபக்கங்களிலும் கதவுகள் வைத்து மூடப்பட்ட மண்டபமும் ஆம். வட இந்திய சிற்பமுறையைத் தழுவிக் கட்டப்பட்ட இவ்விமானத்தின் நடுவிலும், தலைப்பிலும் முனைப்புடன் கூடிய அடுக்கடுக்கானவையும், வட்டவடிவுடையவையுமான மூர்த்திமாடங்கள், வெகு நுணுக்கமான சிற்பத்திறமையுடன் கட்டப்பட்ட அற்புத சிருஷ்டியென்றே கூற வேண்டும்; இம்மாடங்களில் மின்னிக்காணும் சித்திரத் தூண்கள் இயந்திரத்தினால் செய்யப்பட்டதோவென ஐயுறும்படி, கண் கூசுமாறு பளபளப்புடன் மெருகிடப்பட்டிருக்கின்றன; தூண்களின் போதிகைகளின் நுனி அடிகளில் மிகச்சிறிய சிற்றுளிகளைக்கொண்டு செம்மையாகச் செதுக்கப்பட்டிருக்கும் சித்திரங்கள்—வெள்ளி, தந்தங்களின் மீது கைதேர்ந்த சிற்பிகள் தங்கள் கலைத்திறன் விளங்கச் செய்த அற்புதங்களோவென்று வியந்து சொல்லும்படி அவ்வளவு அதிசயமானவை.

III. 'சௌதம்பூர்' என்னும் திருத்தலத்திலுள்ளது முக்கூஸ்வரர் ஆலயம். இவ்வாலயம் சாளுக்கிய அரசர்களில் மற்றொரு கிளையினரான கலியாணச் சாளுக்கியர்களால் மிகுந்த ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் பெரும் பொருட்செலவிற் கட்டுவிக்கப்பட்டது. இதில் ஆழ்ந்து குழிந்து முன்னுக்கு முனைத்து நிற்கும் சுவர்முனை இரட்டை விளிம்புகளும், விமானத்தின்மீது செங்குத்தான பட்டைகளெனத் தோன்றும் மத்தியமூர்த்தி பாடங்களும், அழகுமிகுந்த சிகரங்களும், வாதாவி சாளுக்கியர்களின் சிற்பத்தொழில்களின் திறமையைக் காட்டிலும் பன்மடங்கு மேன்மையுடையன. அகன்று விரிந்த ஆலயமும், அதனுள்ளடங்கிய தரைகளும், அத்தரைகளின்மீது சிறச் செய்யப்பட்டிருக்கும் தளவரிசைகளும், வெகு அந்தமுடையன. மற்றும், ஹொய்சாலர்களுடைய ஆலயங்களிலே உச்சநிலையை அடைந்துள்ள மணிக்கொடி செதுக்கு வேலைகளும், இழைப்புச் சித்திரங்களும், தூண் வரிசைகளின் அமைப்பும், விமானத்தின் தோற்றமும், மண்டபங்களின் மாண்புகளும் அதிசயிக்கத்தக்க சுந்தரவடிவங்களாம்.

IV. நிஜாம் ராஜ்யத்திலுள்ள 'இட்டகி' என்னும் தலத்திலுள்ளது மகாதேவர் ஆலயம். இவ்வாலயம் சாளுக்கியர்களுடைய ஆலயங்கள் அனைத்திலும் முதன்மையானதும், பூர்த்தியுடன் கூடிய உன்னத வேலைப்பெருமை வாய்ந்ததுமாம். இக்கோயில் அழகுபெற அமைக்கப்பட்டுள்ள மண்டபத்துடன் தொடர்ந்தாற்போல் கட்டப்

பட்டுள்ள திறந்த கல்மண்டபத்தில் நுணுக்கமான இழைப்புச் சித்திரங்களும், மணிமாலைக் கொடிகளும், சமர்த்தாகத் திரட்டப்பட்டு, கண்கூசும்படி பளபளப்புடன் விளங்கும் கற்றூண்களும், அத்தூண்களின்மீது அழகுபெறச் சித்திரிக்கப்பட்டுள்ள சித்திரச்சிலைகளும் அதிசயமான அழகுடன் விளங்குகின்றன. அல்லாமல், இவ்வாலயத்தின் மேற்பட்டுத் தளவரிசைகளின் உள்ளிடங்களில் பற்பலவிதமான கொடி செடிகளும், அவைகளில் பல்வேறு மாதிரியான இலைகள், தளிர்கள், அரும்புகள், மலர்கள், காய்கனிகளும் இயற்கையின் வடிவங்களோவென்று கூறும்படி அவ்வளவு அழகும் அதிசயமுமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. மற்றும், தூண் வரிசைகளில் தூக்கப்பட்டிருக்கும் மகரதோரணங்களும், போதிகைகளின்மேல் செதுக்கப்பட்டிருக்கும் சிற்பாலங்கார சித்திரங்களும் நேர்த்தியான ஒரு கானகக் காட்சியைப்போல் காணப்படுகின்றன. இச்சிற்பாலயத்தை, 'தேவாலயங்களின் சக்கரவர்த்தி' என்று கூறினும் மிகையாகாது.

V. மைசூர் இராஜ்யத்திலுள்ள 'பேலூர்', 'ஹளபேட்', 'லோம்நாத்பூர்' முதலிய தலங்களில் விளங்கும் சிவாலயங்கள்: இவைகள் ஹொய்சால அரசர்களுடைய ஆலயங்களே எனினும், மைசூர் நாட்டில் ஹொய்சாலர்களுடைய அரசு காலத்தில், வெற்றிக்கொடி தூக்கி விளங்கு புகழுடன் திகழ்ந்த சாளுக்கிய மன்னர்களின் சிற்ப முறைகள் மேலும் விருத்திபெற்று, நிரம்பிய அழகு வாய்ந்து, அவர்களின் ஆதிக்கத்தின் கீழ் மீண்டும் புதிய வடிவுபெற்று மேன்மையுடன் திகழ்கின்றன. இவைகளுக்கு உவமை கூறுவதென்றால், பல்வகையினும் உயரியதொரு ஸ்தானத்தைப் பெற்றதும், மேலான சிற்ப முறையில் திகழ்வதுமான 'திரிபுரி'யைச் சார்ந்த கலசூரி அரசர்களுடைய சித்திரக் கோயில்களேயாம்.

மேற்காட்டிய பேலூர், ஹளபேட், லோம்நாத்பூர் என்னுந் தலங்களில் ஹொய்சாலர்களுடைய சிற்பங்களுடன், சாளுக்கியர், தங்கள் சிற்பங்களே தலைசிறந்து விளங்கும்படி சட்டுவித்த ஆலயங்களில் சிறப்பாகக் காண்கின்றவை—மும்மூர்த்திகளுக்குத் தனித்தனி ஆலயங்கள் அமைத்திருப்பதும், சர்ப்பக்கிருகத்தில் மேல் விளங்கும் விமானங்களும், அவற்றில் அழகுபெற அமைந்து சிறக்கும் சீரிய சிற்ப சித்திரங்களும், இச்சித்திரங்களின் ஒளி, தாரகைகளின் வடிவங்களோவெனக் கூறும் அதிசயமும், விற்பனம் மிகுந்த கற்பனையுடன் சித்திரிக்கப்பட்ட செதுக்கு வேலைகளும், இழைப்பு வகைகளும்; உயர்தரமான சித்திர விசித்திரங்களுடன் பின்னல் பெருமை

யும் கூடிய சாளரவாயில்களும், உத்திரங்களில் ஒட்டியுள்ள கொடி வகைகளும், சூழ்ந்து குடைந்தெடுக்கப்பட்ட அடிச் செதுக்கு வேலைகளும், மேலே பூரித்து பூர்ணப் பிரபையுடன் விளங்கும் கொத்துச் சித்திரங்களும், மேல் தளத்தின் உள்ளிடங்களிலிருந்து கீழ் நோக்கும் பார்வையில் இனிது சமைக்கப்பட்ட அழகிய பதுமைகளும் ஆம். இவைகளைச் சிற்பக் கலைகளில் வல்லார்கள் பலர் ஒருங்கு கூடி—கைத்திறம் விளங்கும்படி சித்திரித்த ஓவியங்களோ! அல்லது அழகின் அவதார உருவங்களோ! அல்லது நுண்ணறிவுடன் நுணுக்கமாகச் சித்திரிக்கப்பட்ட சிருங்கார அலங்கிருத சிரேஷ்டமான காட்சிகளோ! எனக் காண்போர் கருதிக் கூறும்படி செய்திருக்கின்றனர்.

அவ்வாறு அவர்கள் கருதுவதற்குக் காரணங்கள் அவைகளைச் சித்திரித்த சிற்பிகள் அந்நினைவுடனே யிருந்து சித்திரித்ததும், நுணுக்கமும் தெளிவும் தென்பாகந் தோன்றும்படி ஓவியங்களை உண்டாக்கியதும், அங்ஙனம் உருப்பெற்றவைகள் சிற்பமுறைக்குச் சிறிதும் கோணாமலும், இடப்பரப்பு, அளவுந் திட்டம் முதலியன பிசகாமலும், இயல்பாகவிருக்கவேண்டிய வரையறைக்குட்பட்டும் இலங்குகின்றமையேயாம்.

இதே ஆலயத்தில் சாளுக்கியர் அதிகாரம் நிலைபெறுவதற்கு முன்னர், ஹொய்சாலர் தங்கள் தனிப்பட்ட சிற்பமுறையை, மற்றையவர்களின் சிற்பங்களினின்றும் தனியாகப் பிரித்துக் காட்டுவதன் பொருட்டே, ஆலய விமானத்தின் முன்னர் 'சாலராஜன்' என்னும் மன்னன், தனது கூர்மையுள்ள ஆயுதத்தைக் கொண்டு புலியைக் குத்தும் பாவனையில் ஓர் உருவத்தைச் சித்திரித்து வைத்திருக்கின்றனர்.

இவ்வளவே, சாளுக்கியர் சிற்பக் கோயில்களைப்பற்றி நாமறிந்த செய்திகள்.

யோக தர்சனம்

(Yoga-Philosophy)

திருக்கோணமலை க. விசுவலிங்கம் அவர்கள் எழுதியது

இருபதாம் நூற்றாண்டில் அதி உன்னதமாய்ப் பாராட்டிப் போற்றப்படும் இரசாயன, பிரகிருதி, மின்ஸார சாஸ்திரங்களும், மற்றும் நுண்ணிய கலைகளும் நாளடைவில் கைப்பயிற்சியின்றிக் குன்றி, அவற்றின் பாடபுத்தகங்கள் மாத்திரமே அழிவில்லாது கிடக்கப்பெறின், எம் பின்னோர் இவற்றினை எவ்வாறு கைக்கொள்வர் என்பது எம்மவரால் ஊன்றி நினைக்கற்பாலது. அறிவொடு புணர்ந்த மக்கள் இப்புத்தகங்களிற் கிடப்பன, ஏதோ பயிற்சிமுறையான் அறியத்தக்கனவேயென்று விளக்கங்கொள்வர். இவர்களுள் சிற்சிலர்க்குப் பாரம்பரியமாப் இவற்றின் பயிற்சி முறைகள் சிறபான்மை தெரிந்துளதேல், அவர் (அறிவொடு புணர்ந்த மக்கள்) இவர் துணையான் ஆவன செய்ப முற்படுவார். பல்வேறு வகையாய் வளர்ந்து கிடக்கும் இந்தியாது யோக நூல்களை யான் படித்தபொழுது, இவ்வகை ஒப்புமை யோக தர்சனத்திற்கும் ஒட்டிப் பார்க்கவேண்டுமோவெனும் எண்ணம் என்மனத் துதித்தது. இந்த யோகநூலை - முக்கியமாக ஹதயோகத்தை - உண்மை உடையது என்று நிலைப்படுத்துவதற்கு இடையிடையே பெரியார் தோன்றிலரேல், இந்நூலைப் பொய்ந்நூலென்றே இக்காலத்தார் தள்ளிவிடுவர். நாற்புறமும் காற்றுச் செல்லவிடாது அடைக்கப்பெற்ற பெட்டி ஒன்றனுள், யோகி ஒருவரை, டாக்டர் மெக்றிகோ என்பார் முன்னில் ககனஞ்செய்து, பெட்டியின் வாயை மூடி, ஓர் அகழியிற் புதைத்து, ஒரு மண்டலஞ் சென்றபின், அக்கிடங்கை அகழ்ந்தபொழுதில், அவர் இருந்தபடியே இருந்தார். இரு வருடங்களுக்கு முன்பு நரசிம்ஹயோகியென்பார் அருந்திய நச்சுப் பதார்த்தங்கள் (Hydrocyanic acid) யாவரையும் திடுக்கிடச் செய்தன.

இவ்வித யோகப்பயிற்சி எக்காலத்துத் துவங்கிற்றென்பது அறிதலாகாமையான், இதை எத்துணைப் பழமை உள்ளதென்று காலவரையறைக் குட்படுத் துரைக்க முடியவில்லை. எனினும், புராதன கலைவல்லுநர் மொகின்ஜோதரோ (Mohenjo-Daro)

எனுமிடத்தில் ஆராய்ச்சிசெய்து வைத்த சில குறிப்புக்களி லிருந்து இவ்வித யோகப்பயிற்சி அன்றுமிருந்ததென ஊகிக்கற் பாலதேயாம். திராவிடர் சிறப்பான் உணர்த்துந் தெய்வங்களுள் ஒன்றாகிய சிவனெனுங் கடவுளது உருவம் சுவடுபடுத்தப்பெற்ற கற்சிற்பங்கள் சில கண்டெடுக்கப்பெற்றன. யோகாசனத்து முத் திரையொடு (ஈங்கு யோகமுத்திரை) பக்கலில் மிருகங்களும் அச் சூன்றப்பெற்றனவாக இவர் உருவம் அக்கற்களிற் காணப்படுகின் றது. இந்தியாவின் பலவிடங்களிலும் சிதறுண்டுகிடந்த யோக முறைமைகளைத் தொகுத்துச் சூத்திரஊத்தாக்கினர் பதஞ்சலிமுனி வர் ஆவார் என்றே ஆராய்ச்சியாளர்கள் கொண்டுள்ளார்கள். இவ ரது கொள்கை சாலுமோவென்பார்க்கு பதஞ்சலிமுனிவரின் முதற் சூத்திரமாகிய "அத யோகாநுஶாஸனம்" ஓர் எடுத்துக்காட்டாகும். "அத" என்னும் பதம் முந்தியதொன்றையே குறிக்கொள்ளும் என்றவாறு. யோகமுறைகளில் வழுக்களைந்து மாறுகோளின்றாகப் பதஞ்சலியார் சூத்திரங்கள் யாத்தனர் எனல் அவர்தம் பெரு மைக்குக் குறைவாகாதென ஐயுறுவார் இதனை ஓர்ந்திடல்வேண்டும்.

இந்தியரின் ஆறு தர்சனங்களுள் யோக அறிவுநூல் ஒன்றே சித்தவிருத்தி நசிவடைய வேணுமென்ற துறையில்[1] கண்ணுங் கருத்துமாய் இருப்பது மாத்திரமேயன்றி, அவ்வழி செவ்வனே முடிபெய்துமாறு, 'ஹத' என்று சொல்லப்படும் உடலோம்பும் செயற்கைச் சாதனத்தால் பிராணனையுஞ் சித்தத்தையும் ஒரு துறைப்படுத்து முறைகளை நிலைபெற வகுத்தும், ஏனைய வழிகளான மந்திர, லயயோகங்களை முறைப்படப் பயிறலை உணர்த்தியும், இவற் றிற் கப்பாற் கவின்பெற விளங்கும் ராஜயோகத்தையும் நிறுவியது. பலகாலங்களிலும் தேசங்களிலும் எழுந்த யோகிகள் கூறிய ஆன்ம முறுக்கு (கஞ்சுகம்) அவிழ்தல் எனுங் கூற்றில் பதஞ்சலியார்போல் முயற்சித்தவர் எவரேனு மிருந்திலர் என்பது மறுக்கொணாவுண்மை. இவரொருவரே சித்த எழுச்சி, விகாரம் (Emotions) என்பவாதி களின் முதுதிரைகளினால் மொத்துண்ணாது, மனம் தனது தலையை நிமிர்த்தியவிடமே கைவல்யமென்றும், இந்நிலை, மனிதன் தான் தன்னந் தனியனாய், உறுதிப்பொருள் காணும் விடாப் பிடியான முயற்சியாளனாய்த் தான்தானே தேடிக்கொள்ள வேண்டியதென்றும்

---

[1] ஐந்திரு ளறநீக்கி நான்கினுட் டுடைத்துத்த
மொன் றாற்றுப் படுத்தநின் னார்வலர்......(பரிபாடல்)
[ஒன்றாற்றுப்படுத்தல் = சமாதி.]

வலியுறுத்துவர். இவை எல்லாம் சமாதி பாதத்தைப்பற்றி யாம் விளக்கும் அமையத்துக் கண்டுகொள்க. மனுஷ சித்தம் என்ன என்பதை எவரேனும் கூறுபடுத்த, கிரகிக்க, அல்லது அனுமானிக்க முயற்சித்ததுண்டா? இதுவே மக்களது பாங்கனுரும். இதை யாதெனத் தேடத் தேட, இது பின்னிடுவதே யல்லாது முன்னேறி வரமாட்டாது. இதுவொன்று மாத்திரமே பதஞ்சலி முனி புங்கவரின் உள்ளத்தைக் கலக்கிற்று. இதனாலன்றோ சூத்திரத்தில் "சித்த வ்ருத்தி நிரோத" என்றார். இயற்கையின் பெரும் வல்லபம் இடையறுமையன்றோ? இயற்கை, சுபாவம் என்பவை எல்லாம் மாறுதலடையாத மனத்திற்கு அமைதல் வேண்டும். அசையுமியல்பு திடமானதொன்றை எதிர்க்க முடியாது (Mobility cannot resist immobility). இதுவே பதஞ்சலி முனிவரின் யோகசூத்திரங்கட்குப் பீடிகை என்றல் மிகையாகாது.

ஹதயோக நூலுடையார் பிராணன் பெரும்பான்மையில் மனேமயமாகவே இருக்கின்றதெனக்கொண்டு, இதை (பிராணனை) ஆரம்பத்திலேயே அடக்கினலொழிய நிட்டை கூடவிபலாதென எடுத்து விளக்குவர். உதாரணமாக, ஆழ்ந்தசிந்தையில் அமிழ்ந்து கிடக்கும் ஒருவன், பல்வேறு சிந்தைகளில் நிலையில்லாதே மெத்தென மெத்தெனத் தேயாநின்ற மற்றொருவனினின்று குறைவாய்ச் சுவாசம் விடும் தன்மையுடையவனுய்க் காணப்படுகின்றான். இனி, மக்கள்தம் இயற்கை குறைபாடுடையதென்றும், புறத்தொடு சார்புடையதென்றும், இதைச் சீர்ப்படுத்துதலே ஹதயோகமென்றும், இதுவே (ஹத) ராஜயோக அங்கங்களென்றும், இதுவே சமாதிகூடும் வழி எவ்வழிதானென்று ஆராய்ந்து வளப்பத்தையுடைய ராஜயோகமறுகின்கண்ணே உய்த்து, உப்பாலியன்ற பாவை மழைத்துளியை உற்றதன்மைபோல, மக்களது களிம்பைக் கரைத்துவிடுமென்றும் கூறுவர் ஹதயோகநூலார்.[2] இது ராஜயோகத்திற்கு இன்றியமையாச் சிறப்புடைத்தென்பதை விரித்துரைக்கும் அவ்வவ்விடங்களிற் காண்க.

சிலர் மன அடக்கமே ஹதயோகமென்றும், ஜீவாத்ம பரமாத்ம ஐக்கியமே ராஜயோகமென்றுஞ் சொல்வர். பகவற்கீதை, யோகம் என்பது சமத்துவமெனப் பொருள்பெறும் என்று சொல்லும். சுவேதாச்சுவதர உபநிடதம், ஆத்மதத்துவம் பரதத்துவத்தில்

[2] 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூல் இவர் கூற்றைத் "தவப்பகடியாட்டம்" என்றும், "தத்துவ மூட்டாக் காய்ச்சமாதி" என்றும் சொல்லும்.

மறைதலேயே யோகமெனக் கூறும். பிற்காலத் தெழுந்த ஹம்ஸ, வராக, தியானபிந்து உபநிடதங்கள் யோகநூலிடம் மிகுந்த பற்றும், மகிமையுங் காட்டா நின்றன.

யோகப்பயிற்சி, உறுப்புகளைப் பேணி அவைதம் தொழில்களைச் செப்பமாகச் செய்விக்கும் என அங்கசாஸ்திர நூலாரிற் சிலர் துணிவர். யோகசாதன மென்பது நரம்புப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட செயற்கை வினையாகும். இப்பயிற்சியில் குழலில்லாத கோளங்கள் (Ductless glands) சிலமுக்கியமான தொழில்களை நடாத்தும். யோகப்பயிற்சி ஆக்கம் பெருகிவரின் நரம்புகளின் தொழில்களும் அதிகரிக்கின்றன. ஆகலின், நரம்புகள் பழுதடையாமலும் பக்குவமுள்ளனவாகவும் இருக்கவேண்டும். யோக அபேக்ஷகன் தன் உடம்பையும் மனத்தையும் பேணிக்கொள்வது நலம்பாடுடையதேயாம். மனவெழுச்சி, சித்தவிகாரம் ஆதியவை இவனுடைய நரம்புகளையும் கோளங்களையும் இழிதகவடைவிக்கும் ஏதுக்களைக் கூட்டிவிடுகின்றன. சுகதேகியராய் இருக்க விரும்புவோரும் சித்த விகாரங்களை விடுக்கவேண்டும்; அற்றேல், சுகரணவாத மாற்றங்களுக்கு (Physiological changes) ஆட்படுவராவர். துவக்கத்தில் இனையன மாற்றங்கள் நரம்பில் உண்டுபட்டு, ஏனைய அவயவங்களிற்கும் சென்றெய்தும் நிலைமைத்தாகலின், இவற்றைக் களைதல் சாலவும் நன்று என்பது தானே போதரும். இம்பின் அளவுகடந்த ஐம்புல நுகர்ச்சியான் உண்டாகும் இன்பத் துன்பங்கள் மரணத்தையும் வருவித்துவிடுமென்றுணர்க. 1870-ஆம் ஆண்டில் ஸ்ரஸ்பேர் (Strasburg) பட்டினத்தில் பிரயோகஞ் செய்த பீரங்கிவெடிச் சத்தத்தால் அவ்வூரிலுள்ளார் பலர்க்கு நீரிழிவு ரோசம் உண்டுபட்டதாக ஒரு வைத்தியக் கலைஞர் நன்கு விளக்கினர். குழலில்லாக் கோளங்கள்[3] முள்ளந்தண்டிற் கயலாக விருக்கும் சக

---

[3] குழலில்லாத கோளங்கள் ஆவன: *Thyroid* (தொண்டையில் இருக்கும் கோளம்) இதன் குறைவான் "*Myxoedema*" எனுநோய் வரும்; "*Pitnitary*" (கபாலத் துவாரத்து அடிச்சாளரத்திருக்கும் ஒரு வட்டித்த வஸ்து) இது பழுதடையின் "*Acromegaly*" எனும் பிணி உண்டாதம்; *Adrenals* (மூத்திராசயத்தின் பகுதிக்கோளம்) இது குறையின் "*Blood-pressure*", "*Arteriosclerosis*" எனும் வருத்தங்கள் வரும்; *Sexual glands* (சங்கம கோளம்). "*The soundness of different vegetative functions depends mainly on these ductless glands; if their internal secretions suffer premature old age and even premature death follow*". - *Swani* ....

நரம்புகளாலும் (Sympathetic nerves), திரிதநுநரம்பாலும் (Vagus nerve). [மூளையினின்று ஓடும் பத்தாவது சோடுகட்டிய நரம்பு] ஆளப்படுகின்றன. ஆகலான், ஒரு யோகமாணவன் நரம்பு மண்டிலத்தையும் கோளங்களையும் கலக்கிவிடாது இருந்தாலன்றோ அவன் யோகசித்திபெறுவான்! இவனுடைய முழுப்பலமும் யோகவளர்ச்சிக்கெனறே முகிழ்ப்பதாகும். எற்றிற்காய் பதஞ்சலி ஞானியர் இயம, நியம முறைகளை விதந்தோதினர் என்பது இவண் கூர்ந்து நோக்கற்பாலது. சித்த விகற்பங்கள் அடக்கவன்றோ! இவை தனிற் சிக்கி அல்லலுறாது, கீதையிற் சொல்லிய பிரகாரம், மனக்கிலேசங்களற்று, மோகமே, கோபமே, இச்சையே என்றிவை கலந்த தாழ்ந்த நடையை அகற்றியும், துக்கம் வந்துழி இழியாதும், இன்பம் வந்துழிப் பூரியாதும் இருந்தாலன்றோ இவன் சமநிலை கடைப்பிடித்து உய்வன்.

நாடி, சக்கரம், சக்தி

யோக சாஸ்திரம் படிக்க விரும்புவோர் தந்திரசாஸ்திரங்கள் சொல்லிய முறையான் உடம்பின்கண் பரந்துகிடக்கும் நாடி, சக்கரம், சக்தி என்பனவற்றை நன்கனம் அறிந்து அவை தம்மை மேற்றிசையினரது அங்கநூன்முறையொடு ஒப்ப நோக்கி அறிவது அவர்பாற் றங்கிய ஒரு கடமையாகும். யோகநூலுடையார்தம் மனுஷ உறுப்பின் விளக்கம் சிலவிடத்து மேற்றிசை அங்கநூலொடு ஒருதலைப்படுதல் வியக்கற்பாலதேயாம். இவரது யோகமுறையில் தசநாடிகள் உள. இவற்றுள் யோகியர்க்கு ஓராற்றான் புலப்படுவன மூன்று என்க. அவை: இடை, பிங்கலை, சுழிமுனை. இடை, மேரு தண்டத்தின் (முள்ளந்தண்டு) இடத்திலும், பிங்கலை வலத்திலும் முறையே ஓடி, இட வல நாசித் துவாரங்களில் முடிவனவாகும். இவை, ஒன்றொன்று மற்றையது ஓடும் ஆற்றில் ஓர் இடத்தில் மரீஇயே குறித்த இடத்தை அடைகின்றன. இவ்வித நோக்கக்களிலிருந்து இந்த நாடிகள் சகவேதனி மண்டிலத்தின் (Sympathetic System) பாற்படுகின்ற நரம்புச் சிறுமுடிச்சுகள் (Gangiliated cords) என நம்ப இடமுண்டு. சுழிமுனை (Spinal cord) நாடி பீடிகை என்பி (Sacrum) விருந்து முள்ளந்தண்டின் நாப்பண் ஓடி, வழியில் இரு பிரிவுகளாகி, ஒன்று ஆஞ்ஞா சக்கர (கண்புருவ இடை)[4] த்திற் றங்கி, ப்ரம்மரந்திரத்தை[5] அடையும்; மற்றது கபாலத்துப் பிற்பக்கம் ஓடி, இதுவும் அது

---

[4] *Naseo-ciliar Plexus.* [5] *Ventricular cavity.*

போலவே ரந்திரத்தைச் சேரும். சபாலத்தின் பிற்புறமோடும் சுழிமுனைக்கவரை அது மலர்த்துமென்பதே யோகிகள் கூற்று. மேற்றிசை அங்காதிபாதம் இவர்தம் பான்மையை மறுக்கும். இதை இங்கு யாம் விரித்துரைக்கக் கருதிலேம்.

குண்டலியை உற்சாகஞ் செய்புமுறை ஹதயோக வழியாற் பிராணாயாமம் செய்வதேயாம். எவ்வண்ணம் மூளையானது நாப்பண் நரம்பு மண்டிலத்தின் (Central nervous system) பால் உரிமை பூண்டு நிற்குமோ அவ்வண்ணம் குண்டலினி சகவேதனிமண்டிலத்திற்கு நிற்கும் பெற்றியுடையது. சகவேதனி மண்டிலம் ஆர்வமில்லாது ஒடுங்கிச்கிடக்கும்.

சக்கரம்

குண்டலியை விளக்குமுன்னர் சக்கரங்கள் எவையென அறிதல் நன்று. தந்திரசாஸ்திரம் சக்கரங்கள் அறுவகை எனக்கூறும். ஒவ்வொரு சக்கரத்திலும் ஆதி உருட்டுவோளென ஒரு சக்தி ஆவாசனங்கொண்டு இருப்பள். கொல்பானையினது மத்தகத்தில் அழுத்தின சக்கரம்போல ஒப்பற்ற படையை உடையவளாக, சயந்தம்பம் நாட்டி விளங்கும் பராசக்தியைபே இவற்றிற்கெல்லாம் ஏக சக்கிராதிபத்தி எனக்கொள்வர் யோகியர். முதற்கண், அடியிலிருக்கும் சக்கரம் மூலதாரம் (Pelvic Plexus) எனப்படும். இது முக்கோணவடிவுள்ளது. அடுத்தது சுவாதிட்டானம் (Hypogastric Plexus); இதற்கு ஆறு இதழ்களுண்டு. மணிபூரகம்(Solar Plexus). இதற்கு அப்பால் நின்று குண்டலியொடு கழிபேர் உவகைகொண்டு யோகியர் இன்புறுவர். இரவிஸ்தானம், மணிபூரசம் என்பன ஒருபொருட்கிளவிகள். அநாஹத சக்கரம் (Cardiac Plexus) இருதய தேசத்தைக் கொள்ளை கொள்ளும்; இதற்குப் பன்னிரண்டு அல்லிகள் உள்ளன. இதில் குண்டலினி குடிபுச, மயக்க அறிவு நீங்கி, தெள்ளிய அறிவு விளங்கப்பெற்று, யோக ஜாதகன் சூக்மஒலி, ஞானதிருஷ்டி முதலிய அந்தரங்க இரகசியங்களை நுகரும் ஆற்றலைப் பெறுவான். கண்டத்தில் இருக்கும் சக்கரம் விசுத்தி (Pharyngeal Plexus) ஆகும்; இதற்குப் புனித அரவிந்தம் எனும் பெயர் உண்டு. முடிவில் உள்ளது ஆஞ்ஞா (Cavernous Plexus) சக்கரம் என்பது. இது கட்பிரிவைச் சேர்ந்த மூளையின் ஐந்தாவது நரம்பின் பகுதியதாய்க் கண்ணின் இயவத்தின் விளிம்பைச் சூழ்ந்திருக்கும் வட்டச் சவ்விலும் (Ciliary Muscles of Iris) மூக்கின் அடியிலும் முடியும் என்பதாம். நாசி

விளிம்பிற்கு மேலிருக்கும் முனைப்பு இதுவேயாகும். இதைத் த்ரிநேத்ர மென்பர் யோகநூலார். ஏல்லபசக்கர மென்பதும் இதுவே.

சக்தி

மூலாதாரத்தில் இடாகினியும், சுவாதிட்டானத்தில் இராகினியும் நிற்கின்றன. இவைகளை, இடுப்புத் தானத்துத் துணைநரம்புகளின் வழியாய் வெளியாகும் வேகம் (Efferent impulse) எனவே கொள்ளப்படும். இலாகினி சக்தி மணிபூரகத்தில் ஆஞ்ஞை செய்யும். இது, இடுப்பிற்கு மேலதாக ஓடுகின்ற நால்வகை நரம்பிலிருந்து எழுகின்ற வேகமென உணரப்படும். அநாகதத்தில் காகினி இருப்பள்; இது நெஞ்சறைப் பக்கலில் செல்லும் முள்ளந்தண்டுப் பகுதியிலிருந்து புறப்படும் நரம்புகளின் வேகமென அறியற்பாலதாகும். விசுத்தி சக்கரத்தில் வீற்றிருப்போள் சாகினி; இது திரிதருநரம்பின் கிளைகளின் வேகம் எனப்படும்; இங்விடம் சந்திர மண்டிலம் எனவும் வழங்கும்; ஈங்கு இச்சக்தியின் கபாலத்தில் அமிருதம் (Cerebro spinal fluid) திவலை திவலையாக விழுந்து கொண்டேயிருக்கு மென்பர் யோகியர். ஆஞ்ஞாசக்கரத்தில் ஹாகினி இருப்பாள்; இங்கு, மூளையின் அடிப்பாகத்திற்கிடக்கும் உணர்ச்சி சம்பந்தமான முடிச்சுகளிலிருந்து எழுவதாய வல்லபத்தை இச்சத்திபால் ஏற்றுவர்.

குண்டலினிசக்தி

இது யோகநித்திரையில் எப்பொழுதுங் கிடக்கும்; இது தன் வடிவம் பாம்புபோன்றதெனச் சொல்வர்.

"பாம்புபோல் விரைந்து தடிபோ னிமிர்ந்து குண்டலினி
படர்ந்து மேற்போந்
தாம்பு போலுடல் பிணித்த நரம்பெல்லாம் தான்கவர்ந்து
சரீர மெல்லாந்
தேம்புறு வகைமேலே யெழுப்பு விக்குங் காற்றினாற்
செறிந்த பைதான்
ஞாம்பு சூழ்நீ ரிடையே யழுத்துகினு மேற்கிளப்புந்
தொடர்ச்சி போலே.
—ஞானவாசிட்டம்.

சுவாமி விவேகாநந்தர் இதற்கு மூலாதாரத்தில் சுருண்டுகிடக்கும் எஞ்சிய உணர்ச்சிகளெனப் பொருள்கொண்டுள்ளார்; ஆகர் அவலன் என்பார் சமதியிலயிற் கலங்காது என்றும் உள்ள பரசிவசக்தி என்று கூறுவர். சிலர் இதைக் கார்க்குருதிக்கீழ்நாளம் (Inferior Vena Cava) என்றும் ஊகிப்பர். இன்னுஞ் சிலர் இதற்கு உறை

விடம் ப்ரம்மரந்திர மென்பர். உடம்பின் கீழ்ப்பகுதியில் மலவாயிற்கு மேலதாக விருக்கும் இடமே இதனிடமென்று பொதுவாக யாவராலும் கொள்ளப்படுவதாகும். இவ்விடம் சுயம்பு லிங்கம்போல் இருக்கும் ஒரு நீண்ட முனைப்பு, முள்ளந்தண்டிற்கு ளிருக்கும் கொடியின் அடிப்பாகம் எனக் கொள்ளலாம். இதிலேதான் குண்டலினி துயின்று ப்ரம்மதுவாரத்து வாயை மூடிக்கொண்டு கிடக்கின்றது. இரு குண்டலினி உண்டென்றுஞ் சிலர் சொல்வர்; ஒன்று மூல குண்டலினியென்றும், மற்றது வெறுங் குண்டலினியென்றும், பின்னையது சுழிமுனைநாடி வழியாகச் சென்று பரசிவபிந்துவை அடைந்து அமிருததாரையிற் புனலாடுமென்றும் வேறுபடுத்துக் கூறுவாருமுளர். இன்னும் ஒருசாரார் குண்டலினியைப்பற்றித் தாம் அறிந்தவரையில் இது ஒருவித நரம்பென்றே சொல்லக்கிடக்கின்றதென்பர். இதை இவர்கள் மூளையிலிருந் தோடுகின்ற 12 சோட்டு நரம்புகளில் ஒன்றாகவே இருக்கவேணுமென்று சாதிப்பர். இவற்றுள் ஒருசோட்டு நரம்புதான் மிகவும் நீண்டதென்றும் இதுவே குண்டலினியாகுமென்றும் தருக்கஞ் செய்வர். ஆனல், இது கொள்ளற்பாலதா, தள்ளற்பாலதா என்பதை விளக்கலுறின் இவ்வுரை விரிந்துவிடு மாகையான் வளர விடுந்தேம்.

தந்திரசாஸ்திரங்கள் குண்டலினியை[6] பரசக்தி என்றே கொள்ளும். இது மனோதத்துவமுமல்ல, நரம்புமல்ல, தூலமுமல்ல, ஆனல் இது ஒரு மூலவஸ்துவென்றும், இதை நித்திரையிலிருந்து எழுப்பிவிடில், உயரிய தத்துவங்களாகிய சிவ சக்தி தத்துவங்களில் அமிழ்ந்து, முடிவில் பரமசிவத்தில் கலந்துவிடும் என்பர் தந்திர நூலார்.

---

[6] Kundalini is the dynamic real as the residual power, the power left over after the production of Prithivi when she coils herself around the Linga.—Sir John Woodroffe.

தொல்காப்பியம் எழுத்ததிகாரம்

நச்சினார்க்கினியக் குறிப்புரை

வித்துவான் ஈ. சுப்பையாபிள்ளை அவர்கள் எழுதியது

(222-ம் பக்கத் தொடர்ச்சி)

‘நிலையிற் றென்றல்’: அஃதாவது, நிலைமொழியோடு வருமொழி அதனை முடிக்குஞ் சொல்லாக இயையப் புணர்ந்த புணர்ச்சி நிலைத்த புணர்ச்சியா மென்பது. அது “நிறுத்த சொல்லி னீறா கெழுத் தொடு, குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப், பெயரொடு பெயரைப் புணர்க்குங்காலும்...............” என்னும் [தொல் - எழு - 108-ம்] சூத்திரத்தால் அறியப்படும் என்பர் உரைகாரர்.

‘நிலையா தென்றல்’: அஃதாவது, நிலைமொழியது ஈற்றின் கண்ணும் வருமொழியது முதலின் கண்ணும் (காணப்பட்ட) புணர்ச்சி (பொருள் கொள்ள அந்வயப்படுத்துங்கால்) தம்முள் இல்லையாதல் என்பர் உரைகாரர். எனவே, அந்வயப்படுத்தும் போது நிலைமொழிய தீற்றெழுத்திற்கு வருமொழியல்லாத வேறு மொழியது முதலெழுத்தோடு புணர்தல் உளதாகு மென்பதாயிற்று. [என் சொல்லியவாறோவெனின், இலக்கணப்போலியாகிய மரூஉ மொழிக்கண்ணும், மொழிமாற்றுப்பொருள்கோளும் தூராந்வயமும் அமைந்த விடத்தும் காணப்படும் புணர்ச்சியானது பொருள் கொள்ளுங்காற் பிரிந்து நிலையாதொழிதல் என்றபடி.]

ஈண்டு, கழகத்தார் பதிப்பிற் கண்ட “புணர்ச்சி தம்முள் இயல்பாதல்” என்ற பாடம் பொருந்தாது; மழவை மகாலிங்கையர் பதிப்பிற் கண்ட “இலவாதல்” என்ற பாடமே பொருந்தும்.

“மருவின் றொகுதி மயங்கியன் மொழியும்” என்னும் [தொல் - எழு - 111 - ம்] சூத்திரத்தால் இந்நயம் கொள்ளப்பட்ட தென்பர் உரைகாரர். உதாரணம்: ‘புறநகர்’ என்னும் இலக்கணப் போலியாகிய மரூஉ மொழிக்கட் காணப்படும் ஈறு கெடுதலாகிய புணர்ச்சி, பொருள் கொள்ளுங்கால் ‘நகர்ப்புறம்’ என மாறிப்புணர் தலால் நிலையாமை காண்க. “சுரையாழ வம்மி மிதப்ப” என்னும் மொழிமாற்றுச் செய்யுட்கண்ணும் “இரும்பு திரித்தன்ன மாயிரு

மருப்பிற், பரலவ லடைய விரலை தெறிப்ப" என்னும் தூராங் வயத்தின் கண்ணும் இவ்வாறே புணர்ச்சி நிலையாமை காண்க.

'நிலையிற்று நிலையாதென்றல்' : அஃதாவது, ஒரு விதி ஒரு வழிக்கண் நிலைபெற்று வருதலும் மற்றொரு வழிக்கண் நிலைபெறாது (விலக்கப்பட்டு) நீங்கலும் உடைத்தென்பது.

இரா + காக்கை—இராஅக்காக்கை என எதிர்மறைப் பெயரெச்சமாகிய அல்வழிக்கண்ணே, "உம்மை யெஞ்சிய" என்பதனுள் 'எஞ்சிய' என்பதனால் அகரந் தோன்றிப் புணர்தலும், இராக் காக்கை [—இராவின்கட் காக்கை] என வேற்றுமைவழிக்கண்ணே "குறியதன் முன்னரு மோரெழுத்துமொழிக்கும், அறியத் தோன்றும் அகரக் கிளவி" என்பதனால் விதித்த அகரம் "இராவென் கிளவிக் ககர மில்லை" என்பதனால் விலக்கப்பட்டுப் (நிலையாது) புணர்தலும் காண்க. ["குறியதன் முன்னரும்" என்பதனால், பலாஅக்கோடு, காஅக்குறை எனப்பிறமொழிகள் வேற்றுமைக்கண் அகரம் பெறும் என்பது இங்கறியத்தக்கது.]

ஈண்டுக் கழகத்தார் பதிப்பில், "என்பதனாற் கூறிய அகரம் 'இராவென் கிளவிக் ககர மில்லை' என்பதனாற் பெற்றாம்" என வருந்தொடரில், 'அகரம்' என்ற எழுவாய்ச்சொல் பயனிலை கொள்ளாது வாளா (நின்று வற்றலாக) நிற்கின்றது. ஆதலின் "அகரம் இராவென் கிளவிக்கில்லை" என்று, பிந்திய சூத்திரத்தை வசன நடைப்படுத்திக் கொள்ளுகின்ற பாடமே சிறந்தது; மகாலிங்கையர் பதிப்புக்காண்க.

கருவி செய்கை ஆகிய இரண்டும் புறம் அகம் என இரண்டாக வகுத்தும், புறப்புறம், புறம், அகப்புறம், அகம் என நான்காக விரித்தும் கூறப்படும்.

சிலவற்றை அபேட்சித்துக் கூறப்படுவனவாய கருவியும் செய்கையும் அகம் எனவும், பலவற்றை அபேட்சித்துக் கூறப்படுவன புறம் எனவும் படும். இவ்வாறே புறப்புறம் புறத்திற்குரியவற்றினும் பலவாயுள்ளவற்றையும், அகப்புறம் அகத்திற்குரியவற்றினும் அதிகமானவற்றையும் அபேட்சித்துக் கூறப்படும். இவற்றை "அற்ப அபேக்ஷம் அந்தரங்கம், பஹு [=வெகு] அபேக்ஷம் பகிரங்கம்" என்பர் வடநூலார்.

செய்கை (மொழிப்புணர்ச்சி) யொன்றற்கே யுரிய கருவி அகக் கருவியாம். அவற்றுள்ளும் ஒரோவோர் ஈற்றுப்புணர்ச்சியை மாத்

திரம் அபேட்சித்துக் கூறிய கருவிகளை அகக்கருவி என்றும், பல்வகை யீற்றுப் புணர்ச்சிகட்குப் பொதுவான கருவிகளை அகப்புறக்கருவி என்றும் பிரித்து உதாரணம் காட்டினர் உரைகாரர்.

செய்கைக்கும் பிறவற்றிற்கும் பொதுவான கருவி புறக்கருவியாம். அவற்றுள்ளும் மொழிமரபிற் கூறப்படுவன செய்கைக்கும் செய்யுளியற்கும் நேரே கருவியாதலின் புறக்கருவியெனப்படும்; நூன்மரபும் பிறப்பியலும், செய்கைக்குரிய மொழிகளை ஆக்கிக் கோடற்குக் கருவியாகிய எழுத்தினிலக்கணங்களையும் [அவற்றுள்ளும் பிறப்பிலக்கணம் செய்கைக்கு நேரே கருவியன்றாயினும் இனமடைத்தலின் மூலம் பரம்பரையாற் கருவியாதலின்,] அதனையும் கூறித் தூரமான கருவியாயும், அவையெல்லாம் செய்யுளியலுள் அசையாக்கம் தொடையாக்கம் வண்ணம் முதலியவற்றிற்கும் பொதுக்கருவியாயும் இருத்தல்பற்றிப் புறப்புறக்கருவி எனப்படும்.

இந்நான்கு கருவிகளையும் சுருக்கிப் பொதுக்கருவி சிறப்புக் கருவி என இரண்டாக்கிக் கூறுவர் சிவஞான முனிவர்.

இனிச் செய்கை நால்வகையுள், அகச்செய்கையாவது, ஒரோவோ ரீற்றின்முன் ஓரின வருமொழிவைத்துக் கூறப்படும் செய்கைச் சூத்திரமாம். அகப்புறச் செய்கையாவது, ஓரின ஈற்றின் முன் அல்லது ஒரோ வோரீற்றின்முன் பலவின வருமொழி வைத்துப் புணர்ச்சிவிதி கூறும் சூத்திரமாம். புறச்செய்கையாவது, பலவகையான ஈற்றின்முன் ஒருவகையான வருமொழி வைத்துப் புணர்க்கும் விதியாம். புறப்புறச் செய்கையாவது, பலவகை யீறுகளின்முன் பலவகை முதன்மொழிவரப் புணர்க்கும் விதியாம். இவற்றை ஈண்டுக் காட்டிய உதாரணசூத்திரங்களான் இனிது உணர்க. [இங்கே உரைகாரர் புறப்புறச் செய்கைக்கும் புறச்செய்கைக்கும் காட்டிய சூத்திரங்களை அவற்றின் கருத்துரையிற் கருவி கூறுவனவாக உரைத்திருப்பது ஆராய்ச்சிக்குரியது.]

இனி, "எழுத்தெனப் படுப அகரமுதல்" என்னும் இம் முதலாஞ் சூத்திரத்தில், எனப்படுப என்பது, என்று சிறப்பித்துச் சொல்லப்படுவன எனச் சிறப்புப் பொருளுணர்த்திவந்த வினையாலணையும் பெயர். வினையாலணையும் பெயர்கள் தொல்காப்பிய வுரைகளில் வினைப்பெயர், தொழிற்பெயர் என்னும் பெயர்களால் வழங்கப்படும். அவை உருவத்தான் வினைமுற்றே டொக்குமாயினும் படுத்தலோசையான் வேறுபட்டுப் பெயர்ப் பொருளைத் தரும்

என்பதும், வினைமுற்ருய் வினைப்பொருள் தருமிடத்து எடுத்த லோசையாக உச்சரிக்கப்படும் என்பதும் நச்சினர்க்கினியர் கொள்கை. இதனைப் பின் காட்டும் சில சூத்திரங்களில் நச்சினர்க்கினியரது உரைகொண்டு அறியலாம்; அவை வருமாறு:

"பெயர்நிலைக் கிளவி காலந் தோன்ரு" [தொல்-சொல்-வேற்றுமை யியல் - 9-ம் சூ.] என்பதனுரையில் "இதனல், திணையும் பாலும் காலமும் இடனும் தோன்றும் தொழிற்சொல், படுத்த லோசைப்பட்டு நின்ருற் ரெழிற்பெயராய் [வினையாலணையும் பெயராய்] நின்று பயனிலைகொண்டும் உருபேற்றும் காலத்தைத் தோற்றுவித்தலும்.......... கூறினர்" என வரைத்து, "உண்டான் தின்ருன் என்ருற்போலக் காலந் தோன்றி வினைமுதல்மேல் நின்ற படுத்தலோசையானுந் தொழிற்பெயரும் .... உணர்க" என உதாரணமுங் காட்டினர்.

"அத்திணை மருங்கி னிருபாற் கிளவிக்கு, மொக்கு மென்ப வெவனென் வினவே." [தொல்-சொல்-வினையியல் - 22-ம் சூத்.] என்பத னுரையில், "படுத்த லோசையால் எவனென்பது பெயருமாம். அஃது இக்காலத்து 'என்' என்றும், 'என்னை' என்றும் மருவிற்று" என வரைத்தனர்.

"இர் ஈர் மின்னென வரூஉ மூன்றும்" [தொல்-சொல் - வினை-27-ம் சூத்.] என்பதன் உரையில், "நட, வா, விரி முதலிய இருபத்து மூன்றீற்று வாய்பாடும் எடுத்தலோசையான் முன்னிலை யேவலொருமை முற்ருய் நிற்கும், இவை தாமே படுத்தலோசையால் அச்செய்கைமேற் பெயர்த்தன்மைபட முதனிலையாயும் நிற்கும்" என்றுரைத்தனர்.

ஆனல், இவர் கூற்றிற்கு மாருக இலக்கணக்கொத்து நூலுடையார் 126-ம் சூத்திரத்தின் உதாரணத்தில், "நெறிநின்ருர் நீடு வாழ்வார்' என்பதனை முறையே பெயராக்க வேண்டி லெடுக்க; முற்ருக்க வேண்டிற் படுக்க" என்றனர். இவர் போலவே பிரயோக விவேக நூலாரும் தமது நூலில், 40-ம் செய்யுளுரையில் தம்மதங் கூறி, பிறர்மதங் காட்டலாக "கிருத்துப் [வினைப்பெயர்] படுத்தல், திஙந்தம் [வினைமுற்று] எடுத்தலென மாறிக் கூறுவாருமுளர்" என்றனர். இனி, நன்னூல் விருத்தியுரைகாரர், "வினையா லணையும் பெயர் விகுதியிற் பொருள் சிறந்து நிற்றலின் ஈற்றிலெடுக்க என்றும், வினைமுற்றெல்லாம் பகுதியிற் பொருள் சிறத்தலின் முதனிலையி லெடுத்து உச்சரிக்க என்றும் கூறிப்போந்தனர். இவ்

விகற்பமெல்லாம் ஈண்டுக் கூறியதெற்றுக்கெனின், நன்னூல் மாத்திரங் கற்றார்க்கு நச்சினார்க்கினியர் கொள்கையில் மலைவும் மயக்கமும் நீங்கற் பொருட்டென்பது.

இனி உரையில், "பகரமும் வகரமும் ஈண்டு நிற்றற்குத் தம்முள் ஒத்த வுரிமைய":—என்பது பகர வகரமாகிய எதிர்காலவிடைநிலை யிரண்டனுள் பகரமெய் 'போ' முதலாகிய சில வினையடியோடு இயைந்து வாராமையும், வகரமெய் 'நட, பார்' முதலாகிய சில வினையடியோடு இயைந்து வாராமையும் உடையவன்றே; ஆனால் ஈண்டு 'எனப்படு' என்னும் இவ் வினையடியோடு அவ் ஈரிடைநிலையும் இயைந்து வரலுடைய என்றவாறு.

(தொடரும்.)

தமிழகத்துத் தருக்கநூல் வளர்ச்சி

திரு. போ. கைலாசபதி, பி. எஸ்சி., எழுதியது

(கூதிர்க் கதிர் 340-ம் பக்கத் தொடர்ச்சி)

நெவின்ஸ் அவர்கள், "தமிழிலே நியாயநடைசிறந்த நூல்கள் சிவஞானசித்தி சுபக்க பரபக்கங்கள், சிவஞானபோதம், சிவப்பிரகாசம், தத்துவப்பிரகாசம் முதலியன; நீலகேசி, குண்டலகேசி, சூத்திரபிடகம், சித்தாந்தத்தொகை முதலிய நூல்களும் நியாயஞ் சிறந்த நூல்களென்பர்" எனத் தந்நூலுட் குறிப்பிட்டதும் இச் சந்தர்ப்பத்தில் சிந்திக்கற்பாலது. ஈண்டுக் குறிப்பிடப்பட்ட நூல்களுள் சிவஞானபோதம் சிவஞானசித்தியாருக்குச் சற்று முற்பட்டதாகும். நீலகேசி, குண்டலகேசி, சூத்திரபிடகம், சித்தாந்தத் தொகை யென்பன மணிமேகலைக்குஞ் சிவஞான சித்தியாருக்கு மிடைப்பட்ட காலத்தனவாகலாம். இவற்று ளெவையேனும் இக் காலத்தில் வழங்குவனவாகத் தெரியவில்லை. மகாமகோபாத்தியாயர் சாமிநாதையர் பதிப்பித்த மணிமேகலையில், நீலகேசியிற் றருக்க சம்பந்தமான சிலபாகங்க ளெடுத்துக்காட்டப்பட்டன.

மணிமேகலைக்குஞ் சிவஞானசித்தியாருக்கும் இடைப்பட்ட காலத்திலே தருக்கசம்பந்தமான நூல்கள்பல தமிழிலே தோன்றியிருத்தல் வேண்டுமெனவும், அவற்றுட்பல வழக்கிறந்தொழிந்தனவெனவும், சில இப்போழ்தும் அச்சேறாது கிடக்கின்றனவெனவும் எண்ண இடமுண்டு.

4

சிவஞானசித்தியாரில் "அளவை காண்டல் கருதலுரை அபாவம் பொருளொப் பாறென்பர்" என்னுஞ் செய்யுள் முதலாக "ஈண்டு பக்கப் போலிநான் கேதுப் போலி யொருமூன்றாய், வேண்டுமெழுமூன் றாகும்" என்னுஞ் செய்யுள் இறுவாயாகப் பதினான்கு செய்யுட்களில் அளவை யிலக்கணங் கூறப்பட்டது. சைவசாஸ்திரங்களிலே பிரதிபாதிக்கப்படும் பதி பசு பாசங்களி னிலட்சணங்களையும், சிவப்பேறு அடைவார்க்குரிய சாதனங்களையும், சிவப்பேற்றியல்பினையும் எடுத்துக் கூறுவதற்கும், உலோகாயதம் பௌத்தம் முதலாஞ் சமயவாதிகள் மதங்களைக் கண்டித் தொதுக்குவதற்கும்

எழுந்த சிவஞானசித்தியாரில் பிறமதங் களைதற்கும் தம்மதம் நாட்டுதற்கும் ஆதாரமாய பிரமாணங்கள் அளவை என்னும் பகுதியிற் கூறப்பட்டன.*

நாமறிந்த வரையிலே தருக்க ஆராய்ச்சியையே தன் விஷயமாகக்கொண்டு தமிழில் எழுந்த நூல்களுள் மிகப் பழையது தருக்கபரிபாஷை. இது வடமொழியில் கேசவமிசிரர் என்னும் மகாபண்டிதர் செய்த நூலின் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர் துறைமங்கலஞ் சிவப்பிரகாச சுவாமிகள். இந்நூல் பதினறு பதார்த்தங் கொள்ளும் கௌதம தர்க்கத்தைத் தழுவியது. இக்காலத்துப் பெரும்பாலும் கற்கப்படும் தருக்க சங்கிரகத்தினும் பொதுத் தர்க்க விஷயங்களை எடுத்துக் கூறுவதிற் சிறந்தது.

தருக்க பரிபாஷைக்குப் பின் தருக்க ஆராய்ச்சியே பொருளாகக் கொண்டு பல நூல்களும்,† சமயவாராய்ச்சியோடு அதற்காதாரமாய அளவையிலக்கணங் கூறும் சைவப்பிரகாசனமும், மணிமேகலையில் 29-ம் காதையிற் கூறப்பட்ட தருக்கவிஷயத்தை விளக்குதற்கு அனுமான விளக்கமும் தமிழகத்தே எழலாயின.

---

* இந்தியாவிலே மிகப் பண்டைக்காலந் தொட்டே சமயவாதிகள் தந் நூலகத்தே தாம் கொள்ளும் அளவைகளையும் அவற்றின் தன்மைகளையும் எடுத்துக் கூறிவிட்டுப் பதார்த்த ஆராய்ச்சிசெய்யும் வழக்கத்தைக் கைக்கொண்டொழுகி வந்தனரென்பதும், தமிழிலும் மணிமேகலை நூலுள் பௌத்தமத போதனை செய்யத் தொடங்கிய ஆசிரியன் (30-ம் காதை) முதலில் அளவை யிலக்கணங் கூறினனென்பதும், சிவஞானசித்தியாரிலும் அளவையிலக்கணங் கூறப்பட்டதென்பதும், யாழ்ப்பாணத்து நீர்வேலிச் சங்கரபண்டிதரவர்கள் செய்த சைவப்பிரகாசனத்தும் அளவையிலக்கணம் முதலிற் கூறப்பட்டதென்பதும் ஈண்டு நோக்கற்பாலன.

ஆசிரியர் மெக்ஸ்மூல்லரவர்கள் இவ்விந்திய வழக்கத்தைப் பாராட்டி, மேலைத்தேசத்துச் சமயவாதிகள் தத்த மளவைகளைத் தெளிவுபட எடுத்துக் கூறாமையால் நேர்ந்த அனர்த்தங்கள் பலவெனக் குறிப்பிட்டாரென்பது, இச்சந்தர்ப்பத்திற் குறிப்பிடத்தக்கது.

† அவற்றுள் நாமறிந்தன இவை:

I. தருக்கசங்கிரகம் அன்னம்பட்டீயம்: இது அன்னம்பட்டரால் வடமொழியில் மூலமும் உரையுமாகச் செய்யப்பட்ட நூலின் மொழிபெயர்ப்பு. வைசேடிய தருக்கத்தைத் தழுவியது. மொழிபெயர்த்தவர் சிவஞானமுனிவர்,

141

தருக்கவாராய்ச்சியே பொருளாகக் கொண்டவற்றுள் பல, வடமொழி நூல்களின் மொழிபெயர்ப்புக்களாகவும், சில ஆங்கில தருக்கநூல்களைத் தழுவியனவாகவும் காணப்படுகின்றன.

வடமொழியில் பரந்த தருக்கநூல்களை யாராய்ந்து எழுதப்பட்ட தருக்கநூல்களேனும், ஆங்கிலத்தில் பிறட்டிலி, பொசாங்கே முதலிய பேராசிரியரது நூல்களை ஆராய்ந்து எழுதப்பட்ட தருக்க நூல்களேனும், இளைஞர் தருக்கரீதியாகப் பேசுதற்கும் எழுதுதற்கும் துணையாகவல்ல சிறிய தருக்க நூல்களேனும் தமிழ் மொழியில் இன்னும் எழுதப்படாதது வருந்தத் தக்கதாகும். கற்றுவல்ல பெரியோர்கள் இத்துறைகளில் ஈடுபடுதல் வேண்டும். சில ஆங்கிலத் தருக்க நூல்களைத் தழுவி தமிழில் ஒருதருக்க நூல் எழுதுவித்துப் பரிசில் வழங்கித் தமிழ் விருத்தி செய்த அண்ணாமலைச் சர்வகலாசாலையும், தமிழ் வளர்ச்சியிலீடுபடும் ஏனைய ஸ்தாபனங்களும், தமிழன்பர்களும் தக்கோரை யூக்கப்படுத்தி இத்துறைகளில் ஈடுபடச் செய்தல் வேண்டும்.

———

II. நியாய இலக்கணம்: இது ஆங்கிலத்தில் உவேற்லி எழுதிய தருக்க நூலொன்றைத் தழுவியது. கட்டளைக்கலித்துறை பெரிதும் விரவிய பாக்களாலாய சூத்திரங்களையும், விளக்க வசனங்களையும், தமிழ்நாட்டு வழக்கிலுள்ள உதாரணங்களையுங் கொண்டது. இதனை இயற்றியவர்கள், உவில்லியம் நெவின்ஸ் அவர்கள்.

III. தர்க்காமிர்தம்: இது வடமொழிநூல் ஒன்றன் மொழிபெயர்ப்பு. மொழிபெயர்த்தவர் யாழ்ப்பாணத்து நல்லூர் வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை யவர்கள் மாணாக்கர் தர்க்ககுடாரதாலுதாரி தம்பு அவர்கள்.

IV. நியாயப்பிரகாசம்: இது ஹிந்திபாஷையில் சித்கனானந்தகிரி என்பவர் செய்த நூலின் மொழிபெயர்ப்பு. தமிழில் வழங்கும் தருக்க நூல்களுள் மிக விரிந்தது.

V. தருக்கசங்கிரகம், நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், நீலகண்டீயம்: அன்னம்பட்டர் செய்த தருக்கசங்கிரகம், அதற்குரையாயெழுந்த நியாயபோதினி, பதகிருத்தியம், அன்னம்பட்டீயம், அன்னம்பட்டீயத்துக் குரையாகிய நீலகண்டீயம் என்பன வடமொழியினின்றும் மொழிபெயர்த்துச் செய்யப்பட்டன. இவற்றினாசிரியர் யாழ்ப்பாணத்துத் தெல்லிப்பழை வித்துவான் சிவானந்தையரவர்கள்.

யாழ்ப்பாணச் சரித்திரம்

முதலியார் செ. இராசநாயகம் அவர்கள் (*Retired C. C. S.*) எழுதியது

ஆங்கிலேயர் காலக் குறிப்புகள்

பண்டைக் காலந் தொட்டு ஒல்லாந்தர் அரசாட்சி காலம் வரையுள்ள யாழ்ப்பாணச் சரித்திரத்தை, அதற்கு இன்றியமையாதென வெனக் கண்ட பல்வகைத் துறைகளையும் அதனதன் உண்மைச் சரித்திரங்களைத் தேடிக் காணக்கூடிய வெல்லைவரை சென்று கண்டு, ஒருவாறு அறுதி செய்து அச்சிட்டு வெளியிட்டோம். பின்னர், ஆங்கிலேயர் காலத்தைப் பற்றிப் பெரும் பாகம் அச்சிடப் பெற்று வெளிவருமுன், அண்மையில் உதித்து உலாவாநிற்கும் யாழ்ப்பாணக் கலாநிலையப் பருவ 'ஞாயிற்'றில் சிற்சில பாகங்களைப் பிரிவு பிரிவாக வெளியிட்டு வரின், சரித்திர நூலுக்கு இன்னும் வேண்டிய பொருள்களை அறிஞர்கள் தந்துதவுவார்கள் என்ற ஆசையால் இவ்வாறு செய்யத் துணிந்தோம். வெளியிடும் பொருளில் திரிபுகள் காணப்படின், அவைகளை அறிஞர்கள் அன்புகூர்ந்து எமக்குத் தெரிவிப்பாராயின், உவகையுடன் ஏற்றுப் பிரசுரிப்பாம். இம்முறை முத்துச் சலாபத்தைப் பற்றி வெளியிடுகின்றோம்.

முத்துச் சலாபம்

கி. பி. 1768 க்குப் பின், பல வருடங்களாகக் குளிப்பில்லாதிருந்த முத்துச்சலாபம், யாழ்ப்பாணம் ஆங்கிலேயர் வசப்பட்டவுடனே குளிப்புக்காக ஒல்லாந்தர் செய்திருந்த பிரயத்தனங்களோடு அம்முத்துக்குளிப்பு நடத்தப்பட்டது. 1793-ல், சோதித்து, 1796-ல், முத்துக் குளிக்கலாமென்று சொல்லிய தலைமைக்காரராவார்:

1. மன்னார்ப் பரவர் அடப்பனார் கஸ்பார் பச்சைக்குப் பட்டங்கட்டி;
2. மன்னார்ச் சடையர் தலைவன் சூசை தே மெல்லோ;
3. யாழ்ப்பாணம் கரையூர் இறைசுவர், டொன் தியோகு குருகுல சூரிய அரசு நிலையிட்ட முதலியார்;
4. ,, நாவாந்துறை பள்ளிவிலிகள் அடப்பனார் அருளப்பன் பேதுரு;

5. யாழ்ப்பாணம் கரையூர் அடப்பனார், சிதம்பரநாதன் இன்னாசி விஞசித்தம்பி;

6. „ ஊராத்துறை ஆதிரியின் சில்வெஸ்றர் பட்டங்கட்டி

என்போராம். இக்காலத்தில் மிகுந்த சம்பளங்களைப் பெறும் ஆங்கிலேய சாஸ்திர விற்பன்னர் வருடாவருடஞ் சோதித்தாலும், இன்ன வருடத்தில் முத்துக்குளிக்கலா மென வற்புறுத்திச் சொல்ல முடியாதிருக்கின்றனர். அக்காலத்தில் மூன்று வருடங்களுக்குமுன் செய்த சோதனையால் இன்ன வருடத்தில் குளிக்கலாமென்று சொல்லிய சுதேச தலைமைக்காரரின் அறிவு வியக்கத் தக்கதன்றோ!

ஜென் ஜார்விஸ் என்னும் யாழ்ப்பாண உதவிக் கலக்டர் அவ்வருடக் குளிப்பை 4,81,250 இறைசால் குத்தகையாக எடுத்திருந்துங், தைரியக் குறைவாற் கைசோரவிட, வண்ணை வயித்திலிங்கச் செட்டியாரே 5,62,500 இறைசாலாக வெடுத்து நடத்தி அதில் மூன்று பங்கு நயம் பெற்றனர். அடுத்த வருடம், அவ் வயித்திலிங்கச் செட்டியாருங் கந்தப்பச்செட்டியாருஞ் சேர்ந்து 10,31,250 இறைசாலாக எடுத்துப் 13,50,000 இறைசால் பெற்றனரென அறியக்கிடக்கின்றது.

அதற்குப்பின், 1798லும், 1799லும், 1803 தொடக்கம் 1809 வரையுங் குளிப்புகள் நடந்தன. 1803ல், குளிப்பு, கள்ளச் சலாபத்தில் நடந்தது. 1804ல், குத்தகைக் காரராகிய வயித்திலிங்கச் செட்டியாருக்கு அதிக நஷ்டம் உண்டானதை அரசினர் அறிந்து நட்ட ஈடாகக் குத்தகைப் பணத்திற் கழிவு கொடுத்தனர்.

இக்குளிப்புக்களில் கடல் கட்டிகளெனுஞ் சுறுவாய் கட்டும் மந்திரவாதிகள் அரசாட்சியாரிடம் நாளொன்றுக்கு ஒரு இறைசால் சம்பளம் பெற்றுத் தந்தொழில் நடத்திவந்தனர். அவர்களிற் சிலர் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களானபடியால், அத்தொழில் மார்க்க விரோதமான தென்று அவர்கள் குருமாரால் தடுக்கப்பட்டாலும், அரசாட்சியார் குருமாரை அவ்வாறு தடுக்காதொழிவித்து, மந்திரத் தொழிலை நடப்பித்தே வந்தனர்.

1805 ல் வயித்திலிங்கச் செட்டியார் 18,200 இறைசாலாகக் குத்தகை கொண்டனர். அவ்வருடத்திலே இலங்கைத் தேசாதிபதியாயிருந்த சேர் தோமஸ் மேற்லன்ட் (Sir Thomas Maitland)

என்பவர் (Doric) என்னும் அரிப்புக்கோட்டையை முத்துக்குளிப்பு நடக்கும் காலத்தில் தேசாதிபதியின் விடுதிவீட்டுக்காகக் கட்டுவித்தார்.

1796-ம் வருடக் குளிப்பில் அதிகாரியாயிருந்த றபேட் அலக்ஸான்டர் (Robert Alexander, Supdt. of Pearl Fishery) என்பவர் ஒல்லாந்தர்காலக் குளிப்புக்களில் எந்தெந்தக் கோயில்களுக்குச் சலாக்கியங் கொடுக்கப்பட்டதெனக் கேட்டபோது, 1766-ம், 1767-ம், 1768-ம் வருடக் குளிப்புக்களில் எவ்வித சலாக்கியமும் எக்கோயில்களுக்குங் கொடுக்கப்படவில்லையென யாழ்ப்பாணக் கலக்டர் அறிவித்தனர். ஆனாலும், அதனைத் தீர விசாரியாது, கோயிலதிகாரிகளின் வேண்டுகோளுக்கிணங்கி, ஆங்கில அரசாட்சியார் சில கோயில்களுக்கும், பள்ளிவாசல்களுக்குஞ் சில உரிமைகள் கொடுத்தேவந்தனர். 1799-ல் இராமேச்சுரத்துக்கு 2 தோணியும், திருப்புல்லாணிக்கு 1 தோணியும், திருவுத்தரகோசமங்கைக்கு 1 தோணியும், திருச்செந்தூருக்கு 1 தோணியும், நாகூர் பள்ளிவாசலுக்கு 2 தோணியுங் கொடுக்கப்பட்டுக் குளித்ததாகத் தெரிகிறது. 1806-ல் ஆவுடையார் கோயிலுக்கும் 1 தோணி கொடுக்கப்பட்டது.

குளிகாரர் தாங்கள் குளிக்குஞ் சிப்பிகளில் நாலிலொன்று தங்கள் வேதனமாகப் பெற்று, அதில் தோணித் தண்டலுக்கும், இராமேச்சுரம் கோயிலுக்கும், நாகூர்ப் பள்ளிவாசலுக்கும் ஆறிலொன்றும், சுறு மாந்திரீகனுக்கும், குத்தகைக்காரனுடைய சேவகனுக்கும் பத்துப் பத்துச் சிப்பிகளும், தோணியிலுள்ள மற்றெவ்வொருவருக்கும் 20 சிப்பிகளுங் கொடுத்துவந்தனர்.

அக்காலக் குளிப்புக்களில், மானிப்பாய் சுவாமிநாதப்புலவர் தம்பியும், சட்டநிரூபணசபை அங்கத்தவராயிருந்த எதிர்மன்னசிங்கமுதலியாரின் சிறியதந்தையுமாகிய முத்துச்சாமியாபிள்ளை என்பவரும் இடையிடையே சில ஆண்டுகள் முத்துக்குளிப்பைக் குத்தகையாக எடுத்து நடத்தினர்.

அரசாட்சியார் கோயில்களுக்குக் கொடுத்த உரிமைகளை 1835ல் நீக்கிவிட்டனர். ஆனால், கோயில் அதிகாரிகள் பழைய சீட்டுக்களைக் காட்டித் தங்கள் சுதந்தரத்தை அவ்வாறு அழிப்பது அநியாயமெனக் கூக்குரலிட்டனர். அதனைக் கேட்டு, அவ்விவகாரத்தைத் தீர்க்கமாக விசாரிக்கும்படி நியமிக்கப்பட்ட ஜோர்ஜ் லீ (George Lee) என்னும் இலங்கைச் சிவில் உத்தியோகத்தர்

இரண்டு வருடங்களாகச் சாட்சிகளை விசாரித்தும், பலசாதனங்களைப் பரிசோதித்தும், ஒல்லாந்தர் காலத்திலே அவ்வித உரிமை ஒரு கோயிலுக்குங் கொடுக்கப்பட்டிருக்கவில்லை யென்றும், அவ்வாறு கோயில்கள் உரிமை பெற்றிருந்தால், இந்திய தலைவர்களுக்கு விடப்பட்டிருந்த சுதந்தரங்களில் அவைகள் கொடுக்கப்பட்டிருத்தல் வேண்டுமென்றும், ஆங்கிலவரசாட்சியார் துவக்கத்தில் இவ்வுரிமைகளுக்கு இடங்கொடுத்தது தப்பிதமென்றும், 1838ம் வருடம் ஆடிமாசத்தில் அறிக்கை செய்தனர். அதன்பின்* 1855ல் நடந்த குளிப்பிலாவது அதற்குப் பிந்திய குளிப்புகளிலாவது கோயிலதிகாரிகள் தங்கள் சலாக்கியங்களைப் பெறுதற்கு முயலாது விட்டனர்.

1796 க்கும் 1837 க்குமிடையில், 19 முறை குளிப்பு நடந்து அரசாட்சியாருக்கு வந்த வருமானம் 10,00,000 பவுண் ஆகும். கூடிய தொகை 1798-ல் 1,92,000 பவுணும், குறைந்த தொகை 1832-ல் கல்பிட்டியில் குளித்தபோது கிடைத்த 4000 பவுணுமாகும்.

1857-ல் மிகவும் நீடியகாலம் குளிப்பு நடந்தது. அவ்வருடத்தில் முத்துச்சிப்பிகளின் வளர்ச்சியையும் முத்துக்களுண்டாகும் விதங்களையும் பரிசோதிக்கவும் ஆராய்ச்சிசெய்யவும், டக்டர் கெலாட் (Dr. Kelaart) என்பவர் 100 பவுண் சம்பளத்துடனும், நாளொன்றுக்கு ஒருபவுண் விடுதிச்செலவு (Batta) டனும் நியமிக்கப்பட்டனர்.

1858-ம் ஆண்டுக் குளிப்பிற் பேதிநோயுண்டாகிப் பலவழியிலும் அழிவுசெய்தது. அதன்பின், பேதிநோயுண்டாகாது தடைபண்ணுவதற்குக் குளிப்புக்காலத்துக் கழிவுச்சிப்பிகளைச் சுட்டு நீறுக்கவேண்டியதே சாலுமென அவ்வருடத்துக் குளிப்புத் தலைவராகிய (Superintendent) வேன் (Vane) என்பவரும், ஜோன் காப்பர் (John Capper) என்பவரும் அரசாட்சியாருக் கறிவித்தனர். ஆனால், அவர்களுடைய அபிப்பிராயப்படி நடந்ததைப்பற்றித் தெரியவில்லை. அதன்பின், இடையிடையே பல வருடங்களில் பேதிநோய் உண்டாகித் தொகைதொகையானோரைக் கொள்ளை கொண்டதென அறியக்கிடக்கிறது.

1859-ல், இரு ஐரோப்பிய குளிகாரர் சுதேசிகளுக்கு ஐரோப்பிய மாதிரி உடுப்புப்போட்டு நீரில் மூழ்கிக் குளிக்கப் பழக்குவ

* 1837 தொடக்கம் 1855 வரை குளிப்பில்லை.

146

தற்காகக் கொண்டுவரப்பட்டனர். பின், 1862லும் வேறிருவர் கொண்டுவரப்பட்டும், அவ்வித குளிப்பினால் செலவதிகப்பட்டதேயொழிய நயமொன்றுமில்லையெனக் கண்டு, அது கைவிடப்பட்டது.

1860-ல், தலைமைக்காரருக்கு இருந்த சலாக்கியங்களை நீக்க வேண்டுமென்று ஆலோசிக்கப்பட்டு, 1861-ல் மன்னார் அதிகாரத்தைத்தவிர ஏனையோர்க்கு முத்துச்சிப்பிகள் இனாமாகக் கொடுத்து வந்த சலாக்கியம் நீக்கப்பட்டது.

1862-ல், ஐந்து சுதேச சுக்கானிகள் (Coxwains) வருடம் ஒன்றுக்குப் 12 பவுண் தொடக்கம் 18 பவுண்வரை சம்பளத்துடனும், சிப்பிச்சோதனைகாலங்களில் விடுதிச்செலவுடனும் நியமிக்கப்பட்டனர். இவர்களே குளிகாரருங் களவுசெய்யாது மேற்பார்த்துவந்தனர்.

1873-ல், முத்துக்குளிப்பின் உபயோகத்திற்காகப் 13,782 ரூபாய்க்கு ஒரு புகைக்கலம் வாங்கப்பட்டது.

1888-ல், முத்துச்சிப்பிப்பார்களைக் காவல்செய்வதற்கு ஒரு புகைக்கப்பலும் ஒரு பாய்க்கப்பலும் விலைக்கு வாங்கி, குளிப்பில்லாத காலத்தில் இலங்கை வாலிபரைச் சுழியோடப் பழக்கினால், இரண்டு வருடங்களில் 200 அல்லது 300 இலங்கை வாசிகள் முத்துக் குளிப்பதற்கு உபயோகப்படுவார்களெனத் துவைனம் எசண்டர் அரசாட்சியாருக் கறிவித்தும், அவர்கள் அதைப்பற்றிக் கவனமெடுத்ததாகத் தோற்றவில்லை.

1889-ல், பறங்கிக்குடாவில் (Dutch Bay) முத்துக்குளிப்பு நடந்தது. அவ்வருடத்தில், என்றுமில்லாத மும்முரத்துடன் பேதி நோய் உண்டாக, அதனால் அநேகர் மாண்டனர். சேரண்டிப் (Serendib) என்னும் புகைக்கப்பல் சப்பித்தானும் அந்நோயால் இறந்தனன்.

1889லும், 1890லும் மன்னார்க்குடாவிலுந் தூத்துக்குடியிலும் முத்துக்குளிப்பு நடந்தது. குளிப்பவர் தொகை ஈரிடத்துங் குறைந்தபடியால், இனிமேல் அப்படி நடக்கச் சந்தித்தால், தூத்துக்குடியில் பெப்ருவரிமாசம் 1-ந் தேதி தொடங்கி மார்ச்சுமாசம் முதற்கிழமையில் முடியவும், மன்னாரில் மார்ச்சுமாசம் இரண்டாங் கிழமையில் தொடங்கி நடக்கவும்வேண்டுமென்று துவைனம் எசண்டர் எழுத, அதனை இருபக்கத்தாரும் ஏற்றுக்கொண்டனர்.

1891-ம் வருடத்திற்குமுன், வருடாவருடம் நடந்த குளிப்புக்களில் கிடைத்த நயத்திற்கும், குளிப்புக்களை நடத்தின சர்மர்த்தியத்திற்கும் ஒவ்வொரு வருடமும் துவைனம் ஏசண்டர் தேசாதிபதியினால் புகழ்ந்து பாராட்டப்பட்டதுமன்றி, அரசாட்சியாரின் நன்றியறிதலுக்கும் பாத்திரமாயினர்.

ஆங்கில அரசாட்சி தொடங்கியபின், இடையிடையே நீண்ட காலங் குளிப்பில்லாதிருந்தது. 1837 தொடக்கம் 1855 வரை 18 வருடகாலமும், 1864 தொடக்கம் 1873 வரை 9 வருட காலமும், 1891 தொடக்கம் 1902 வரை 11 வருடகாலமுங் குளிப்பில்லை. ஆகையால், இவ்விபரீதத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி புரொவெஸ்ஸர் ஹேட்மன் (Professor Herdman) நியமனம் பெற்றனர். 1902-ல் அவர் ஜே. ஹோணெல் (J. Hornell) என்னும் ஒருவருடன் சென்று, மூன்று மாசங்கள் ஆராய்ச்சிசெய்தும் முடிவுறாது, இன்னுஞ் சோதனை செய்யவேண்டுமென்று ஹோணெல் என்பவரை ஆங்கிருத்திப் போயினர்.

1905-ல், இலங்கைத் தேசாதிபதியாயிருந்த ஸேர் வெஸ்ற் றிட்சுவே (Sir West Ridgeway) என்பவருஞ் சேர்ந்தவொரு ஆங்கிலக் கம்பனிக்கு, முத்துச்சலாபம் குத்தகையாகக் கொடுக்கப்பட்டது. அவர்கள் இரண்டுவருடம் தொழில் நடத்தினர். 1907-ல், அக்கம்பனியார் தங்கள் பொருத்தத்தை ஒருவாறு நீக்கிக்கொண்டு சென்றனர். அதன்பின் 1925 வரை குளிப்பு நடக்கவில்லை.

மேற்சொல்லிய ஆராய்ச்சியாளராகிய ஹேட்மன், ஹோணெல் என்னுஞ் சாஸ்திரவிற்பன்னர் சுறு, திருக்கை முதலிய பெரிய மீன்களாலும், கடல் நீரோட்டத்தினால் கொண்டுவரப்படும் மணலினாலும் முத்துச்சிப்பிகள் அழிந்துபோகின்றனவென்றும், இக்காரணங்களைத் தடுப்பதற்கு வழியில்லையென்றும் அறிக்கைசெய்தனர். சுறு திருக்கைகளின் வாயைக் கட்டவும், மணலைக் கொண்டுவரும் நீரோட்டத்தைத் தடுக்கவும் இக்காலத்தில் மந்திரம் இல்லைப் போலும்.

———

வித்துவசிரோமணி
ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்கள்*

1. இளமைப்பருவம்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று."—திருவள்ளுவர்.

திருநிறைந்தோங்கு யாழ்ப்பாணமாதாவின் செல்வப்புதல்வராகிய இவர், பல வித்துவான்களுக்கு உறைவிடமாயிருந்த நல்லூரிலே வைசியகுலம் விளங்கவந்தவதரித்த ஸ்ரீ சரவணமுத்துச் செட்டியாரவர்களது அருந்தவத்தினால் 1836-ம் ஆண்டு ஏவிளம்பி வருஷம் சித்திரை மாதம் 24-ந் தேதி ஜெனனமானார். இவர்களது தாய் மரபு, கார்காத்த வேளாளர் குலத்திலே, பாண்டி மழவர் குடியிலே, சிவஞானச்செல்வராய் இந்தியநாடெங்கும் பெருங்கீர்த்தி வாய்ந்த ஞானப்பிரகாச முனிவரைத் தன்னுளடக்கிய பெருந்தகை வாய்ந்தது. இச்சரித்திரத்தலைவராகிய பொன்னம்பலபிள்ளையவர்கள் சிறுவயசாய் இருக்கும்பொழுதே அவருடைய தந்தையார் தேகவியோகமாயினர். அக்காலத்து, அரசாங்க உத்தியோகமும் அதிகாரமுங் கீர்த்தியும் பெருந்தகைமையும் வாய்ந்த அவரது மாதுலர்களால் செவ்வே வளர்க்கப்பட்டார். தமிழ் நாடெங்குஞ் சைவசமயம் பரவி மேலோங்குதற்குத் தமது உடல் பொருளாவி மூன்றையும் ஒப்புக்கொடுத்தவரும், செந்தமிழ்ச் சபாசிங்கமென எங்கும் பெருங் கீர்த்திவாய்ந்தவருமாகிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இவரது மாதுலர்களுள் ஒருவராகும். இவருடைய தந்தையாராகிய ஸ்ரீ சரவணமுத்துச் செட்டியார், நாவலரவர்களது மூத்த சகோதரியை மணந்து ஒரு புதல்வனையும் மூன்று பெண்மக்களையும் பெறுவாராயினர். சிலகாலத்தின்பின், மனைவியாரும் பின்னுஞ் சிலகாலத்துள் இவரது ஏகபுத்திரனும் இறந்துவிட்டனர். ஆண்குழந்தை இல்லையே என்னுங் கவலையினால் தமது அறுபதாம் வயதில் நாவலரவர்களது இளைய தமக்கையாரை மூன்

* காலஞ்சென்ற திரு. மா. சிவராமலிங்கபிள்ளை அவர்கள் எழுதியது.

றாந் தாரமாக மணந்து, அத்தாரத்துக்கும் ஓர் பெண்குழந்தை பிறந்த பின், மழைமுகங் காணாது வாடிய பயிரானது பெருமழை யைப் பெற்றாலென்ன இவரைப் புத்திரராகப் பெறும் பாக்கியத் தைப் பெற்றார்.

இவரது கிரகநிலை பின்வருமாறு:

	சூரியன் சந்திரன் வெள்ளி இராகு	புதன்	
குளிகன்			வியாழன் செவ்வாய்
ல.	பரணி ௩-ங்கால்		
		சனி கேது	

மகர லக்கினம்.

இவருக்குப்பின், ஒரு பெண்ணும் ஓர் ஆண்குழந்தையும் பிறந்தன. அப்புத்திரர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இருபாஷையிலும் தக்க பாண்டித்திய மடைந்து நெடுங்காலம் இந்தியாவில் நியாயவாதி யாயிருந்த ஸ்ரீமத். ந. ச. சிவசிதம்பரபிள்ளை அவர்களாகும்.

II. வித்தியாரம்பம்

ஸ்ரீ சரவணமுத்துச் செட்டியாரவர்களது அருந்தவத்தினாலே ஜெனனமான குழந்தையானது சிறுவயசாயிருக்கும் பொழுதே புத்திசாலித் தனமும் பேரழகுமுடையதா யிருந்தது. அக்காலத் திலேயே இச்சிறுவனைக் கண்ணுற்றோர் யாவரும் வருங்காலத்திற் கீர்த்தி படைத்த கல்விமானாய்த் தன் குலத்தை மேலோங்கச் செய்குவான் எனக்கூறி மகிழ்வார்கள். வித்தியாரம்பஞ் செய்தற் குரிய பருவமான

ஓங்குமைந் துபிராயம்வந் துற்றிடத்
தாங்குமைந் துதருங்கலை
தோங்குமைந் துறத்தோன்றுநல்லோரையி
லாங்குமைந்தருளாரவமைத்தனர்.

150

இவர் பாலியதசையிலேயே அந்நாளில் நல்லூரிற் சிறந்த கல்விமானும் நைஷ்டிகப் பிரமசாரியாயுமிருந்த கார்த்திகேய உபாத்தியாயர் என்பவரிடம் நிகண்டு இலக்கணம் வாக்குண்டாம் முதலிய நீதிநூல்களையும் கற்றார். அதன்பின், தமது மாமனாராகிய ஆறுமுகநாவலரவர்களிடம் நன்னூற்காண்டிகையுரை, விருத்தியுரை, திருவள்ளுவர்-பரிமேலழகர்உரை, திருவிளையாடற்புராணம், கந்தபுராணம், பாரதம், இராமாயணம், தொல்காப்பியத்துக்கு நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர் ஆகிய மூவரது உரைகள், தொல்காப்பிய சூத்திர விருத்தி, இலக்கணக்கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி முதலிய நூல்களையும் இன்னும் பல சங்க நூல்களையும் சந்தேகவிபரீதமின்றிக் கிரமமாகக் கற்றார். இவருடைய தந்தையார் இறக்கும்பொழுது இவருக்கு வயசு பன்னிரண்டு. அவர் தமது மரணகாலத்துத் தம்முடைய மனைவியாரையும், பிராயமற்ற பிள்ளைகளையும், ஏராளமான சொத்துக்களையும் தமது மைத்துனர் ஒருவரிடம் ஒப்பித்து மனைவிமக்களையும் பொருள்களையும் செவ்வே பாதுகாக்கும்படி வேண்டிக்கொண்டார். அவரது மரணத்தின்பின் நமது பொன்னம்பலபிள்ளை தங்கள் பொருள்களிற் சில அதிக செலவாதலைக் கண்டு குடும்பக்கவலை யுண்டாய் அதை வெளியே காட்டாது, கல்விகற்பதிற் பராமுகமாகவிருந்தார். இதனால் மற்றொரு மாதுலராகிய ஆறுமுகநாவலரவர்கள் இவர் கல்வியிற் கவனமில்லாதிருத்தலைக் கண்டு ஒருநாள் இவரை நன்றாகக் கண்டித்தார். அதன்பின் கோபம் சாந்தமானவுடன் இவரை விளித்து, "பிள்ளாய்! நீ செவ்வனே கற்கக்கூடிய விவேகியாய் இருந்தும், எதற்காகப் படிப்பிற் கவனமில்லாது வீண்பொழுது போக்குகின்றாய்" என்று வினவியபோது, அவர் எங்கள் குடும்பப் பொருள்களெல்லாம் வீண்செலவாகின்றனவே, நாங்கள் வறியவர்களாய்விடப்போகின்றோம் என்ற கவலையினால் படிப்பில் மனஞ் செல்லவில்லை. தாங்கள் அடியேனுடைய குற்றத்தைப் பொறுத்துக் கொள்ளுங்கள் என்று வேண்டிக்கொண்டார். அதைக் கேட்டவுடனே நாவலர் தமக்கு இயல்பா யமைந்துள்ள சிவகாருண்யத்தினால் அழலிடைப்பட்ட வெண்ணெய்போ லுருகி அவரைக் கட்டித்தழுவி "தம்பி! நான் இருக்கின்றேன்; நீ ஒன்றுக்கும் வருந்த வேண்டாம்; இன்றுமுதற் படிப்பிற் கவனஞ் செலுத்துவாய்" எனக் கூறி, அன்றுமுதல் அவர்மீது அன்புகொண்டு தாமே கிரமமாக மேலே கூறிய நூல்களைக் கற்பித்துச் சிறந்த வித்துவசிரோமணியாக விளங்கச்செய்தனர்.

151

III. போதகாசிரியர்

நமது பொன்னம்பலபிள்ளை அவர்கள் தமது இளம்பிராயந் தொடங்கி மரணபரியந்தம் கல்வி கற்பதிலும், அதனை மாணவர்களுக்குப் போதிப்பதிலுமே மனத்தைச் செலுத்திவந்தார். அக்காலத்து அரசினர் இவருக்கு நொத்தாரிசு உத்தியோகம் கொடுத்தார்கள். இவர் மாதுலர்கள் கௌரவமான அரசாங்க உத்தியோகத்தர்களாக இருந்ததாலும், இவர் எவரும் மதிக்கத்தக்க பேரழகு உடையராயிருந்ததாலும் இவருடைய பந்துக்களுள் இவரது பேரழகையும் வித்துவத்தன்மையையும் உணர்ந்தவர்கள் இவருக்குப் பெண் கொடுப்பதாக முன்வந்தும், இவர் கல்விமீது கொண்ட பேராசையினுல் இல்லறவாழ்க்கை அதற்கு இடையூருக விருக்குமெனத் துணிந்து அவ்வாச்சிரமத்தை வெறுத்துப் பிரமசாரியாகவே இருந்து விட்டார்.

நமது பொன்னம்பலபிள்ளை அவர்களது கல்வித்திறமையையும், மாணவர்களுக்குப் போதிக்கும் ஆற்றலையும் உணர்ந்த அறிஞர்கள் இவருக்கு வித்துவசிரோமணி என்னும் கௌரவப் பட்டத்தைச் சூட்டினுர்கள். இவர் தேகவியோகமாகி ஏறக்குறைய இருபத்தாறு வருடமாகியும் வித்துவசிரோமணி என்ருல், நாவலரவர்களது மருகராகிய ந. ச. பொன்னம்பலபிள்ளையே என்பது இந்தியா இலங்கை என்னும் இரண்டிடத்தும் உள்ள கல்விமான்களது எண்ணத்தில் சிலையிலெழுத்தாக விளங்குகின்றது. இவர் தமது மரணபரியந்தம் அநேக மாணவர்களுக்குக் கல்வி கற்பிப்பதே விரதமாகக் கொண்டிருந்தார். இவரிடத்துக் கற்ற மாணவர்களெல்லோரும்—உயிரோடிருப்பவர்களும் இறந்துபோனவர்களும்—சிறந்த வித்துவான்களாகவே விளங்குகின்ருர்கள். இவரது போதனு சத்தியின் அருமையும், புராண இதிகாச இலக்கண இலக்கியங்களின் நுண்பொருளுணர்த்தி இனிது போதிக்கும் அருமையும் பெருமையும் இத்துணைத்தெனக் கூற முடியா. இப்பொழுது சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலைமைப் போதகாசிரியராயிருப்பவரும், திருவாதவூரடிகள் புராணம், அபிராமியந்தாதி, புலியூரந்தாதி என்னும் நூல்களுக்கு எவர்களும் உச்சிமேல் வைத்து மெச்சும்படியான சிறந்த உரைகளை எழுதியவரும், 'ஈழமண்டல சதகம்' என்னும் நூலை ஆக்கியோரும் சிறந்த வித்துவானுமாகிய ஸ்ரீமத் ம. க. வேற்பிள்ளை ஆசிரியரவர்கள் இவரது மாணவராவர். இந்த ம. க. வேற்பிள்ளை ஆசிரி

152

யரவர்கள் தாம் இயற்றிய ஈழமண்டல சதகத்தில் தமது ஆசிரிய ரைக் குறித்துக் கூறியதை ஈண்டுத் தருகின்றேன். அது வருமாறு:—

"பொன்னம் பலப்பெயர்ப் புட்கலா வர்த்தம்
புராதன நியாயோததி
புகழ்சங்க லக்கியப் புணரிரா மாயணப்
பொருவறு மளக்கர்புவியிற்
றன்னித் தூலங்கியலி சூதஞெலி மாலையாந்
தொல்பயோ ததிகாவியத்
துங்கவார் கவிபார தப்பரவை லக்கணத்
தொடுகடல்க டுய்த்தெழுந்தே
மன்னித் திடுக்கிட விடித்தியாழ்ப் பாணகிரி
மீதேறி நல்லைமுடிமேன்
மேவிப் படிந்துசெந் தமிழ்மேதை நிதிமாரி
மிகவும் பொழிந்திட்டதிச்
சன்மத்து வித்தியார்த் திப்பயிர் தழைத்திடச்
சாந்தநா யகிசமேத
சந்த்ரமௌ லீசனே யைந்தொழில் விலாசனே
சந்த்ரபுர தலவாசனே.

இன்னும், சடைகளிலே புராண இதிகாசங்களுக்கு இன்றி யமையாத வியாக்யானமும் உபந்நியாசங்களும் செய்யும் ஆற்றலு டையவரும், நமது சரித்திரத் தலைவரவர்கள் மருகரும், இலங்கை அரசினராற் சிறந்த வித்துவானென மதிக்கப்பட்டுப் பணப்பரிசு பெற்றவருமாகிய ஸ்ரீமத். சிவ. இ. மாரிமுத்து உபாத்தியாயரவர்க ளும், சிறந்த சிலேஷார்த்தங்கள் அடங்கப்பெற்ற அந்தாதிக ளுக்கு நுண்பொருள் கூறி விளக்கவல்லவரும், பொன்னம்பல பிள்ளை அவர்கள் புராணப்பிரசங்கஞ் செய்த இடங்களிலெல் லாம் சென்று அவரது வியாக்கியானத்துக்கு வாசிக்கும் ஆற்றல் அமைந்தவரும், புராண இதிகாச இலக்கண இலக்கியங்களில் வல்லவரும், அவைகளைப் போதிக்கும் ஆற்றல் அமைந்தவரும் ஆகிய பிரமஸ்ரீ. ஐ. சிவசங்கரஐயர், பொன்னுத்துரை ஐயரவர்க ளும் இவரது மாணவராவர். இன்னும், சிதம்பரம் சைவப்பிர காச வித்தியாசாலைத் தருமபரிபாலகராயிருந்தவரும் இவரது மரு கரும் ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் எழுதத் தொடங்கி இடையில் நின்றுவிட்ட கந்தபுராண வசனத்தையும் எழுதிப் பூர்த்தி செய்து, நாவலரவர்கள் வசனத்துக்கும் இவரது வசனத்துக்கும் யாதொரு வித் தியாசமு மில்லையென வித்துவான்களால் பாராட்டப்பட்டவருமாகிய

ஸ்ரீமத் ச. பொன்னம்பலபிள்ளை யவர்களும் இவரது மாணாக்கராவர். இன்னும், யாழ்ப்பாணத்தில் நாவலராவர்கள் சைவப்பிரகாசவித்தியாலைத் தருமபரிபாலகரும், பலநூல்களுக்கு ஆசிரியரும், சைவசித்தாந்த சாஸ்திரங்களில் வல்ல பண்டிதரும், சமஸ்கிருதம் ஆங்கிலம் என்னும் இருபாஷைகளில் வல்லவரும், நாவலரவர்கள் தமையனார் குமாரரும் ஆகிய ஸ்ரீமத். த. கைலாசபிள்ளையவர்களும் இவரது மாணவராவர். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ்ப் பண்டிதரும், சமயாபிமானியும் சிவபக்திமானும் ஆகிய ஸ்ரீமத். ஆ. மு. சோமாஸ்கந்த பிள்ளையவர்களும் இவரது மாணவராவர். சைவ சமயாசாரியர்களால் அருளிச் செய்யப்பட்ட தமிழ் வேதமாகிய தேவாரங்களை அரும்பிரயாசைகொண்டு பரிசோதித்துச் சுத்தப் பதிப்பாக அச்சிட்டுப் பிரசுரஞ்செய்தவரும், சென்னைமுதல் யாழ்ப்பாணம் ஈறாகத் தமிழ் வித்துவானுமாக விளங்கும் ஸ்ரீமத். சி. சுவாமிநாத பண்டிதரவர்களும் இவரது மாணவராவர். இங்குச் சிறந்த வியாபாரியாய்ச் செல்வப்பெருக்கும் சீரிய வாழ்க்கையும் பெற்றுச் சிறந்த வித்துவானாக விளங்கிய ஸ்ரீ. வை. சி. சிவகுருநாதபிள்ளை அவர்களும் இவரது மாணவராவர். சித்தாந்த சாஸ்திரங்களில் வல்லராய், ஆங்கில பாஷையைக்கற்றுக் கௌரவமும் அதிகாரமும் பொருந்திய அரசாங்க உத்தியோகஸ்தராய் இருந்து, முதலியார் என்னும் பட்டம் பெற்றவரும், நெடுங்காலம் 'உதயபானு' 'இந்துசாதனம்' என்னும் பத்திரிகைகளில் சமயவிஷயமாகவும் சமய சாஸ்திர விஷயமாகவும் சிறந்த வியாசங்களைக் "குகதாசன்" என்னும் புனைபெயருடன் காலத்துக்குக்காலம் எழுதிவந்தவரும், பல அரிய நூல்களுக்கு ஆசிரியருமாகிய ஸ்ரீமான். சு. சபாரத்தின முதலியாரவர்களும் இவரது மாணவராவர். மதுரை நான்காந்தமிழ்ச் சங்கத்தார் பிரசுரஞ் செய்து வரும் "செந்தமிழ்" என்னும் சஞ்சிகையில் காலத்துக்குக்காலம் அரிய வியாசங்களைப் பிரசுரஞ் செய்துவருபவரும், யாழ்ப்பாணத்திருந்த தமிழரசராகிய பரராசசேகர மகாராசாவின் மருகராகிய அரசகேசரி என்பவரால் இயற்றப்பட்டு, தமது ஆசிரியராகிய பொன்னம்பலபிள்ளை அவர்களால் அச்சிடப்பட்டதும் ஆழ்ந்த கருத்தமைந்ததுமான 'இரகுவம்சம்' என்னும் நூலின் ஓர் பகுதிக்குச் சிறந்த உரையெழுதி வெளியிட்டவரும் ஆகிய பிரமஸ்ரீ சி. கணேசபண்டிதரவர்களும் இவரது மாணவராவர். இன்னும், யாழ்ப்பாணம் வடகோவையை ஜெனனஸ்தானமாகக் கொண்டு திருச்சிற்றம்பலயமகவந்தாதி, சிதம்பர சபாநாதபுராணம் முதலிய

பல நூல்களுக்கு ஆசிரியரும், தமது வித்துவத் திறமையினால் திருவாவடுதுறை ஆதீனத்துப் பண்டாரச்சந்நதி அவர்களால் "நாவலர்" என்னும் சிறந்தபட்டம்பெற்றவரும் ஆகிய ஸ்ரீமத். சு. சபாபதிநாவலரவர்களும் இவரது மாணாக்கராவர். இன்னும், இந்தியாவைச் சேர்ந்த உரத்தூர் ஸ்ரீமத். கோ. வைத்நியலிங்க பிள்ளையவர்களும், திருவாவடுதுறை ஆதீனஸ்தர்களாகிய பொன்னு ஓதுவார், சுப்பிரமணிய ஓதுவார், காரைக்குடி சொக்கலிங்கச் செட்டியாரவர்களும், பழனி - குமாரசாமித் தம்பிரானவர்களும் இவரது மாணாக்கர்களாவர்.

[இக்கட்டுரை சில ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டதாகும். வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலபிள்ளை அவர்களுடைய வரலாறு இந்நாளில் உள்ளாரால் ஒருவாற்றான் அறியப்படவேண்டுமென்றே இது வெளியிடப்பட்டது.—இதழாசிரியர்]

155

பாடசாலைகளில் இலக்கியக் கல்வி

யாழ்ப்பாணம் தலைமைத் தமிழ் வித்தியாதரிசி
(*Chief Inspector of Tamil Schools, Jaffna*)
பிரமஸ்ரீ தி. சதாசிவ ஐயர் அவர்கள் எழுதியது

பாடசாலைகளில் இலக்கியமும் ஒரு பாடமாகக் கற்பித்தற்குரியது என்னும் விதி இப்போது வழக்கிலுள்ள பாடவிதானத்திற் காணக்கிடப்பது. அவ்விதிபற்றிப் பாடசாலைகளில் இலக்கியம் என்பது ஒரு பாடமாக வைத்துக் கற்பிக்கப்பட்டுவருகின்றது. அதனல் அது கற்பிக்கும் நோக்கமும் முறையும் பயனும் என்னும் இவைபற்றிச் சிறிது ஆராய்வாம்.

அறம், பொருள், இன்பம், வீடு என்னு நால்வகைப் பொருள்களுள் ஒன்றனையேனும் பலவற்றையேனும் நானாவித வருணனைகளோடு சிறப்பித்துக் கூறும் நூல் இலக்கியம் எனப்படும். இலக்கியம் எனினும் காவியம் எனினும் ஒக்கும். இலக்கியம் பெரும்பான்மையும் குறிப்புச் சொற்களும் குறிப்புப் பொருளும் மிகுந்து வருவதென்பது. பொருளாழமின்றி வெளிப்படையான சொற்களால் ஆக்கப்படுவன சிறந்த இலக்கியமென மதிக்கப்படாவாம். குறிப்புச் சொற்களும் பொருள்களும் விரவிய இலக்கியங்களே தமிழ் அறிஞர்களால் உவந்து கொண்டாடப்படுவன. தமிழில் உள்ள பழைய காவியங்கள் எல்லாம் இவ்விதமாகிய பெருஞ்சிறப்புடையன. புலவனுடைய அறிவு உலக இயற்கையழகிற் படிந்து அதன்வண்ணமாய்த்திரிந்து தெளிவுற்று விளங்கும்போது, அப்புலவன் மனத்திற் சுரந்து பொங்கும் அரிய பெரிய கருத்துக்களை அறிய நாம் அவாவுகின்றோம். அக்கருத்துக்களை அழகாகக்கோத்து இன்னோசை புணர்த்திச் சொல்லும் பாட்டே மக்கள் மனத்திற்கு மகிழ்ச்சி தருவதாகும். இங்ஙனம் இயற்றப்படும் பாட்டுக்கள் இயற்கையழகுடன் பொருந்திப் படிப்பவர்களுக்கு மிக்க சுவை விளைக்கும் என்பது நன்கறிந்தது.

தன் மனத்துதித்த உயரிய கருத்துக்களையும் தூய அறிவையும் சொற்கள் மூலமாக அழகுற வெளிப்படுத்திச் செய்யுள் செய்யும் நல்லிசைப் புலவனுக்கும், உலகவியற்கையினையும் உயரிய

கருத்துக்களையும் பலவகை வண்ணங்களால் வரைந்துகாட்டும் ஓவியக்கலை வல்லானுக்கும், மனத்திற்கொண்ட கருத்துக்களைக் கல் சுண்ணம் முதலியகொண்டு உருப்படுத்திக்காட்டும் சிற்பம் வல்லோனுக்கும் ஒற்றுமை மிக உண்டென்று அறிதல்வேண்டும். ஓவியம்வல்லான் வரைகின்ற சித்திரமும் சிற்பி இயற்றும் உருவமும் கட்புலனுடையார்க்கே பயன்றருவன. புலவன் இசைக்கின்ற பாட்டோ கண் முதலாகிய புலன்களினகத்தே விளங்கும் உள்ளத்திலே தோன்றிச் சுவை பயப்பதாகும் என்றறிக. புலவனுடைய பாட்டு அகக்கண்ணுக்கு விடயமாவதென்பது. ஓவியக்காரன் பலநாட்களாக வருந்திச் செய்துகாட்டும் ஒரு கருத்தை ஒரு புலவன் எளிதிற் சில சொற்களால் திறம்படச் சொல்லிக் கேட்போர் மனத்திற் பெருவியப்பினை விளைப்பான். அதனால், ஓவியக்காரன் வண்ணங்கலந்து வரைந்துகாட்டும் படம்போல, புலவனும் சொற்களைக்கொண்டு செய்யுஞ் செய்யுளும் ஒரு படமாகுமென்பது கருத்து. சித்திரப் படத்தையும், கைபுனை பாவையையும் புறக்கண்ணாற்கண்டு அறிந்து மகிழ்கின்றோம்; புலவனுடைய பாட்டாகிய படத்தை அகக்கண்ணாற் கண்டு களிக்கின்றோம். இவ்வாறு மனக்கண்ணாற் கண்டறிந்து இன்புறுதலே செய்யுள் படித்தலின் பயனெனக் கொள்ளல்வேண்டும். அவ்வாறே மாணாக்கரும் செய்யுளிலமைந்துள்ள படத்தை அகக்கண்ணாற்கண்டு அறிந்து இன்புறச்செய்தலே செய்யுள் படிப்பித்தலின் நோக்கமும் முறையுமென அறிதல்வேண்டும்.

மேலும், இலக்கியம் படிப்பிக்கும் ஆசிரியர் தம்மை ஒரு நூதனசாலைப் பாதுகாவலனாகவைத்துத் தம் மாணாக்கரை நூதனசாலை பார்க்கவந்தவராகக்கொண்டு அச்சாலையின் கதவைத்திறந்து அவரை உள்ளழைத்துச்சென்று அங்கிருக்கும் நூதனங்களைத் தேடிப்பார்த்து அறியும்படிவிட்டு, இடையிடையே "இன்னது இன்னது பார்த்தீரோ? இது என்னவென்று எண்ணுகின்றீர்? இங்கேயிருக்கும் இப்பொருள் உமக்கு ஆர்வம் விளைவிக்கக்கூடும்" என்றிவ்வாறு வழிகாட்டி நடத்தி அறியச்செய்தல் தக்க முறையாகும் என்ப. புலவன் சொல்லால் இயற்றிய படத்தை மாணாக்கனும் தன் மனோபாவனையால் ஒரு படமாகத் தன் அகக்கண்ணாற்கண்டு இன்புறுதல்வேண்டும்.

உதாரணமாக,

"தண்டலை மயில்க ளாடத் தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கண் முழவி னேங்கக் குவளைகண் விழித்து நோக்கத்

தெண்டிரை யெழினி காட்டத் தேம்பிழி மகர யாழின்
வண்டுக ளினிது பாட மருதம்வீற் றிருக்கு மாதோ"

என்பது புலவன் சொல்லால் தீட்டிய ஒரு சித்திரம். இதனை அன்னதாக அகக்கண்ணாற்கண்டு இன்புறுதலே இதனைப் படித்தலின் பயனாகற்பாலது. இதனை வண்ணமும் எழுதுகோலுங் கொண்டு சித்திரரூபமாய் வரைந்து காட்டுதலும், இதில் குறிப்புப் பொருளாய் உருவகிக்கப்படும் ஓர் அரசி கொலுவீற்றிருக்குங் காட்சியைப் படம்வரைந்து காட்டுதலும், செய்யுட்கருத்தை வெளிப்படையாகப் புலப்படுத்துவதென்ப தறிக.

பெரும் புலவனாக்கிய செய்யுட்களைப் படித்து அவற்றினுள்ளுறையாகிய படத்தை அகக்கண்ணாற்கண்டு இன்புறுதல் மாத்திரையோடமையாது அவ்விதமான செய்யுட்களைத் தாமும் நவமாய் இயற்ற விரும்புதலும் அவ்வாறு இயற்றுதலும் செய்யுள் படித்தலின் பயனாகக்கொள்ளல்வேண்டும். நவமாகச் செய்யுள் இயற்றல் தமக்கு முற்ற முடியாத செயல் என்னுங் கோழையெண்ணம் மாணாக்கர் மனத்தில் உதியாவண்ணஞ் செய்தலும் அவர்தமை அச்செயலில் ஊக்கப்படுத்துதலும் ஆசிரியர் கடனாகும். மாணாக்கரும் மற்றைப் பாடங்களை யடுத்துச் செய்கைமுறையில் பூமிசாஸ்திரப்படங் கீறியும், கட்டுரைகள் வரைந்தும், உருவங்கள் சித்திரித்தும், கதைகளை நடித்தும் பயின்று தேர்ச்சி பெறுவதுபோலப் புதிதாகப் பாட்டுக்கள் இசைத்துப் பயின்று வருதலும் ஏற்புடைத்தென்க. இவ்வித கவிச்சுவையின்பம் பெறுதலாய பயன் கைகூடும்படியாகச் செயற்பாலன எவையெனச் சிறிதாராய்வாம்:—

(1) செய்யுட்பயிற்சி இளமையிலே தொடங்கல் வேண்டும், இளமையிற்கல்வி சிலையிலெழுத்து என்றாராகலின். பாலர் வகுப்பு முதலாக உள்ள கீழ்வகுப்புகளிற் கற்கும் இளம்பிராயத்து மக்களின் இயல்புகளாய நூதனப்பிரியம், ஓடியாடுதல், பாடுதல், நடித்தல், மற்றவர் செய்வதைப் பார்த்துச் செய்தல், மிருகம், பறவை முதலிவற்றைப் பற்றிய கதைகள் கேட்கும் விருப்பம், மனோபாவனை பண்ணுதல் என்பவை முதலாகிய தன்மைகளுக்கேற்கச் சிறுச் சிறு பாட்டுக்கள் எளிய இலகுவான நடையிற் செய்யப்பட்டவை நிரம்பக் கற்பிக்கப்படுதல் வேண்டும். சிறியகதைகள் சம்பாஷணைகள் என்பவற்றை வெளிப்படையான செய்யுட்களாகப் பாடிக்கற்பித்தால், அவற்றையெல்லாம் சிறுவர்கள் மனக்களிப்போடு பாடி ஆடிக் கொண்

டாடிவர அவர்களுக்குச் செய்யுள் கற்றலில் ஆர்வங் கொள்ளுதலாகிய பழக்கம் உண்டாகும். மாணவரது வகுப்பும் வயதும் ஏறவேற அவர் கற்கும் பாட்டுகளும் பொருளாலும் நடையாலும் உயர்ந்துயர்ந்து செல்லும்.

(2) ஒரு செய்யுளிலுள்ள சிறப்பு, சொற்சிறப்புப் பொருட்சிறப்பு என இருவகையாகும். செய்யுட்களின் பொருளையுஞ் சிறப்பினையும் அறிந்து இன்புறுதற்குக் கருவியாயிருப்பது சொற்களை யறிதலென்பது. சாமானிய மனிதனொருவனது பேச்சில் வழங்குஞ் சொற்களிலும் கற்றுவல்லானொருவனது பேச்சில் வந்து வழங்குஞ் சொல்லீட்டம் பெரிதாகும். புலவர்களது செய்யுட்களில் வந்து வழங்குஞ் சொல்லீட்டம் அதனினும் மிகப்பெரிதாகும். அதனால், செய்யுள் கற்றுக் கவிச்சுவை பெறவேண்டுவோர் சொற்களை அறிதற்குக் கருவியாகிய நிகண்டு கற்றல் வேண்டும். இது பழைய முறையெனினும், இதுவே சிறந்த முறையென்பது அனுபவத்திற்கண்டது. நான்காம் வகுப்பிற்றொடங்கி வகுப்புக்கு ஒவ்வொரு தொகுதியாகக் கற்பித்தல் நன்மைபயக்கும் என்பதைத் தமிழபிமானமுள்ள ஆசிரியர் சிந்திப்பாராக. அந்தாதிநூல் கற்றலும் இந்நோக்கத்திற்கு அனுகூலமானதென்பதும் நோக்குக.

(3) கீழ்வகுப்புகளில் தனிச்செய்யுட்களும் செய்யுட்டிரட்டுகளுங் கற்பித்தல் பொருந்தும்; மேல் வகுப்புகளில் ஏதும் ஒரு சிறு நூல் முழுவதையேனும் ஒரு நூலினது ஒருபகுதி முழுவதையேனுங் கற்பித்தல் ஏற்றதென்ப. ஏதும் ஒரு நூலை நன்கு ஆராய்ந்து கற்றலினால் வேறெந்த நூலையும் எளிதிற் கற்கவும் அதன் குணதணங்களை மதித்தறியுந்திறமை பெறவும் ஏற்ற புத்திநுட்பம் சித்திப்பதாகும்.

(4) படிக்கும் இலக்கியத்தில் ஒவ்வொருவரும் தத்தமது ஆற்றலுக்கியன்ற அளவான ஒருதொகைச் செய்யுட்களை மனப்பாடம் பண்ணுதல் வேண்டும். இதனால் புலவர்களுடைய செவ்விய உரையும் உரைநடையும் வாயிற் பயின்று வழங்குதற் கேதுவாகும். இப்படிச் செய்யுட்களை மனப்பாடஞ் செய்வதில் ஒவ்வொரு மாணவனும் தனக்குத் தனக்கு விருப்பமான செய்யுட்களைத் தெரிந்து பாடமாக்குதற்கு இடம் பெறுதல் நன்று. எல்லாரும் ஒரேசெய்யுளைத்தான் அன்றி ஒரே நூற்பகுதியைத்தான் மனனஞ் செய்தல் வேண்டுமென்பது அத்துணைப் பொருத்த முடைத்தன்றென்ப.

(5) பொருள் ஒரு சிறிதளவேனும் தெரியாத செய்யுட்களை முதலில் வாய்ப்பாடஞ் செய்வித்தலும், அச்செய்யுள் இன்னது குறித்தது என அதன் பருப்பொருளை ஒருவாறு அறியுமுன் சொற்களைப் பிரித்துப் பதவுரை சொல்லுதலும் என்னும் இம்முறை செய்யுள் கற்பதில் மாணவர்க்கு ஆர்வம் பிறவாமல் வெறுப்பு உண்டாதற்குக் காரணமாதலுங் கூடுமாதலால் அது செய்தலாகாதென்பது நல்லாசிரியர் அனுபவத்திற் கண்ட உண்மை.

(6) ஒரு செய்யுளைப் படிப்பிக்கும்போது முதலில் அச்செய்யுள் நுதலிய பொருள் இன்னதென மாணவர் அறியச் செய்தல் தக்கது. சில செய்யுட்களில் உபமானமாக வரும் பாகத்தை முதலில் ஆராய்ந்து, அதன் மூலமாக உபமேய பாகத்தை யாராய்ந்தறியச் செய்தல் ஏற்றதாகும். பலகருத்துக்கள் கலந்து அடைகள் விரிந்த செய்யுட்களில் மூலமாகிய கருத்தை முதலில் தெரிந்து கொண்டு பின்பு அதற்கு அடையாக வரும் பகுதிகளை ஒவ்வொன்றாக நோக்கி நோக்கிச் செய்யுளின் விரிந்த பொருளை யறியச் செய்தல் நல்லாசிரியர் முறையாகும். இங்ஙனஞ் செய்யுளின் திரண்ட பொருளை ஒருவாறு தெரிந்து கொண்டபின் பதப்பொருள் சொல்லுதலும் சொற்களின் ஆராய்ச்சி செய்தலும் பொருத்த முடைத்தாகும்.

(7) மாணவர் தாமாக ஆலோசித்துப் பொருளை ஒருவாறு உத்தேசித்து அறிந்து சொல்லும்படி ஏவி உதவி செய்தலே ஆசிரியர் முதலிற் செய்தற்பாலது. எல்லாவற்றையுந்தாமே முதலிற் சொல்லிக்கொடுத்து, மாணாக்கருடைய சிந்தனைக்கு ஒருசிறிதும் இடம் இல்லாமற் செய்வது ஏற்ற முறையாகாது என்றறிக. அவ்வாறு செய்யின், மாணாக்கர் தாமாக எதனையுமாராய்ந்தறியும் வன்மையும் பழக்கமுமற்று, இன்சுவையுணர்வும் புத்திக் கூர்மையும் வாய்க்கப்பெறாராய் மிக்க குறைவடைவாராதலின் அது செய்தல் புத்தியாகாது. கீழ்வகுப்புகளில் ஒரு பாட நேரத்தில் ஒரு செய்யுள் கற்பித்தலேயமையும்; மேல்வகுப்புக்களில் இரண்டு முதல் பல செய்யுட்கள் சேர்த்துக் கற்பித்தல் நன்று என்பது சிலர் கருத்து. அதனையும் நோக்குக.

(8) மாணாக்கரிடை இலக்கியச் சுவையுணர்வு உதித்து வளர்ந்து சிறப்படைய வேண்டின், அது முதலில் ஆசிரியரிடம் உளதா

தல் வேண்டும். அவரிடத்திலிருந்து ஒரு தொற்று நோய் போல மாணுக்கரிடைப் பரவுதல் வேண்டும். ஆசிரியருடைய உள்ளக்கிளர்ச்சியும் கல்விப்பிரியமும் எத்துணையோ அத்துணை தான் மாணுக்கரிடத்தும் உளதாகும். இலக்கியச் சுவையுணர்வு மாணுக்கரிடை உதிக்கச் செய்வதற்கு ஆசிரியர் கைக்கொண்டு செய்ய வேண்டிய தொன்றுண்டு. அது யாதெனில், இலக்கிய பாட நேரத்திலோ அன்றி வாய்ப்பான வேறு நேரத்திலோ இன்சுவை தருஞ் சிறந்த அழகிய பாடல் என்று தாம் மதித்து மகிழ்வுறும் செய்யுட்கள் சிலவற்றை (எந்த நூலிலிருந்தேனும் எடுத்து) மாணுக்கர் கேட்டிருப்பத் தாம் அழகாக வாசித்து அவற்றிலுள்ள சொற்சிறப்புப் பொருட்சிறப்புக்களை எடுத்துக் காட்டித் தாமும் இன்புற்று மாணவரும் இன்புறச் செய்தல் என்பது. இம்முறை கடைப்பிடித்துத் தவருது இடையிடையே செய்துவரின் மாணுக்கரிடத்துத் தமிழிலக்கியச் சுவை வளர்ச்சியுற்று அதனுல் அவர் பெரும்பயனெய்தப் பெறுவர் என்பது துணிபு.

“கலாநிலையத்தினின்று இருதிங்கட் கொருமுறை வெளிவரும் ‘ஞாயிறு’ என்னும் பத்திரிகை இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள தமிழ்ப்புலவர்தம் மதிப்பில் உயர்ந்த நிலையை யுடைய தாக இருக்கின்றது”—இந்துசாதனம். (ஆங்கிலம்)

இசைத்தமிழ்க்கல்வி.

கரணவாய் - பண்டித திரு. செவ்வந்திநாததேசிகர் எழுதியது

(கார்க்கதிர் 230 - ம் பக்கத்தொடர்ச்சி)

இனி, சிலப்பதிகாரத்திலே ஆயப்பாலை, வட்டப்பாலை என்பவற்றி னியல்பேயன்றித் திரிகோணப்பாலை, சதுரப்பாலை என்பவற்றினியல்பு சிறிதேனுங் கூறப்படவில்லை. அதனால் அவற்றைப்பற்றிய விபரம் யாதும் அறியக்கூடாமலிருக்கிறது.

ஆயப்பாலை முதலிய நான்கு பாலைகளினுமிருந்து உண்டாகும் பண்களின் தொகையைப்பற்றி யாராயுங்கால், பண்டைநாளிற் பண்களின் தொகை பன்னீராயிரமாயிருந்ததென்றும், அத்தொகை இடைக்காலத்தில் ஆறாயிரமாயும், பின்பு ஆயிரமாயும் குறைவாயிற்றென்றும், சக்ரவர்த்தி சயங்கொண்டான், அடியார்க்குநல்லார் முதலியோர் காலத்தில் மிகக் குறைந்து நூற்று மூன்று ஆயிற்றென்றும் அறியக் கிடக்கிறது. 'கர்ணாமிருதசாகர'க்காரரும் பண்டைநாளில் தமிழ் நாட்டில் வழங்கிவந்த இராகங்களைப்பற்றிக் கூறுமிடத்து, "தற்காலப் புத்தகங்களில் குறித்திருக்கும் ஆயிரம் இராகங்களில் சுமார் நூறு இராகங்களும், அவைகளில் விசேஷமாய்ப் பத்து இராகங்களும் தற்காலப் பழக்கத்திலிருப்பதையும் நாம் கவனிக்கையில், பூர்வகாலத்தில் 12,000 இராகங்களிருந்ததாகவும், அதன்பின் 6,000 ஆகவும், பின் 1,000 ஆகவும் குறைந்து வந்திருக்கிறதென்று நாம் நினைக்க வேண்டும். பூர்வகாலத்திலிருந்த மனிதர்களின் ஆயுளும் வாத்தியக் கருவிகளின் அம்சமும் வரவரக் குறைந்து வந்தது போலவே இதுவுமிருப்பது ஆச்சரியமல்ல. மேலும், பன்னிரு பாலையுள் பிறந்த எழு பாலைகளின் கிரமப்படி 12,000 இராகங்களடங்கிய 'கௌரிகடகம்' என்ற பெயருடன் ஒரு நூல் இருந்ததாகவும் முன் கிரமத்தின்படியே 6,000 இராகங்களடங்கிய 'அனுமத்கடகம்' என்ற மற்றொன்று இருந்ததாகவும் முன் கிரமப்படி யுண்டான 1,000 இராகங்களடங்கிய 'வியாசகடகம்' எனப் பின்னொன்று இருந்ததாகவும் வழக்கத்திற் சொல்லிக்கொள்ளப் படுகிறது" எனக் கூறுதல் காண்க.

இனி, சிலப்பதிகார உரைக்கட் கூறப்பட்ட 103 பண்களின் பெயரும் அவ்வுரைகாரர்கட்கு முன்பு இருந்தவராக எண்ணப்படும் பிங்கல முனிவராற் செய்யப்பட்ட பிங்கல நிகண்டிற் கூறப்பட்டுள்ளன. அவை:

பெரும்பண்ணின்வகை ௧௬.

1 பாலையாழ்	7 நிருபதுங்கராகம்	13 செவ்வழி
2 செந்து	8 நாகராகம்	14 மௌசாளி
3 மண்டலியாழ்	9 குறிஞ்சியாழ்	15 சீராகம்
4 பௌரி	10 ஆசாரி	16 சந்தி
5 மருதயாழ்	11 சாயவேளர்கொல்லி	
6 தேவதாளி	12 கின்னராகம்	

பாலையாழ்த்திறன் வகை ௨௰.

1 தக்கராகம்	8 சாயரி	15 துக்கராகம்
2 அந்தாளிபாடை	9 பஞ்சமம்	16 கொல்லிவராடி
3 அந்தி	10 திராடம்	17 காந்தாரம்
4 மன்றல்	11 அழுங்கு	18 சிகண்டி
5 நேர்திறம்	12 சனுசி	19 தேசாக்கிரி
6 வராடி	13 சோமராகம்	20 சுருதிகாந்தாரம்
7 பெரியவராடி	14 மேகராகம்	

மருதயாழ்த்திறன் வகை ௧௬.

1 தக்கேசி	7 தமிழ்வேளர்கொல்லி	13 கௌசிகம்
2 கொல்லி	8 காந்தாரம்	14 சீகாமரம்
3 ஆரியகுச்சரி	9 கூர்ந்தபஞ்சமம்	15 சாரல்
4 நாகதொனி	10 பாக்கழி	16 சாங்கிமம்
5 சாதாளி	11 தத்தளபஞ்சமம்	
6 இந்தளம்	12 மாதுங்கராகம்	

குறிஞ்சியாழ்த்திறன் வகை ௩௨.

1 நட்டபாடை	12 கேதாளி	23 தமிழ்க்குச்சரி
2 அந்தாளி	13 குறிஞ்சி	24 அருட்புரி
3 மலகரி	14 கௌவாணம்	25 நாராயணி
4 விபஞ்சி	15 பாடை	26 நட்டராகம்
5 காந்தாரம்	16 சூர்துங்கராகம்	27 ராமக்கிரி
6 செருந்தி	17 நாகம்	28 வியாழக்குறிஞ்சி
7 கௌடி	18 மருள்	29 பஞ்சமம்
8 உதயகிரி	19 பழந்தக்கராகம்	30 தக்கணுதி
9 பஞ்சுரம்	20 திவ்வியவராடி	31 சாவகக்குறிஞ்சி
10 பழம்பஞ்சுரம்	21 முதிர்ந்த விந்தளம்	32 ஆநந்தை
11 மேகராகக்குறிஞ்சி	22 அநுத்திர பஞ்சமம்	

செவ்வழியாழ்த்திறன் வகை ௧௬.

1 குறண்டி	7 சீவனி	13 முல்லை
2 ஆரியவேளர்கொல்லி	8 யாமை	14 சாதாரி
3 தனுக்காஞ்சி	9 சாளர்	15 பைரவம்
4 இயந்தை	10 பாணி	16 காஞ்சி
5 யாழ்பதங்காளி	11 நாட்டம்	
6 கொண்டைக்கிரி	12 தாணு	

மற்றுந்திறன் வகை ௩.

1 தாரப்பண்டிறம்	2 பையுள்காஞ்சி	3 படுமலை

என்பன.

இனி, பிற்காலத்திற் சிறந்து விளங்கிய 103 பண்களும்—பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்னும் நால்வகைப் பண்களின் கூட்டமாயுள்ளனவேயன்றித் தனியே பண்ணின் கூட்டமாயுள்ளனவல்ல. அது, அடியார்க்குநல்லார் சிலப்பதிகார உரைக்கண், "பண் நூற்றுமூன்று; அவை நால்வகைப்படும்; பண், பண்ணியல், திறம், திறத்திறமென" எனக் கூறுமாற்றாற் புலனும். ஈண்டுக் கூறிய நூற்றுமூன்று பண்களுள், பண் முதலியன இவ்வளவின வுள்ளனவெனச் சிலப்பதிகார உரைகளைக்கொண்டு அறிந்துகொள்ள முடியவில்லை. சுவாமி விருதை. சிவஞானயோகிகள் எழுதிய 'வேதாகம உண்மை' என்னும் நூலில், "அவ்விசைகளில் முதலிசை (சுத்த சுரம்) வீற்றிசை (விகிர்தி சுரம்) என்பவற்றின் மாறலால் தோன்றிய எழுபாலை (மேளகர்த்தா—ராகாங்கராகம்) களும் எழுபாலையினின்று தோன்றிய பண்கள் (ராகம்) 103 உம் உள. அவை, பண் 17, பண்ணியல் 70, பண்டிறம் 12, பண்டிறத்திறம் 4 என இசையின் எண் வகையால் நால்வகைப்படும்" எனக் கூறியிருப்பதைக்கொண்டு அஃது ஒருவாறு உணரலாம். அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்துப் புறஞ்சேரி யிறுத்த காதையுரையில் திறப்பண் பன்னிரண்டெனக் கூறியுள்ளார். யாப்பருங்கல விருத்தியுரையில் திறப்பண் இருபத்தொன்றெனக் கூறி, அதற்காதாரமாக 'வாய்ப்பிய'த் திலிருந்து சில சூத்திரங்களுமெடுத்தாளப்பட்டுள்ளன. தகுந்த ஆதாரமொன்றுங் கிடைக்கப்பெறாமையால், இவற்றைப் பற்றிய தெளிவான அபிப்பிராயம் யாதுங் கூறிக்கொள்ள முடியாமலிருக்கிறது.

ஈண்டு விரித்துரைக்கப்பட்ட பண் என்பதும் இராகம் என்பதும் ஒரு பொருளைக் குறிப்பன என்னுங் கருத்துப்பட இதுகாறுங் கூறியுள்ளோம். இது அறிஞர் பலரின் அபிப்பிராயத்தை அனுசரித்த கூற்றாம். அவ்விஷயத்தை ஆராய்து நோக்குங்கால், இது பொருத்தமற்ற கூற்றாகக் காணப்படுகின்றது. என்னை காரணமெனிற், கூறுதும். யாம் தமிழ் இலக்கியச் செய்யுள்களை வாசிக்கும்பொழுது நாட்டை, காம்போதி, பைரவி முதலிய இராகங்களுடனே வாசிக்கின்றோம். ஆனால், அச்செய்யுள்களை யாம் பண்ணோடு வாசிக்கின்றோமெனச் சொல்லும் வழக்கம் உலகிலில்லை. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய அடியார்களால் அருளிச்செய்யப்பட்ட தேவாரம் முதலியவற்றை யாம் படிக்கும்பொழுது பண்ணோடு படிக்கின்றோமெனச் சொல்லும் வழக்கம் உலகிலிருக்கிறது. பண்ணே இராகமாயின் இராகத்தோடு இலக்கியச் செய்யுள்களைப் படிக்கும்பொழுது, பண்ணோடு படிப்பதாகக் கூறாமைக்குக் காரணம் வேண்டும். அதற்குக் காரணம் இன்றோவெனின், தாளவறுதியோடு கூடிய இராகம் பண்ணென்றும், அஃதில்லா இராகம் இராகமென்றுங் கூறப்படும் என்னும் அறிஞரொருவர் கூற்றுண்மையிற் றாளவறுதியில்லாத இராகத்தோடு படிக்கும்பொழுது பண்ணோடு படிப்பதாகக் கூறாமையும், தாளவறுதியோடு கூடிய

இராகத்துடன் படிக்கும்பொழுது பண்ணோடு படிப்பதாகக் கூறு
வதும் பொருந்துமாகலிற் காரணமுண்டு. இன்னும் இராகமே தாள
வறுதியோடு கூடி வழிப்பண்ணென்று கூறப்படுதலின், அவ்
வுரிமைபற்றி யஃதில்வழியும் பண்ணென்று கூறல் பொருந்துமாக
லின், பண்ணென்பது இராகமென்றல் பொருந்தாதென்றதென்னை
யெனின், அற்றன்று. தேவாலயங்களில் விழாக்காலத்தில் சந்தியா
வாகனமென்றோர் கிரியை செய்யப்படுமென்றும், அப்பொழுது ஆசா
ரியர் சந்திகடோறுஞ் சென்று அவ்வச் சந்திகளுக்குரிய தேவர்களை
வழிபட்டு அவர்கட்குப் பலியிட்டபின் ஆண்டு நிகழவேண்டிய
நிகழ்ச்சிகள் நான்குளவென்றும், அவை அவ்வத் தேவர்கட்குரிய
தாளம் போடுதலும், இராகம் பாடுதலும், நிருத்தஞ் செய்தலும்,
இயங்க ளியம்பலு மென்பன வென்றும் ஆகமங்கள் கூறுகின்றன.
பிற்றைஞான்று அவ்வாகமங்களை யாதாரமாகக்கொண்டு தோன்றிய
உற்சவப் பத்ததிகளில் முற்கூறிய நான்கு நிகழ்ச்சிகளோடு தேவா
ரப்பண் பாடுதலென்பதோர் நிகழ்ச்சி விசேடமாகக் காணப்படு
கின்றது. இவ்விடயத்தை ஆராய்வுழி, ஆகமங்களிற் காணப்படாத
தேவாரப்பண் பாடுதலென்னும் நிகழ்ச்சி தேவாரந் தோன்றிய
காலத்தின் பிற்றோன்றிய பத்ததிகளில், ஆரியர்க்குரிய இராகத்தைப்
பாடுதல் ஓர் நிகழ்ச்சியாக ஆகமங்களிற் கூறப்பட்டிருத்தலின்
தமிழ் நாட்டிற்கேற்றவாறு அவ்விராகத்திற்கொத்த தமிழ்ப் பண்
ணைப் பாடுதல் ஆண்டைக் கேற்றதாகுமெனக் கருதி அந்நூலாசிரியர்
களாற் பிற்றைஞான்று புகுத்தப்பட்டிருத்தல் வேண்டுமென எண்ண
வேண்டியிருக்கிறது. அங்ஙனமெண்ணுங்கால், இந்திர சந்திக்கும்
நிருதிசந்திக்குமுரிய இராகம் பைரவி என ஒன்றாகக்கூறியிருக்க, இந்
திரசந்திக்குரிய பண் காமேசம் என்றும், நிருதி சந்திக்குரிய பண்
நட்டபாடை யென்றும் வேற்றுமையுடைய இரண்டு பண்கள் கூறி
யிருப்பதும், வாயுசந்திக்குரிய இராகம் மகுடராமகிரி யென்றும்,
குபேர சந்திக்குரிய இராகம் மாளவி யென்றும் வேறாகக் கூறி
யிருப்ப, அவ்வீரிடத்திற்குமுரிய பண் தக்கேசி யென ஒன்றாகக்
கூறியிருப்பதும் இராகமே பண் என்னும் எண்ணத்தை மாறு
படுத்துவதனானும், 'கர்ணாமிருத சாகரம்' முதற்புத்தகம் நான்கா
வது பாகம் 889-ம் பக்கத்தில், "தேவார திருவாசகங்களிற் காணப்
படுந் தமிழ்ப் பண்களும் அவற்றிற்குத் தற்காலத்தில் வழங்கும்
பெயர்களும்" என்னும் பகுதியில், திருவிரும்பூளைச் "சீரார்கழலே"
என்னும் பதிகத்திற்குரிய பழைய பண் இந்தள மென்றும், தற்
கால இராகம் ஆனந்த பைரவி யென்றும், திருக்குட வாயில்
"திகழுந் திருமாலொடு" என்னும் பதிகத்திற்குப் பழைய பண்
இந்தள மென்றும், தற்கால ராகம் சாவேரி யென்றும், திருக்குரங்
காடுதுறை, "பரவக் கெடும்" என்னும் பதிகத்திற்குப் பழைய பண்
இந்தளமென்றும், தற்கால ராகம் கல்யாணியென்றும் ஒரு பண்
ணிற்கே வேறுபாடுடைய பல இராகங்கள் கூறியிருத்தலானும்,
இன்னும் இவ்வித வேறுபாடுகள் பல காணப்படுதலானும், ஆரி

யத்தில் இராகமென்னுஞ் சொல்லாற் குறிக்கப்படுவது தமிழில் பண்ணென்னுஞ் சொல்லாற் குறிக்கப்படுகின்றது என்றதுண்மை யாயின் 'ஒரு இராகத்திற்குப் பல பண் காணப்படுதலும்,' பல இராகத்திற்கு ஒரு பண் காணப்படுதலும், ஒரு பண்ணுக்குப் பல இராகங்கள் காணப்படுதலும், பல பண்ணுக்கு ஒரு இராகங் காணப்படுதலும் ஆகிய வேறுபாடு காணப்படுதல் பொருத்தமின்று மாகலானும் அது பொருந்தாதென்பது. இன்னும் இவ்விடயம் அறிஞர்களின் ஆராய்ச்சிக்குரியதாம்.

இதுகாறும் விரித்துரைக்கப்பட்ட பண்ணிற்கு இன்றியமை யாததாய் அதனங்கமாயுள்ளது தாளமாம். இத்தாளத்திற்குரிய மாத்திரை கொட்டு, அசை, தூக்கு, அளவு என நான்கு வகைப் படும். அவற்றுள் கொட்டின் தொழில் அமுக்குதலாம். அதன் வடிவம் ககரமாம். அசையின் தொழில் தாக்கி எழுதலாம். அதன் வடிவம் எகரமாம். தூக்கின் தொழில் தாக்கித் தூக்குதலாம். அதன் வடிவம் உகரமாம். அளவின் தொழில் தாக்கினவோசை நேரே மூன்று மாத்திரை பெறுமளவும் வருதலாம். அதன் வடிவம் ஆய்த மாம். ஈண்டுக் கூறிய கொட்டு, அசை, தூக்கு, அளவு என்பன முறையே அரை மாத்திரையும், ஒரு மாத்திரையும், இரண்டு மாத் திரையும், மூன்று மாத்திரையு முடையனவாம். இன்னும் அடி யார்க்குநல்லார் சிலப்பதிகார வுரைக்கண், தாளத்தைப்பற்றிய சில விஷயங் கூறியுள்ளார். அவை, "அரைமாத்திரையுடைய ஏகதாள முதலாகப் பதினாறு மாத்திரையுடைய பார்வதிலோசன மீறாகச் சொன்ன நாற்பத்தொரு தாளமும் புறக்கூத்திற்குரிய; ஆறன்மட்ட மென்பனவும், எட்டன்மட்டமென்பனவும் தாளவொரிய லென்பன வும், தனிநிலை யொரிய லென்பனவும், ஒன்றன்பாணி முதலாக எண் கூத்துப் பாணி யீறாகக் கிடந்த பதினொருபாணி விகற்பங்களும், முதனடைவார முதலாயினவும் அகக்கூத்திற்குரியவென்க" என்பன. இவை தெரிந்துகொள்ள முடியாததன்மை யுடையனவா யிருக் கின்றன.

இத்தாளங்களின் வழி வருவது தூக்காம். அது—செந்தூக்கு, மதலைத்தூக்கு, துணிபுத்தூக்கு, கோயிற்றூக்கு, நிவப்புத்தூக்கு, கழாற்றூக்கு, நெடுந்தூக்கு என எழுவகைப்படும். அவற்றுள், செந்தூக்கு ஒரு சீருடையதாம். மதலைத்தூக்கு இருசீருடையதாம். துணிபுத்தூக்கு முச்சீருடையதாம். கோயிற்றூக்கு நாற்சீருடைய தாம். நிவப்புத்தூக்கு ஐஞ்சீருடையதாம். கழாற்றூக்கு அறுசீ ருடையதாம். நெடுந்தூக்கு எழுசீருடையதாம்.

இனி, இசைக்கருவி நரப்புக்கருவியும், துளைக்கருவியும், தோற்கருவியுமென மூன்று வகைப்படும். அவற்றுள், நரப்புக் கருவியாவது நரம்பிணைக்கொண்டியலுங் கருவியாம். அதாவது யாழாம். அஃது—பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட் டியாழ் என நான்கு வகைப்படும். அவற்றுள், பேரியாழாவது

21 நரம்பினைக்கொண்டியல்வதாம். மகரயாழாவது 17 நரம்பினைக்
கொண்டியல்வதாம். சகோடயாழாவது 16 நரம்பினைக்கொண்டியல்
வதாம். செங்கோட்டியாழாவது 7 நரம்பினைக்கொண்டியல்வதாம்.
பண்டைநாளில் (முதற் சங்க காலத்தில்) பேரியாழ் என்னும் பெய
ருடன் ஒரு யாழ் இருந்ததென்பதும், அது ஆயிரம் நரம்பினைக்
கொண்டுள்ளதென்பதும் சிலப்பதிகார உரைப்பாயிரத்தால் அறி
யப்படுகின்றன. முற்கூறிய நால்வகை யாழுள் இறுதிக்கண்ணதா
கிய செங்கோட்டியாழே இஞ்ஞான்று வழங்கும் யாழாம். யாழ்
வாசிக்க வேண்டியபொழுது கவனிக்கற்பாலனவாகிய விஷயங்கள்
பலவுள. அவை விரிப்பிற் பெருகும். அவற்றையெல்லாம் சிலப்
பதிகாரத்துக் கானல்வரி நோக்கியுணர்க.

துளைக்கருவியாவது, துளையினைக்கொண்டியலுங் கருவியாம்.
அதாவது குழலாம். அக்குழல் செய்தற்குரிய மரம் மூங்கில், சந்
தனம், கருங்காலி முதலியனவாம். அது, இருபது விரல் நீளமும்,
நாலரை விரல் சுற்றளவும், எட்டுத் துளைகளும் உடையதாகச் செய்
யப்படும். அக்குழ லூதப்படுமிடத்து, வளைவாய்ச் சேர்ந்த துளை
யை முத்திரை யென்று நீக்கி, முன்னின்ற ஏழும் ஏழுவிரல்
பற்றி வாசிக்கப்படும்.

தோற்கருவியாவது, தோலினாற் செய்யப்படுங் கருவியாம்.
அது முப்பத்தொரு வகைப்படும். அவை பேரிகை, படகம்,
இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குட
முழா, தக்கை, கணப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்
தரி, முழவு, சந்திரவளையம். மொந்தை, முரசு, கண்விடுதூம்பு,
நிசாளம், துடுமை, சிறுபறை, அடக்கம், தகுணிச்சம், விரலேறு,
பாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை யென்பன
வாம்.

இனி, இசைத்தமிழைப்பற்றிக் கூறும் நூல் இசைத்தமிழ்
நூலாம். அது இசைத்தமிழிலக்கணமும், இசைத்தமிழிலக்
கியமுமென இருவகைப்படும். அவற்றுள், இசைத்தமிழ் இலக்கண
மாவது—இசை, பண், ஆளத்தி, தாளம் முதலியவற்றி னிலக்கணங்
கூறும் நூலாம். இசைத்தமிழ் இலக்கியமாவது அவ்விலக்கணங்களி
னமைதியாயுள்ள நூலாம். பண்டைநாளில் ‘பெருநாரை’, ‘பெருங்
குருகு’, ‘பஞ்சபாரதீயம்’, ‘பஞ்சமரபு’, ‘இசைநுணுக்கம்’, ‘இந்திர
காளியம்’, ‘தாளவகையோத்து’ முதலியனவாகப் பல இசைத்தமி
ழிலக்கணநூல்க ளிருந்தன. அவை அழிந்துபோயின. பண்டை
நாளி லிருந்த இசைத்தமிழ் இலக்கியங்களின் பெயரொன்றுங்
காணப்படவில்லை. ஆயினும், இலக்கியங் கண்டே இலக்கண மியம்
பப்படுமென்ப துண்மையா மாகலானும், இசைத்தமி ழிலக்கணங்
கள் பல காணப்படுதலானும் அந்நாளில் இசைத்தமிழ் இலக்கியங்
கள் பல இருந்திருக்கவேண்டு மென்பது கருதப்படுகிறது. இனி,
இஞ்ஞான்று அந்நாளெழுந்த ‘சச்சபுடவெண்பா’, ‘தானசமுத்திரம்’,

‘சுந்தாநந்தப்பிரகாசம்’ முதலியனவும், பின்னாளெழுந்த ‘சங்கீத ரத்னாகரம்’ முதலியனவுமாகிய இசைத்தமிழிலக்கணங்களும், ‘பரிபாடல்’, ‘தேவாரம்’, ‘திருவாய்மொழி’ முதலிய இசைத்தமிழிலக்கியங்களும் வழங்குகின்றன.

இனி, இஞ்ஞான்று இசைத்தமிழ்க்கல்வி பண்டைநாளிலிருந்த தன்னலமெலாங் குன்றி, மிகவுங் கீழான நிலையைப் பெற்றுளது. அதனை யறிந்த இந்தியநாட்டு மக்கள் அதனை மேனிலைப்படுத்தற்கண் மிக்க வூக்க மெடுத்தனர். அவ்வூக்கங் காரணமாக ஆங்காங்குச் சங்கீத பாடசாலைகளும் சங்கீத சபைகளும் உண்டாவனவாயின. அதனால் இசைத்தமிழ்க் கல்வி சிறிது வளர்ச்சியெய்துவதாயிற்று. ஆயினும், அது பண்டை நிலையைப் பெற்றுவிட்டதென்று கூறல் ஒருபோதும் பொருந்தாது. பண்டைநாளில் பாணபத்திரன் பாரியையனைய மதங்கியர்கட் குறைவிடமாயிருந்த நம் ஈழநாடு இஞ்ஞான்று இவ்விஷயத்திற் பின்னணியில் நிற்கு நிலையைப் பெற்றுளது. அதனால் நந்நாட்டில் இசைத் தமிழ்ப் புலமைமிக்க மக்களைக் காண்பதரிதாயிற்று. ஆகவே, அதனைக் கற்றுணரவேண்டுமென்னும் விருப்பம் யாவருள்ளத்தும் உண்டாகாமற் போயிற்று. இசைத் தமிழ்க் கல்வியை விருத்தியாக்க வேண்டுமென்னு மெண்ணங்கொண்ட வித்தியாபகுதியார் கல்விச்சாலைகளிற் கற்கும் மாணவர்க்கென அமைத்துள்ள பாடத்திட்டத்தில் சங்கீதமும் ஒரு பாடமாக நியமித்துள்ளார்கள். ஆயினும், அதனைக் கற்பித்தற்கேற்ற ஆசிரியர்களின்மையானும், அதுவிஷயத்தில் கல்விச்சாலை யதிகாரிகட்குக் கருத்துச் செல்லாமையானும் அக்கல்வி வித்தியாசாலைகளிற் பயிற்றப்படுவதன்றாயிற்று. இக்கலைவிருத்தியில் அறிஞர்கள் கருத்துச் செலுத்ாதிருப்பது இரங்குதற்குரியதாம். இசைத்தமிழின் அருமை பெருமைகளை யறிந்த அறிஞர்கள் புத்திநுட்பமும், இனிய குரலும் வாய்ந்த நந்நாட்டு மாணவர் சிலரைத் தெரிந்து, அண்ணாமலைச் சர்வகலாசாலை முதலிய இடங்கட் கனுப்பி, இசைத்தமிழ்க் கல்வி பயிற்றுவித்து, அவர்களைக்கொண்டு ஈண்டுள்ள கலாசாலை மாணவர்களைப் பயிற்றுதற்கேற்ற ஒழுங்கு செய்வரேல், அதனால் நந்நாடு இசைத்தமிழ்க்கல்வி நிறைந்த நாடாத லொருதலையாமென்பது.

இருளின் மிளிரும் ஒளி

அல்லது

துன்பத்தில் துலங்கும் இன்பம்

(ஓர் இனிய தமிழ் நாடகம்)

நவாலி - திரு. க. கி. நடராஜன் இயற்றியது

(348-ம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம்—1. காட்சி—1.

அறிவாம்பிகை: (மமதாம்பாளை நோக்கி) பெரியம்மா! அம்மா எங்கே?

மமதாம்பாள்: குழந்தை அழுகிறதாம். பார்ப்பதற்காகப் போய் விட்டாள்.

சிங்காரவேல்: பூப்பறிக்கப் போகிறீர்கள் போலிருக்கிறது. மாலை தொடுக்கவேணும். வாவிப் பக்கத்திலுள்ள சுரும்பார் சோலையில் அரும்பார் மலர்களைக் கொய்து கூடை நிறையக் கொண்டு வாருங்கள். அஃதன்றி, அங்குள்ள மயிலொடுங் குயிலொடும் வாளா காலம் போக்காதீர்கள்.

சுகிர்தாம்பிகை: அப்பா! நீங்களும் வாருங்கள்.

மமதாம்பாள்: ஆமாம். உங்களுக்கு வேலையே இல்லை. அவமே பொழுது போக்குகிறீர்கள்; பிள்ளைகளோடு போய்வாருங்கள்.

சிங்காரவேல்: சற்று நில்லுங்கள். ஒரு சுருட்டுச்கட்டு எடுத்து வருகின்றேன். (போகின்றார்)

மமதாம்பாள்: சுந்தரம் எங்கே? இன்பநாயகம் என்ன செய்கிறான்? குழந்தைகள் என்னசெய்கிறார்கள்?

அறிவாம்பிகை: சுந்தர அண்ணன் பிடிவண்டி (Cycle)யில் புகை வண்டி நிலையத்திற்குப் போகின்றார். வீட்டில் பாடஞ்சொல்லி வைக்கும் ஆசிரியர் இன்று அப்பாவோடு நகர்ப்புறம் போய்

169

விட்டார். இன்பநாயகம் வீட்டின் பிற்பக்கத்தில் நாய்க்குட்டிகளுக்கு வேட்டை பழக்குகிறார். மற்றவர்களும் விளையாடுகிறார்கள்; சிலர் செந்திபடிக்கிறார்கள்; சிலர் பந்தாடுகிறார்கள்.

மமதாம்பாள்: சுந்தரம் என்ன செய்யப்போகிறனும்?

அறிவாம்பிகை: அவர் குதிரைச் சேனையிற் சேர்வதற்காக மனுப் பத்திரங் கொடுக்கப் போய்விட்டார். நேற்று அப்பாவோடு மிக்க முரணாக உரையாடிக்கொண்டார்.

மமதாம்பாள்: வேறு என்னசெய்ய வேண்டுமென்கிறாய்? அவன் தான் எவ்வளவு தூரம் பொறுப்பான்? ஏதாவதொரு வேலை பார்க்கத்தானே வேண்டும்? அதை விடுத்துக் "கழனிக்குப் போடா, கலப்பை தொட்டுழடா" என்றால் எவ்வாறு பொருந்தும்?

அறிவாம்பிகை: அப்பா அவ்வாறு கூறவில்லை. அவர் ....

மமதாம்பாள்: (குறுக்கே) அவர் என்ன சொன்னாலுஞ் சரி. சுந்தரம் எப்படியோ ஏதாவதொரு வேலை பார்க்க வேண்டுமோ அல்லவோ? அவன் விரும்புவனவற்றை யெல்லாம் வேண்டாம் வேண்டாம் என்றால் வேறென்ன செய்வது? இப்போது அவன் செய்தமையே சரி என்று நினைக்கிறேன்.

(சுந்தரம் பிடிவண்டியில் வருகிறான்)

மமதாம்பாள்: உனக்கு நீடித்த ஆயுளுண்டு, சுந்தரம்! இப்போதும் உன்னைப்பற்றியே பேசிக்கொண்டிருந்தோம். நேற்று உன் அப்பாவோடு கலகமிட்டுக்கொண்டாயாமே. அறிவாம்பிகை சொல்லுகிறாள்.

சுந்தரம்: கலகமாவது? போராவது? அவர் தமது கருத்தைச் சொன்னார். நானும் எனது கருத்தைத் தெரிவித்தேன். இஃதல்லாமல் வேறொன்றும் நடைபெறவில்லை. பெரியம்மா! எங்கள் அறிவு இருக்கிறாளே. அவளுக்கு ஒன்றுமே தெரிகிறதில்லை. ஆனால், ஏதோ எல்லாந் தெரிந்தவள் போலப் பேசுவதுதான் அவள் வழக்கமாய் விட்டது. இஃது உங்களுக்கு நன்றாகத் தெரிந்த விஷயந்தானே.

மமதாம்பாள்: அதுகிடக்க. நீ இப்போது என்ன செய்யத் தீர்மானித்திருக்கிறாய்?

சுந்தரம்: அப்பா என்ன முடிவு செய்திருக்கிறாரோ தெரியாது. நானோ குதிரைச் சேனையிற் சேர்வதற்குத் தீர்மானித்து விட்டேன்.

மமதாம்பாள்: உன் அப்பாவுக்கு இது விருப்பமில்லையாமே?

சுந்தரம்: அப்பாவா? அவரைப்பற்றிப் பேசிப் பயனென்ன? அவருக்கு ஏதோ பித்தம் பிடித்தாற்போல் தெரிகிறது. தாம் எவ்வாறு கருதுகிறாரோ அவ்வாறே உலகப் பொருள்களையும் பார்க்கிறார். அவருக்கு உள்ளதை உள்ளவாறே காணுந் திறன் அற்பமும் இல்லை. சேனையில் ஊழியஞ் செய்வதைப் பழித்துக் கூறுகின்றார். தொழுதுண்டு வாழ்தல் இழிவாம். அதனால் எனக்குச் செலவுக்குப் பணங்கூடக் கொடுக்கமாட்டாராம். இது முறையா?

சுகிர்தாம்பிகை: என்ன சுந்தரம் அப்படிச் சொல்லுகிறாய்? அவர் கூறாதனவற்றையுங் கூறியதாகச் சொல்வது குறும்புத்தனமாகும். நீங்கள் உரையாடும்போது நான்தானே பக்கத்தில் நின்றேனே. நீ சொன்னது போலவா அவர் சொன்னார்? "தொழுதுண்ணும் வாழ்க்கையை மேற்கொண்டால் பரப்பார் விருப்பத்திற் கேற்றவாறு நீ நடந்துகொள்ள வேண்டியவனாவாய்; அதினும் நீயாகவே அவ்வேலையைத் தேடிக்கொண்டால், தனக்குத்தானே விலங்கிடுவதாகவன்றோ முடியும்?" என்றல்லவோ கூறினார்?

சுந்தரம்: போ, சுகிர்தம்; புத்தியில்லாமற் பேசுகிறாய். நானல்லவோ ஊழியஞ் செய்வது? அவரல்லவே. ஏன்? அவரே சிலகாலம் சேனையிலிருந்து வேலைசெய்து வரவில்லையோ?

சுகிர்தாம்பிகை: அது சரி. ஆனால், பணந்தரப்போவதில்லையென அவர் சொல்லவில்லையே. தமது கருத்திற்கு மாறுபாடான அலுவலில், தாம் கலந்துகொள்ள முடியாதென்றல்லவோ கூறினார்.

சுந்தரம்: கருத்துக்களுக்கும் இதற்கும் என்ன தொடர்பிருக்கிறது? எப்படியும் ஒருவன் ஊழியஞ்செய்தே தீரவேண்டும். அவ்வளவுதான்.

சுகிர்தம்: என்னைக் காய்ந்துகொள்ளாதே சுந்தரம்! நான் கேட்டவற்றையே கூறினேன். அதைவிடுத்து, உன் நாட்டமறிந்து நடக்க என்னால் முடியாது. வாரப்பாடேனும், தீரக்காய்வேனுமின்றி நடுவுநிலைமையோடு நான் பேசுகின்றேன்.

(இன்பநாயகம் தந்தியுங் கையுமாக வருகின்றான்)

இன்பநாயகம்: (அறிவாம்பிகையை நோக்கி) வரவுச் செய்தியைக் கொண்ட தந்தி ஒன்று வந்திருக்கிறது. யார் வருகிறார்கள் என்று சொல்லுங்கள் பார்ப்போம்?

அறிவு:

வீணே என்னிடம் கோணல் கற்கிறாய்
எந்தனிடங் கொடு தந்தியைப் படிக்க.

(கையை நீட்டுகிறாள்; இன்பநாயகம் கொடுக்க மறுக்கிறான்)

இன்பநாயகம்:

யானே தரேனதை யானே தரேனதைக்
காணவே நினக்கு நாணமும் வருமே!

அறிவு:

அருந்தவப் பொழுதைநீ அவப்பொழு தாக்குகிறாய்
தந்தியைக் கொடுவல தனுப்புநர் பெயர்சொலு.

இன்பநாயகம்:

அக்கா முகத்தில் வெட்கமே தோணுது;
முன்னரே சொன்னேன்! முன்னரே சொன்னேன்!

பெரியம்மா! இல்லையா பாருங்கள் அறிவின் முகத்தை.

அறிவு: (மமதாம்பாளை நோக்கி) அது யாரிடமிருந்து வந்திருக்கிறது பாருங்கள்.

மமதாம்பாள்: வடுகராஜாவிடமிருந்து—

(அறிவாம்பிகை தன்னுள் யோசித்து நாணமடைகிறாள்)

இன்பநாயகம்:

அக்கா முகத்தில் வெட்கமுண் டாகுது;
முன்னரே சொன்னேன்! முன்னரே சொன்னேன்!

அறிவு: பெரியம்மா! தந்தியைத் தாருங்கள் பார்ப்போம்.

(பெற்றுப் படிக்கிறாள்)

"இரவுப் புகைவண்டியில் மூவரும் வருகின்றோம்—வடுகராஜ குடும்பத்தார்" (தன்னுள்ளே) மூவர் என்றால் யார் யார்? அரசி ஒன்று; இளங்கோ இரண்டு; நீலாம்பிகை மூன்று.

இன்பநாயகம்: (அறிவாம்பிகையை நோக்கி) பார்த்தீர்களா? உங்களுக்கு மகிழ்ச்சி அதிகமாகிறது. (சுந்தரத்தை நோக்கி) அண்ணு! பாருங்கள் அக்காவின் முகத்தை.

சுந்தரம்: போதும், வாயை மூடு. ஓயாமற் பரிகாசமா?

இன்பநாயகம்: ஆமாம், தெரியும். நீலாம்பிகை வருகை உங்களுக்கும் நிகரில்லாத மகிழ்ச்சியைத்தரும் என்பது உண்மையே.

சுந்தரம்: இன்பம்! வாயை மூடு. எத்தனை முறை உனக்குச் சொல்வது?

சுகிர்தம்: இரவுப் புகைவண்டியில் வருவதாயின் நேரே இங்குத் தான் வருவார்கள்.

அறிவு: ஆம். அப்படியாயின் நாங்கள் பூப்பறிக்கப் போக முடியாது.

[சிங்காரவேல் சுருட்டுக்கட்டோடு வருகிறார்]

அறிவாம்பிகை: பெரியப்பா! நாங்கள் பூப்பறிக்கப் போகவில்லை.

சிங்காரவேல்: ஏன்?

அறிவு: வடுகராஜ குடும்பத்தார் இன்று இங்கு வருகிறார்களாம். அவர்கள் வரும்வரையும் பந்தாடுவது நல்லது. (சுந்தரத்தை நோக்கி) அண்ணு! பந்தாட விரும்புகிறீர்களா?

சுந்தரம்: ஆம்; போங்கள் வருகிறேன். (சுகிர்தம், அறிவு, இன்பம் ஆகிய இவர்கள் போகிறார்கள்)

சிங்காரவேல்: (மனைவியை நோக்கி) யார் வருகிறார்களாம்? கூழங்கைச்சக்கிரவர்த்தியின் மகளாயிருக்கக்கூடுமோ?

மமதாம்பாள்: ஆம்; சிலகாலம் இந்தியாவிலிருந்து தற்போது இங்கு வந்திருக்கும் மகள்.

சிங்காரவேல்: அப்படியா? நான் அவர்களைப் பார்த்துப் பலநாட்களாய்விட்டன. அரசி மிக இனிமையாகப் பாடுவாள். அவளுக்கு இரண்டு மக்களுண்டல்லவா?

மமதாம்பாள்: ஆம்; அவர்களும் வருகிறார்கள்.

சிங்காரவேல்: அவர்களும் குமுதமும் நெருங்கிய நட்புடையவர்கள்போல் தெரிகிறதே!

173

மமதாம்பாள்: நட்பல்ல; சென்ற ஆண்டு குமுதம் மதுரையி லிருந்தபோது அவர்கள் வீட்டுக்குப் பக்கத்திலேயே வசித்தாள். நமது அறிவாம்பிகைமீது அரசிக்கு அளவற்ற அன்புண்டு. அவளைத் தன் மகனுக்கு மணஞ்செய்துகொள்ளலா மென்னும் எண்ணமும் அரசிக்கு இருக்கிறதுபோல் தெரிகிறது.

சிங்காரவேல்: அவர்கள் பெரிய பணக்காரராச்சே.

மமதாம்பாள்: ஆம்; வடுகராஜா (அரசியின் கணவன்) இன்னும் உயிரோடிருக்கிறார். அவர் உண்டாட்டுக் களியாட்டுக்களிற் பெரும் பொருளை விரயஞ்செய்துவிட்டார். அதனால், அரசியானவள் சக்கிரவர்த்திக்கு மனுச்செய்து எஞ்சியுள்ள பணத்தைப் பெற்றுக்கொண்டு கணவனைவிட்டுப் பிரிந்துவிட்டாள். பிள்ளைகளுக்கு நன்றாகக் கற்றுக்கொடுத்திருக்கிறாள். தந்தை யாற்றுங் கடனைத் தாயே ஆற்றியிருத்தல் போற்றற்குரியது. மகள் இசைமீட்டுவதில் இணையற்றவள். மகன் பல்கலைக் கழகத்திற் கடைசிவரை கற்றுந் தேறியவன். பேரழகு வாய்ந்தவன். ஆரும் வியக்கும் அருங்குணமுடையவன். ஆனால், அவர்கள் இந்நேரத்தில் வருதல் குமுதத்திற்கு அதிக மகிழ்ச்சியைத் தருமென்று நான் நினைக்கவில்லை. ஏனெனில், வீட்டிற் பலவித இடைஞ்சல்கள் உண்டு. (சற்றுத் தூரத்தில் வீட்டைநோக்கி வரும் ஞானசீலரைக் கண்ணுற்று) அதோ! ஞானசீலரும் வருகின்றார்.

(ஞானசீலர் குமுதத்தின் கணவன்; கதாநாயகன்)

ஞானசீலர்: மமதா எப்படி? சிங்காரவேல்! நீங்கள் எப்படி? சுகமா இருக்கிறீர்களா? குமுதம் எங்கே?

மமதாம்பாள்: குழந்தைக்குப் பால் கொடுக்கிறாள். நீங்கள் போன அலுவல் எப்படி? யாவும் ஒழுங்காக முடிந்தனவா?

ஞானசீலர்: ஆம்; முடிந்தன. சிறிது காப்பி சாப்பிடுவது நல்லது. களையாக இருக்கிறது. (வினைஞர்கள் வருகிறார்கள். ஞானசீலர் அவர்களோடு கைகுலுக்கி அவர்களைச் சமமாக மதித்து உரையாடுகிறார். மமதாம்பாள் அருவருப்போடு தனது தோளைக் குலுக்கித் தன் கணவனைப் பார்த்துச் சிரிக்கிறாள்).

மமதாம்பாள்: எடீ! பொடிநோனு, ஐபாவுக்குக் காப்பி கொண்டுவா.

(ஞானசிலரின் குழந்தைகளில் ஒன்றாகிய அமிர்தாம்பிகை என்னும் குழந்தை ஓடிச்சென்று தகப்பன் கழுத்தைக் கட்டிக்கொண்டு முத்தமிடுகிறது)

அமிர்தாம்பிகை: அப்பா! என்னோடு வாருங்கள்.

ஞானசீலர்: (வாரியணைத்து முத்தமிட்டு) காப்பி சாப்பிட்டு வருகின்றேன். நீ போய் விளையாடு அமிர்தம்.

(அமிர்தம் போகின்றாள்)

மமதாம்பாள்: (ஞானசிலரை நோக்கி) மரந்தறித்தோருக்குத் தண்டனை விதிக்கப்பட்டதா?

ஞானசீலர்: ஆம்; ஆனால், அவர்கள் தாமாகவே குற்றவாளிகள் என்பதை ஒப்புக்கொண்டுவிட்டார்கள்.

மமதாம்பாள்: அவர்களுக்குத் தண்டனை விதித்தமை உங்களுக்கு விருப்பம் இல்லைப்போல் தெரிகிறதே!

ஞானசீலர்: நான் அதை விரும்பவில்லைத்தான்.

மமதாம்பாள்: அவர்கள் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்களல்லவா? அப்படியாயின், அவர்கள் திருடினார்கள் என்று எப்படிக் கூறலாம்? அவர்கள் தங்கள் தேவைக்காக மரங்களைத் தறித்துக்கொண்டார்கள் என்றே கூறவேண்டும். அப்படித்தானே.

ஞானசீலர்: (சிங்காரவேலோடு உரையாட ஆரம்பித்தவர் திடீரெனத் திரும்பி)—மமதா! மனம் புண்படும்படியான வார்த்தைகளைப் பேசாதே. குத்திப் பேசுதல் அழகல்ல.

மமதாம்பாள்: இல்லை. நான் குத்திப் பேசவே இல்லை.

ஞானசீலர்: சரி, அவர்களுக்கு மரம் தேவையாயிருந்தமையால் வெட்டினார்கள். அதனாலேயே நான் அவர்கள்மீது வழக்குத் தொடர விரும்பவில்லை.

மமதாம்பாள்: மரத்தைப் போலவே இங்குள்ள மற்றைப் பொருட்களும் அவர்களுக்குத் தேவையாகும்.

ஞானசீலர்: எனது தோட்டம் என்று என்னால் கருதிக் கொள்ளப்படும் தோட்டத்தில் பத்து மரங்களைத் தறித்தமைக்காக

அவர்களைச் சிறையில் வைத்தல் எனக்கு ஏன் விருப்பமில்லை யென்றால்............................ ...

மமதர்ம்பாள்: உங்களால் மாத்திரமல்ல, யாவராலும் எமதெனக் கருதிக் கொள்ளப்படும் தோட்டத்தில் என்று சொல்லுங்கள்.

சிங்காரவேல்: பிரசுமா வியாக்யானம் பண்ணுகிறாய்?

ஞானசீலர்: அத்தோட்டம் என்னது என்று கோடற்கு எனக்கு உரிமையே கிடையாது. அங்ஙனமே கொண்டாலும் அதில் 3,000 ஏக்கர்கள் உள. ஓர் ஏக்கரில் 150 மரங்கள் உள. ஆகவே மொத்தம் 4,50,000 மரங்களாகின்றன.—கணக்குச் சரியா? இவற்றில் அவர்கள் வெட்டியவை ஆகப் பத்து மரங்களே. அதாவது, மொத்தத்தொகை மரங்களில் 45 ஆயிரத்தில் ஒரு பங்கையே அவர்கள் வெட்டியிருக்கிறார்கள். இதற்காக ஒருவனது குடும்பத்திலிருந்து அவனைப் பிரித்துச் சிறையிலிருத்திச் சித்திரவதை செய்வது நீதியாகுமா?

சுந்தரம்: 45 ஆயிரத்தில் ஒரு பங்கைப் பாதுகாவாமற் பராமுக்மாயிருந்தால், எஞ்சிய 44,999 பங்கும் இவ்வாறே மறைந்துவிடும்.

ஞானசீலர்: அது உன் பெரியம்மாவின் கடாவிற்கு விடையாகக் கூறினேனேயன்றிப் பிறிதல்ல. உண்மையில் இத்தோட்டம் என்னுடையதல்லவே.

முதுநிலை வளைஇய பொதுநில மெவர்க்கும்
சொந்தமே யலதெவர் தந்தநு மல்லக்
கூத்தாட் டவைக்களத் தற்றே யிருநிலம்
போக்கு மதுவிளிந் தற்றே யுணருதிர்
நீண்மணி மாடமுஞ் சேண்மலி ஞெள்ளலுங்
காண்மதி யீண்டவை கருதிற் பொதுவாம்
னென்ன லென்னதா; நின்னதா நாளை?

எங்கள் நிலம் என்கிறோமே. நாமா அதற்குள் நின்று நெற்றி வெயர்வை நிலத்தில் வீழ வேலை செய்தோம்?

சுந்தரம்: அப்படியல்லவே. நீங்கள் பணஞ் சம்பாதித்து அத் தோட்டத்தைப் பாதுகாத்துவந்தீர்கள்.

ஞானசிலர்: மகனே! பணம் ஈட்டிப் பாதுகாத்தேன் என்கிறாய்.

ஈண்ட லரிதாய்க் கெடுத லெளிதாகி
மாண்பி னிபற்கை மருவி லரும்பொருளைத்
தீண்டப் பெரிதே திரட்டத் தருகுநர்
ஆண்டகை வினைஞரே யன்றிவே றூர்சொலாய்?

புண்ணிய மறந்துபின் பொருளில் லார்களின்
கண்ணினை மறைத்தவர் கருத்துக் கேற்பிலா
வெண்ணில தீங்கிழைத் தினிதி னீட்டலி
னெண்ணிதி விழைகிலா வுளமே யுத்தமம்

எனினும், பிறரை வருத்தித் தாமின்புறுவதில் வெட்கமடையாதோருக்கு இதனை எடுத்துக்காட்டி உணரச்செய்தல் மிக்க கடினமாகும்.

(தொடரும்)

ஆசிரியர் குறிப்புரைகள்

'ஞாயிற்'றின் கட்டுரைகள்

இக்கலைக்கழகத்தினின்று வெளிவரும் கலை'ஞாயிற்'றினுக்கு அவ்வக் கலைத்துறைகளில் வல்லாரால் அன்போடு எழுதப்பட்டுவரும் கட்டுரைகள் அவ்வத் துறையில் அறிவையும் இன்பத்தையும் விழைவார்க்குப் பயனளிப்பனவாகும். வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்களாலும், வித்துவான் திரு ந. சுப்பையாபிள்ளை அவர்களாலும் எழுதப்பட்டுவரும் தொல்காப்பிய ஆராய்ச்சிக் கட்டுரைகள், பண்டிதத் தேர்வுகளுக்காக இலக்கணக் கலைகள் கற்கும் மாணவர்க்குப் பெரிதும் பயன் தரத்தக்கன.

வியாகரண மஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வை. இராமசாமிசர்மா அவர்களால் எழுதப்பட்டுவரும் காவிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் மாணவர் முதலான யாவரும் எளிதில் அறிந்து மகிழத்தக்கனவாக இருக்கின்றன. 'அகத்திய'ரும், 'பதஞ்சலி'யும் முறையே எழுதிய அகப்பொருட்சுவை வாய்ந்த 'நகைக்கூட்டஞ் - செய்தான் அக்கள்வன்மகன்', 'ஒரு கவிநயம்' என்பன தமிழ்ப்புலவரும் மாணவரும் மகிழ்ந்திறந்து படிக்கற்பாலன.

இந்நிலையத்தின் தலைவராகிய திரு சு. நடேசபிள்ளை அவர்கள், பி. ஏ, பி. எல்., தாம் இயற்றி முன்கதிர்களில் வெளியிடுவித்த 'சகுந்தலைவெண்பா', 'கதிர்காமநாதன் திருப்பள்ளியெழுச்சி' என்னுஞ் செய்யுட்கள் சொல்லழகும் பொருளழகும் இன்பச்சுவையும் ஒருங்கமைந்த தெள்ளிய நடையினையுடையன. இன்பம் பயக்கும் கலைநலன்களுள் சிறந்தது கவிதையாகிய பாட்டாகும். இத்தகைய பாடற்றொழிலிற் பிள்ளை அவர்கள் ஊக்கங்கொண்டிருப்பது தமிழறிஞரால் மிகவும் பாராட்டற்பாலதாகும்.

பிரம்மஸ்ரீ தி. சதாசிவஐயர் அவர்கள் யாழ்ப்பாணத்தில் தலைமைத் தமிழ் வித்தியாதரிசியாராகவும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் காரியதரிசியாராகவும் இருப்பது இலங்கைத் தமிழ்மக்கள் எல்லாரும் அறிந்ததே. அன்னவர் எமது 'ஞாயிறு' தோன்றியபோதே அன்புடன் வாழ்த்துரை அனுப்பியதோடு, காளிதாச மகாகவிஞரும் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளும் சம்ஸ்கிருதத்தில் இயற்றிய தேவிதோத்திரங்களைத் தமிழ்யாப்பில் தெளிவாகப் பெயர்த்தமைத்து முன்கதிர்களில் வெளியிட வழங்குவாராயினர். இவ் இருபனிக்கதிர்களுக்கு அவர்கள் வரைந்தனுப்பிய 'பாடசாலைகளில் இலக்கியக்கல்வி' என்னுங் கட்டுரையில் ஆசிரியர் மாணவர்க்கு இலக்கியக்கலைகளைக் கற்பிக்கவேண்டிய முறையினையும், மாணவர் அவைகளைக் கற்கவேண்டிய முறைகளையும் மிக நன்றாக எடுத்துக் காட்டியிருக்

கின்றார்கள். இதுபோலவே, பள்ளிக்கூடங்களில் இலக்கணங் கற்க வேண்டிய நன்முறையினையும் எடுத்தெழுதி மாணவமாணவிகைகட்கு ஊக்கம் பயப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

திருக்கோணமலை திரு க. விசுவலிங்கம் அவர்களால் எழுதப்பட்ட சாங்கிய - யோக தர்சனங்கள் என்னும் ஞானக்கலைகளைப்பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஞானப்பொருள்களை ஆழ்ந்து அறிய விழைவார்க்குப் பல உண்மைகளைத் தெரிப்பன.

மொழிநூற் புலமையாளராகிய கனம்பொருந்திய நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களுடைய கட்டுரைகள் புதிய வழியாற் சொற்பொருளாராய்ச்சி செய்வார்க்குத் துணைசெய்வனவாகும். சிலர் கருத்து வேறுபாடுகள் கொள்ளலாம். அன்னோரும் இவ்வழியில் மேன்மேலும் ஆராய்ந்து 'ஞாயிறு' வாயிலாக வெளியிட்டால், சொற்களின் இயல்புகள் தமிழ் அறிஞர் யாவராலும் அறியப்படுவதுடன், ஆராய்ச்சியின் இறுதியில் நிற்பனவாகிய உண்மையான தமிழ்ப்பகுதிகள் தமிழ் உலகத்தால் நன்கு அறியப்படும். ஆகவே, இத்திறக் கலையாராய்ச்சி இந்நாளில் ஆங்கிலம் முதலான பிறமொழிகளின்கண் செய்து வெளியிடப்படும் ஆராய்ச்சிபோன்றதாகும். செந்தமிழ்ச்செல்வர் சிலரால் இவ்வெளியீடு மூலமாகச் செய்யப்படும் 'எலிமயிர்ப்போர்வை' யைப்பற்றிய ஆராய்ச்சியாலும் உண்மைகள் பல அறியப்படும்.

இக்கதிர்களில் 'இசைத்தமிழ்க்கல்வி' யைப்பற்றிப் பண்டிதர் திரு. செவ்வந்திநாததேசிகர் அவர்களுடைய ஆராய்ச்சிக்கட்டுரை யொன்று முற்றொடர்ச்சியாக வந்துளது. இன்பக்கலைகளுள் இன்பக்கலையாகிய இவ் இசைக்கலை ஆராய்ச்சியை இதுபோது செவ்விதின் செய்து போதரும் உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்கள் ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தில் 'நீலகண்ட யாழ் மரபு' என்னும் அரியபெரிய பொருளை எடுத்துப்பெருஞ் சொற்பொழிவு செய்தமை இதில் பன்மணிக்கோவை என்னுந் தலைப்பின்கீழ் விரிவாகக் குறிப்பிடப்பட்டுளது. அச்சொற்பொழிவு 'ஞாயிற்' றின் இரண்டாம் ஆண்டு முதற்கதிரில் கட்டுரை வடிவத்தில் வெளிவரும். அன்றியும், மலையாளநாட்டில் திருவனந்தபுரத்தில், உயர்ந்த கருத்துக்களை இன்சுவைப்பாக்களில் அமைக்கும் பாவலராகவும், இசைவல்லுநராகவும் விளங்கித் 'தென் இந்திய தாகூர்' என்று புகழ்ந் தெடுத்துக் கூறப்பெறுவாராகிய திருவாளர் தி. இலக்ஷ்மணப்பிள்ளை அவர்கள், பி. ஏ., எம் வேண்டுகோளால் நெடுநாட்கு முன்னரே எழுதி எமக்கனுப்பிய 'இசை அல்லது சங்கீதம்' என்னுங் கட்டுரையும் அக்கதிரிற்றானே வெளிவருவதாகும். அக்கட்டுரைகள் இரண்டும் இசையின்மீது ஆர்வமிக்கார்க்கு அகமகிழ்ச்சியைத் தரும்.

திரு. கா. கி. நடராஜன் அவர்களால் டால்ஸ்டாய் என்பாரின் கருத்துக்களைத் தழீஇ எழுதப்பட்டுவரும் புதுநாடகமும் மகளிர் ஆடவர் மகிழ்சிறந்து படிக்கத்தக்கதாகும்.

இக்கலாநிலையக் கழகமானது திருந்திய சித்திரப்படங்கள், கல்முதலானவைகளில் செய்யப்பட்ட சிற்பங்கள், கட்டிடங்களில் திகழும் சிற்பங்கள் முதலானவற்றையும்பற்றி 'ஞாயிறு' மூலமாகத் தமிழ் மக்களுக்கு அறிவிக்குங் கருத்துக் கொண்டிருத்தலின், கோயமுத்தூர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் அவர்கள் வரைந்தனுப்பிய 'சாளுக்கிய அரசர்களின் சிற்பக்கோயில்கள்' என்னுங் கட்டுரையும் இக்கதிர்களில் வெளிப்படுத்தப் பட்டுளது. இத்தகைய கட்டுரைகளை எமக்கு எழுதியனுப்பக் கலைவிநோதர் முன்வருவாராக.

இவ்வரிய பெரிய கட்டுரையாளர்க்கும், கற்றாரும் மற்றாரும் படித்து இன்புறத்தக்கவாறு ஏனைய பொருள்களைக் குறித்து 'ஞாயிற்'றுக்கு வரைந்து உதவிசெய்யும் கல்வியாளர்க்கும் யாம் பெரிதும் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையேம்.

ஆங்காங்குள்ள அன்பர் சிலர் விரும்பியவாறும், மவுன்ற் லவினியாவிலிருந்து திரு. வி. கந்தையா என்பார் கலாநிலையத்தைப்பற்றியும் 'ஞாயிற்'றைப்பற்றியும் மகிழ்சிறந்து சிலநாட்களுக்குமுன் ஆங்கில 'இந்துசாதன'த்திற்கு எழுதிய ஒரு கடிதத்தில் குறிப்பித்தவாறும் கலாநிலயத்தில் அவ்வப்போது பேர் அறிஞரால் செய்யப்படும் அரிய சொற்பொழிவுகளும் 'ஞாயிற்'றில் முழுவதாக வெளிவருவதற்கும் இனி முயலப்படும்.

180

நிகழ்ச்சிகளும் ஆராய்ச்சிகளும்

கலாநிலையத்தின்கண், பெப்ருவரித் திங்கள் 23-ம் நாள் வெள்ளிக் கிழமை மாலை 5—15 மணிக்குச் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் திருநாள் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. முதற்கண், அன்புடன் போந்திருந்த தமிழ்ப்புலவர்கள், ஆங்கில அறிஞர்கள் முதலான தமிழ்மக்கள் யாவருக்கும் பூம்பொழில்விருந்து செய்யப்பட்டது. இசையும் நடைபெற்றது. பின்னர், பெரும்புலவர் அவர்களின் நுண்ணிய ஆராய்ச்சி, ஊக்கம் என்றின்னவற்றைக் குறித்துக் கனம்பொருந்திய டக்ரர் ஐசக் தம்பையா அவர்கள், பார்-அட்-லா, சிறிதுநேரம் உரைத்து, புலவரவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்தார்கள். அதன்மேல், 6-45 மணியளவில் வைத்தியேசுவர வித்தியாலய மண்டபத்தில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை ஏற்ப, வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையர், பண்டிதர் திரு. சி. கணபதிப்பிள்ளை, வியாகரண மஹோபாத்தியாய பிரம்மஸ்ரீ வை. இராமசாமி சர்மா ஆகிய இம்மூவரால் புலவர் அவர்கள் வாழ்க்கையையும், அவர்கள் இலக்கணநூல்கள், செய்யுளிலக்கிய வசனஇலக்கிய நூல்கள், கண்டன நூல்களை, மொழிபெயர்ப்பு நூல்கள் இயற்றியமையையும், சிறந்த நூல் உரைகள் சிலவற்றைத் திருத்தி அச்சிட்டமையையும், சில நூல்களுக்குப் புத்துரை எழுதினமையையும், மாணவர் பலர்க்கு எதனையும் மறைக்காது அன்போடு பாடஞ் சொல்லினமையையும், நூல் உரையாசிரியர்கள் பலர்க்குப் பேர் உதவி செய்தமையையும், அவர்கள் இவ்வாறு மகாவித்துவானுப் கவிசிரேட்டராய் இலங்கையிலும் தென் இந்தியாவிலும் பெருமதிப்படைந்து விளங்கினமையையும்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன. வழக்கறிஞர் திரு. வே. நாகலிங்கம் அவர்களால் தலைவர்க்கும் விரிவுரை நிகழ்த்தினர்க்கும் நன்றி கூறப்பட்டபின், சிறப்புற்ற திருவிழாக் கூட்டங் கலைவதாயிற்று.

ஆங்கிலங் கற்றவர்கள் இந்நாளில் தமிழ்ப்புலவர்களைப்பற்றி மொழியுங்கால், தமிழ்ப்புலவர்களில் ஆங்கிலங் கல்லாதவர்களைப் பழைய முறையில் கற்றவர்களென்றும், ஆங்கிலங்கற்ற தமிழ்ப்புலவர்களைப் புது முறையில் கற்றவர்களென்றும் மொழிவதுண்டு. இவற்றின் பொருள்கள்—புது முறையில் கற்றவர்கள் பலநூல்களையும் இக்காலத்து ஆராய்ச்சி முறையிற் கற்றவர்களென்பதும், முன்னவர் அங்ஙனங் கல்லாதவர்களென்பதும் ஆகும். இற்றைக்குப் பன்னிரண்டு ஆண்டுகளுக்குமுன் பேராசிரியராய்ச் சிறந்து விளங்கிய திரு. குமாரசுவாமிப்புலவர் அவர்கள் பழைய முறையில் கற்ற தமிழ்ப்புலவர்களுள் ஒருவராகிப் பெரும் பெயர் பெற்றவர்களென்று கருதப்படினும், சொற்சுருங்கக் கூறலுறின், அவர்கள் இயற்றிய



திருவாளர் அ. குமாரசுவாமிப்புலவர் அவர்கள்
சுன்னாகம், யாழ்ப்பாணம்
காலம்: *1855—1922.*

"ஈழகேசரி" ஆசிரியர் உதவியது.

திரு. அரிய நூல்களாகிய 'இலக்கண சந்திரிகை' என்னும் 'பெயர்ப் பகுப்பு விலக்கண'மும், 'வினைப் பகுபத விலக்கண'மும் அவர்களுக்கு வாய்ந்த தமிழ் சம்ஸ்க்ருதமென்னும் இருமொழிப் பெரும் புலமையை ஒருபுறங் காட்டுவதுடன், அவர்கள் செய்த சொல்லாராய்ச்சி நெறியானது ஆங்கிலமொழி வல்லார் இக்காலத்தில் செய்து போதரும் சொல்லாராய்ச்சி (Philological Research)யோடொத்து ஒழுகி, அதனினும் மிகச் சிறப்புறுவதாயிற்றென்பதனையும் மற்றொருபுறங் காட்டாநின்றன. இதனால், அப் பெரும்புலவர் அவர்கள் இயற்றிய இவ் அருமந்த நூல்களின் உதவி இந்நாளில் புதுமுறையில் தமிழ்ப்புலமை பெற்றாராலும் வேண்டப்படும் அத்துணைப் பெருமையுடையதாக இருக்கின்றதென்பது கொள்ளப்படும். அதனால், ஆங்கிலங்கற்று வல்லாரால் தமிழ்ப்புலவர்பால் பொதுவாகக் கூறப்படுங் குறை, திரு. குமாரசுவாமிப் புலவர் அவர்களை நோக்குங்கால் வலியுறாது போயது இறும்பூதாகும்.

திரு. குமாரசுவாமிப்புலவர் அவர்களுடைய அருமை பெருமைகள் இந்நாளில் யாவராலும் இனிதுணரப்படுதல் வேண்டுமென்று அவர்கள் திருநாள் சென்ற ஆண்டு சுன்னாகத்தில் உள்ள திருமகள் அச்சியந்திர சாலையில் 'ஈழகேசரி' ஆசிரியர் திரு. நா. பொன்னையா அவர்கள் நன்முயற்சியால் கொண்டாடப்பட்டது. இரண்டாவதாகிய இவ்விழாவில் இங்குத் திறந்து வைத்திடப்பட்ட புலவர் அவர்கள் திருவுருவப்படமும், விழாவிற்கான பொருட்செலவும் அப்பத்திராசிரியரானே அன்போடு அளிக்கப்பட்டன. அவர்களுக்குக் கலாநிலையத்தார் மாத்திரமன்றி யாழ்ப்பாணத்துத் தமிழ்மக்கள் யாவருங் கடப்பாடுடையர்.

பின்னர், ஏப்ரல் திங்கள் 12-ம் நாள் மாலை 'கலாநிலைய'ச் செயலாளர் திரு க. நவரத்தினம் அவர்களையும், அவர்கள்தம் மனைக்கிழத்தியார் திருமகள் மகேசுவரிதேவியாரையும் வரவேற்று உபசரிப்பதற்காக அங்கத்தினர் கூட்டம் ஒன்று கூடியது. அங்கத்தினர்க்கும் பிறர்க்கும் முதற்கண் இசையுடன் பூந்தோட்டத்தில் அன்புவிருந்து செய்யப்பட்டது. பின்னர், அக்கூட்டத்தில் திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை ஏற்றார்கள். கொக்குவில் ஆங்கிலபாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு. எம். கார்த்திகேசு அவர்கள் — நற்குண நல்லொழுக்கங்கள் நிறைந்த திரு. நவரத்தினம் அவர்கள் பொதுவாக தேசமுன்னேற்றத்தில் நாட்டம் வைத்திருப்பதுடன், கலாநிலையத்தை நிறுவியநாள் தொடங்கி, அதன் நூல்நிலையத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் தக்க நூல்களைச் சேர்த்தலிலும், வாரந்தோறும் ஒவ்வொரு அறிஞரைக்கொண்டு ஒரு சிறந்த பொருளைப்பற்றிச் சொற்பொழிவு செய்வித்தலிலும், இந்நிலையத்தைப் பலவழிகளிலும் வளர்த்தலிலும் கண்ணுங் கருத்துமாய் இருத்தலைக்குறித்தும், இன்னன பிறவற்றைக் குறித்தும் இனிதாகப் பேசி மணமக்களை வாழ்த்தினார்கள்.

அதன்பின்பு, உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள், திரு மணவாழ்வின் கருத்தையும், அஃது இயற்கையான வாழ்க்கையென்று பேர் அறிவுடையார் கருதுகின்றமையையும் எடுத்துக் காட்டி, திரு. நவரத்தினம் பல துறைகளில் நன்கு கற்றுத் தேசத்தொண்டையும் தமிழ்த்தொண்டையும் மேற்கொண்டு, இவைதம்மைத் தனிவாழ்க்கை என்னும் பாதிவாழ்க்கையின்கண்ணிருந்தே செய்து போதாக் கருதினாராயினும், தமிழிலும் ஆங்கிலத்திலுங் கல்வி பயின்று மனைவாழ்வினுக்குரிய அன்பு, விருந்தோம்பல் முதலான சீர்மைகள் பொருந்தி, இசைக்கலையில் எவரும் வியந்து இன்புறுந் திறமைபெற்று விளங்கும் திருமகள் மகேசுவரிதேவியாரை வாணிப முறையின்றி, அன்புமுறையினால் மனங்கலந்து கூடி முழுவாழ்வடைந்தது இயற்கை அல்லது கடவுள் கடைக்கூட்டியதாகும். பெரும்பான்மையும் எல்லாவகையிலும் ஒத்து மனங்கலந்து மணஞ்செய்துகொண்ட இவ் இருவரும் பொதுமக்கட்பணிக்கென்றே பிறந்தவராதலின், இப்பணியைத் தம் திருமனைவாழ்விலிருந்தே நீண்டகாலஞ் செய்துகொண்டு இனிது வாழக் கடவுள் அருள்புரிவாராகவென நன்கு மொழிந்திட்டார்கள். இடையே, திருமணக்கிரியையில் தீயோம்பல், தீவலம் வருதல் என்பனவற்றின் தத்துவக்கருத்துஞ் சுவாமிகளால் இனிது விளக்கிக் காட்டப்பட்டது.

இவற்றின்மேல், கூட்டத்தின் தலைவர் அவர்கள் — முதலில் திரு. கார்த்திகேசு அவர்கள் கூறியனவெல்லாம் திரு. நவரத்தினம் அவர்களைப் பற்றியே இருந்தன; சுவாமி உருத்திரகோடீசுவரர் கூறியனவற்றுள் பெரும்பாலன திருமகள் மகேசுவரி தேவியாரைப் பற்றியனவாயே இருந்தன. இச் சொற்பொழிவாளர் இருவரும் முன்னமேயே இவ்வாறு சொல்ல வேண்டுமென்று தம்முள் பேசிக்கொண்டு வந்தனரோ வென்று நினைத்தேன். இது இந்தியாவில் திருமணக்கிரியைகளில் ஒன்றாகிய எசலே ஒருவாறு ஒத்திருந்தது. திரு. நவரத்தினம் அவர்களுடைய திருமணம் கடவுளால் கூட்டுவிக்கப்பட்டதென்று சுவாமிகள் தத்துவப்பார்வையினால் கூறினார்கள். உலகப்பார்வையினால் பார்க்குமிடத்து, கலாநிலயத்தில் அவ்வப்போது தலைவன் தலைவியைப்பற்றிய ‘திருக்கோவையார்’, ‘முல்லைப்பாட்டு’, ‘பட்டினப்பாலை’ முதலான நூல்களின்மீது சொற்பொழிவுகள் செய்யப்பட்டமையைக் கேட்டுக் கேட்டே அவர் திருமணத்திற்கு உடன்பட்டாராவர். கலாநிலயம் ஒன்று தோன்றியிலதேல், அவர் பிரம்மசாரியாகவே இருப்பரென்று இவ்வாறு நகைச்சுவைபடப் பேசி மணமக்களை வாழ்த்தி முடிப்புரை கூறினார்கள். இவ்வாறு கலாநிலயச் செயலாளர் நவரத்தினம் அவர்கள் செய்யுந் தமிழ்த் தொண்டும், பிறவும் பெரிதும் மதிக்கப்பட்டு, அவர்களும் அவர்கள்தம் மனைக்கிழத்தியாரும் யாவராலும் உபசரிக்கப்பெற்றார்கள். முடிவில், திரு. நவரத்தினம் அவர்கள் தாம் புகுந்த மனைவாழ்க்கையிலும் தம் மனைக்கிழத்தியாரோடு எல்லாத் தொண்டுகளையுஞ் செவ்வனே செய்யக் கடமைப்பட்டிருப்பதாகக் கூறியபின், கூட்டம் இனிது நிறைவேறியது.

———

மேத் திங்கள் 4-ஆம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4 - 30 மணிக்குக் கலாநிலையத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டம் நிகழ்ந்தது. அதுபோது போந்திருந்த தமிழ்ப்பெருமக்கள் யாவர்க்கும் சிற்றுண்டி விருந்து செய்யப்பட்டது. நிலையத்தின் தலைவர் திருவாளர் சு. நடேசபிள்ளை அவர்கள் இந்தியாவிற்குச் சென்றிருந்தமையால், உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தலைமையில் ஆண்டுக் கூட்டம் நடைபெறலாயிற்று. கழகத்தின் மூன்றாமாண்டு அறிக்கையானது, செயலாளர் திரு. க. நவரத்தினம் அவர்களால் படிக்கப்பெற்று எல்லாருடைய உடன்பாட்டைப் பெற்றபின், நான்காமாண்டில் கழகச் செயல்களை நடத்துவதற்கும், 'ஞாயிறு' இதழை நடத்துவதற்குமுரிய உத்தியோகவான்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள்.* பின்பு, கலாநிலையத்தின் நோக்கங்களுக்கும் எதிர்கால வளர்ச்சிக்கும் விரிந்த செயல்களுக்கும் ஏற்றதொரு நிலையான இடத்தில் பெருங் கட்டிடம் ஒன்று இவ்வாண்டில் அமைக்கப்படுதல் வேண்டும்; அக் கட்டிடச் செலவிற்குப் பொருள் திரட்டப்படுதல் வேண்டும் என்னுந் தீர்மானமும், 'ஞாயிறு' பத்திரிகையை அச்சிடுவித்து வெளிப்படுத்தும் பொறுப்பை அதற்கேற்ற உடன்படிக்கைகளோடு உறுதிவாயிலாகத் திரு. க. கி. நடராஜன் அவர்களுக்குக் கொடுத்தல் வேண்டும் என்னுந் தீர்மானமும் நிறைவேற்றி வைக்கப்பட்டன. 'ஞாயிறு' வெளியீட்டைப்பற்றிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள், "'ஞாயிறு' வெளியீட்டின் அழகிய முறைகள் இலங்கையிலும் தென்இந்தியாவிலும் உள்ள தமிழ்ப்புலவராலும், ஆங்கிலங் கற்று வல்லாராலும், பத்திரிகாசிரியர்கள் பலராலும் உயர்வாக மதிக்கப்படுகின்றமைக்குக் காரணங்கள் சைவப்பிரகாச அச்சு யந்திரசாலையின் பொறுப்பாளர் திரு. ச. அகூயலிங்கம் அவர்கள் அவ்வச்சுக்கூடத்தில் அச்சுக்கோப்போர் முதலாயினரொடு நேரே கலந்து வேலைநடத்துவதில் எமக்கு அன்போடு கொடுத்திருக்கும் சுதந்தரமும், பிற வசதிகளும், அச்சுக்கோப்பார்தம் நல்லிணக்கமுமேயாகும்" என்று குறிப்பிட்டு, அவர்களுக்கு நன்றிசெலுத்துவாராயினர்கள்.

இவற்றின் பின்னர், தலைமைபூண்ட சுவாமிகள் "தமிழ்க் கலையாக்கம்" என்னும் அரிய பொருள்பற்றி மிக அழகாகப் பேசியவிடத்து, இந்நாட்டில் தமிழ் மொழியும், தமிழ்க் கல்வியும், தமிழ்க் கலைகளும் நன்கு வளரவேண்டுமாயின் – இக்கலாநிலையமும், இதன் வெளியீடாகிய 'ஞாயிறு' என்னும் உயரிய இதழும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் வளர்ச்சியடைதல் வேண்டும்; இவ்விரு சங்கங்களாலும் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்கள் பெரும்பயனடையலாம்; ஆதலால், இவ்விரு சங்கங்களும் பெரும் பொருளுடையாரால் தக்க பொருளுதவிகள் செய்யப்படுதல் வேண்டும்;

*விவரம் இதன்பின்னே பதிக்கப்பட்டிருக்கும் அறிக்கைத்தாளால் அறிக.

மற்றவர்களால் அரை ரூபா முதலாகச் சிறுகாசுகளாதல் தரப்படுதல்வேண்டும்; 'பொருள் படைத்தாருள் பிள்ளையில்லாதவர்கள் தமக்குப் பிற்காலத்தில் தம்பொருள் தமக்குகந்த வழிகளில் செலவிடப்படல் வேண்டுமென வழக்கறிஞர்களைக்கொண்டு உறுதிகள் எழுதுவிக்குங்கால், இரு சங்கங்களுக்கும் அப்பொருள்தனில் ஒரு பகுதி கொடுக்குமாறு அவ்வழக்கறிஞர்கள் அவர்களுக்கு உணர்த்திடல் வேண்டும். இவ்வாறெல்லாம் செய்வது தமிழ்த் தாய்க்குச் செய்யுங் கடமையாகும் என்று நயமாக எடுத்துக் காட்டி, அவைகளை அவையினர்தம் உள்ளத்தில் பதியச் செய்தார்கள். வழக்கறிஞர் வே. நாகலிங்கம் அவர்கள் சுவாமிகளுக்கு நன்றிகூற, விழா வாற்றல் எட்டரை மணிக்குச் சிறப்புடன் நிறைவேறலாயிற்று.

பண்டைத் தமிழ்க்கலைகளும், பிறகலைகளும், மேற்றிசைப் புதுக்கலைகளும்—நன்கு அறியப்படுதற்கும், ஆராயப்படுதற்கும், வளர்க்கப்படுதற்கும் ஒரு நிலையமாகியுள்ள இக்கழகம் சுவாமிகள் எடுத்துக்காட்டியவாறு பொருளுடையாராலும் அறிவுடையாராலும் உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும் போற்றப்படுதல்வேண்டும். பொருளுடையார் தம் பொருளை எத்தனையோ வழிகளில் வீணே செலவிடுகின்றனர். அன்னார் அவ்வீண்செலவுகளைக் குறைத்து, அதனால் எஞ்சும் ஒரு சிறிது பொருளைக் கலாநிலையம் ஓங்குதற்பொருட்டு நன்கொடையாக அளிப்பார்களாக. கல்வியறிவுடையார் பொருள் வருவாய்க்காகத் தாம் மேற்கொண்ட முயற்சியில் செல்லவிடுங் காலம்போக மிஞ்சிய காலத்தை வாளாகழிக்காது, கலாநிலையத்தின்கண் தமிழிலும் ஆங்கிலத்திலும் சேர்த்து வைக்கப்பட்டுள்ள பலதுறைக் கலைகளுக்குரிய அரிய நூல்களில் பயின்று அவற்றைப் பலவழியாலும் பரவச் செய்வார்களாக. இங்ஙனமெல்லாஞ் செய்தால் யாழ்ப்பாணநாட்டுத் தமிழ் மக்கள் மேல்நிலைக்கு வரலாகும். இந்நாடும் மேன்மேலுஞ் சிறப்புறும். ஒருசிலர் சிற்சில கலைகளில் வல்லுநராய் இருக்கின்றனரென்று மகிழ்ச்சியுற்றிருத்தல் சாலாது.

யாழ்ப்பாணத்தில் மேத்திங்கள் 19, 20, 21-ம் நாட்களில் நடைபெற்ற 'அகில இலங்கைத் தமிழ் வைத்திய மகாநாட்'டில் தலைமை ஏற்பான் சென்னைக்கருகில் தாம்பரம் என்னும் இடத்திலுள்ள க்ஷயரோக வைத்தியசாலையினின்று போந்த டாக்டர் சி. முத்து என்பார், மேத்திங்கள் 22-ம் நாள் மாலை வைத்தியேசுவர வித்தியாலய மண்டபத்தில் இந்நிலையத்தின் சார்பாக திரு. சு. நடேசபிள்ளை அவர்கள் தலைமையில் 'உடல் நலமும் நோயும்' என்பது குறித்து ஆங்கிலத்தில் ஒரு சொற்பொழிவு செய்தனர். அதில் அவர், மக்கள் நோயின்றி நூறு ஆண்டுகள் உயிர்வாழ வேண்டுமானால், அவர்க்கு சூரிய ஒளியும், நல்ல காற்றும், தக்க உணவும், உடற் பயிற்சியும், இடையிடையே பேச்சொழிவும், செயலொழிவும் இன்றி

யின்மையாச் சிறப்பினவென்று கேட்டார் யாவர்க்கும் நன்கு விளங்குமாறு மிகத் தெளிவாகக் கூறி, இலங்கைக்குச் சுயஆட்சி கிடைக்குமாயின், அவ்வாட்சியின் பயனைப் பெறுவதற்குப் பெண்களின் உடல்நலமும், அவர்கள் பெறும் பிள்ளைகளின் உடல்நலமும் செவ்வையாகப் பாதுகாக்கப்படுதல் வேண்டுமென்று முடித்தனர். ஆங்கில 'இந்துசாதன' ஆசிரியர் திரு. எம். எஸ். இளையதம்பி அவர்களால் டாக்டர் அவர்களுக்கு இனிய சொற்களால் நன்றி கூறப்பட்டது.

க்ஷயரோயைப்பற்றிய ஆராய்ச்சியிலும் சிகிச்சைமுறைகளிலுங் கைவந்து, இங்கிலாந்திலும் இந்தியாவிலும் பேர்பெற்ற டாக்டர் முத்து அவர்களால் சொல்லப்பட்ட இப்பொருள்கள் யாழ்ப்பாணத்து மக்கள் எல்லாராலும் மிகவுங் கவனிக்கற்பாலனவாகும். ஆசிரியர் திருவள்ளுவனார் தம் 'திருக்குறள்' நூலினுள் நாட்டிற்கு அழகு தருவனவென்று எடுத்துக் காட்டியவைகளுள் 'பிணியின்மை' ஒன்றாகுமென்பது ஈண்டுக் குறிப்பிடற்பாற்று. உலகத்தில் இதுபொழுது எங்கும் தேகசுகாதார இயக்கத்தில் ஊக்கங் கொள்ளப்படுகின்றமைபோலவே, யாழ்ப்பாணத்திலும் இவ்வகையில் மக்களுக்கு ஊக்கம் உண்டாதல்வேண்டும்.

பழைய இந்தியக்கலைகள் பலவும் திரும்பவுஞ் சீர்பெற வளர்க்கப்படுதல்வேண்டுமென்று பேர்அறிஞரால் முயலப்படும் இஞ்ஞான்று, டாக்டர் முத்து அவர்கள் இந்திய மருத்துவக்கலையின் பழமையையும் சிறப்பையும் யாண்டும் எவர்க்கும் எடுத்துக் காட்டி அதனை வளர்த்துப் பரப்புதற்கும் முயல்வது எமக்கு மகிழ்ச்சியைத் தராநிற்கின்றது.

பன்மணிக்கோவை

டக்றர் ஹீராநந்த சாஸ்திரியார்

அத்தொன்மை ஆராய்ச்சியாளரைப்பற்றிப் பின்னும் எழுதுவேமென்று கூதிர்க்கதிரில் குறிப்பிட்டேமன்றோ? அவர் வட இந்தியாவில் குசிநரா, சாரநாத், நளந்தா முதலான தலங்களில் நிலத்தை அகழ்ந்து பழைய கட்டிடங்கள் முதலானவைகளைக் கண்டவராவர். புத்தர்பெருமான் இறந்த குசிநராவில் அவர்தம் சிலைஉருவமும்; செம்புப்பட்டயங்கள், செம்புப்பாத்திரங்கள், வெள்ளிநாணயங்கள், விலையுயர்ந்த முத்துக்கள், கற்கள் முதலானவைகளும்; பௌத்தர்க்கும் ஜைனர்க்குஞ் சிறந்த தலமாக விருந்ததும், புத்தர் தருமோபதேசஞ் செய்தற்குரிய இடமாயிருந்ததுமாகிய நளந்தாவில் கி. பி. 6-வது, 7-வது நூற்றாண்டுகளில் கட்டப்பட்ட பெரிய மடங்கள், சித்திரவேலைப்பாடமைந்த கல்விக்ரஹங்கள், தாமிரவிக்ரஹங்கள் முதலானவைகளும் சாஸ்திரியாரால் கண்டெடுக்கப்படலாயினவாம்.

கி. பி. 7-வது நூற்றாண்டில் சீனத்திலிருந்து இந்தியாவிற்குப் போந்த ஹியூன் திஸங் (Hiuen Thsang) என்னும் சீனயாத்திரையாளர்தங் குறிப்புக்களால் நளந்தா பல்கலைக்கழகத்தில் அக்காலத்தில் 5,000 மாணவர்கள் பௌத்தசமய நூல்களோடு வேதநூல்களையுங் கற்றுவந்தனரென்பதும், அவர்கள் மிகுந்த கல்வியறிவாலும் நல்லொழுக்கங்களாலும் சிறப்புற்றிருந்தனரென்பதும், அரசர்கள் பலரால் அவர்களுக்கு ஏற்ற வசதிகள் செய்யப்பட்டிருந்தனவென்பதும், அங்கு மஹாயான புத்தமதம் பெருக்கமுற்றிருந்ததென்பதும் அறியப்படுகின்றனவென்று சாஸ்திரியார் தாம் கொழும்பில் செய்த "நளந்தா பௌத்தர் பல்கலைக் கழகம்" என்ற அரிய சொற்பொழிவில் எடுத்துக்காட்டினர்.

அச்சீரியர் யாழ்ப்பாணத்திற்கு வருங்கால், கலாநிலையம் என்னும் இக்கலைக்கழகத்தில் வனப்புக்கலைகளைக்குறித்து ஒரு சொற்பொழிவு செய்விக்க வேண்டுமென இதன் செயலாளரால் கருதப்பட்டிருந்துழி, சென்ற டிசம்பர் 7-ஆந் தேதி காலையில், பெருமழைக்கிடையில், அவர் யாழ்ப்பாணத்திற்கு வந்தவிடத்து, வரவேற்பை விரும்பாமலும், எவரும் எதிர்பாராமலும் தாமே முதலியார் செ. இராசநாயகம் (Retired C. C. S.) அவர்களுடன் கலாநிலையத்திற்குப் போந்து, இதுதன்னைப் பார்த்து மகிழ்ச்சியடைந்து, முதலியார் சு. திருச்சிற்றம்பலம் அவர்களையும், எம்மையுங் கண்டு சிறிது அளவளாவிவிட்டுச் செல்வாராயினர்.

189

அங்ஙனஞ் சென்ற சாஸ்திரியார் யாழ்ப்பாணநாட்டின் சரித்திர ஆராய்ச்சித்துறையில் மிக உழைத்துவரும் முதலியார் இராஜநாயகம் அவர்களுடன் இங்குப் பௌத்தசமயச்சேடங்கள் மிகுதியாகவுள்ள கந்தரோடை, இரண்டாயிரத்து நூற்று எண்பத்தாறு ஆண்டுகளுக்குமுன் அசோகமன்னன் மகள் சங்கமித்தா என்பாள் இந்தியாவினின்று தோணிவாயிலாய் வந்து இறங்கிய கரையென்று சொல்லப்படும் சம்புத்துறை, நிலத்தினின்று கடலுட் பாயும் தூய அருவியினாற் சிறப்புற்றுள்ள கீரிமலை, பழைய பெருநகரம் ஒன்று மணலின்கீழ்ப் புதைப்புற்றுக் கிடக்கப்பெற்றுள்ள வல்லிபுரம் என்னும் இடங்களைக் காண்பாராயினர். மழையினால் அவ்விடங்களைச் செவ்வையாக ஆராய அவருக்கு இயலவில்லையென்றும், இலங்கையரசாங்கத்தினர் சரித்திர உண்மைகளை அறிவதற்காக இப்பகுதிகளையும் விரைவில் அகழ்ந்து பார்ப்பரெனக் கூறினரென்றும் முதலியார் அவர்கள் எமக்குக் கடிதவாயிலாகத் தெரிவித்தார்கள்.

பழமை ஆராய்ச்சியில் சிறந்த சாஸ்திரியார் யாழ்ப்பாணத்தில் சிலநாட்கள் தங்கியிருந்தாரேல், இந்நாட்டின் சரித்திரத்திற் கின்றியமையாத பண்டை நிலைமைகளும், யாழ்ப்பாணத்திற்கும் இந்தியாவிற்கும் இருந்த பண்டைத் தொடர்புகளும் நன்கு புலப்பட்டிருக்கும்.

* * *

ஸிந்து நதிக்கரையின் பழைய நாகரிகம்

பாஞ்சால தேசத்தில் ஸிந்து நதியின் மேற்கரையோரமாகவுள்ள மோஹென்ஜொ-தரோ (Mohenjo-Daro) ஹாரப்பா, (Harappa) முதலான இடங்களில் இருக்கும் அணைகள் பன்னிரண்டு ஆண்டுகளாகத் தொன்மை யாராய்ச்சிப் பகுதியினரால் தோண்டிப் பார்க்கப்படுகின்றமையால் கி. மு. 2,750-ல் இருந்து, பின்பு அழிந்த நகரங்களின் அழகிய பெருங் கட்டிடங்கள், பௌத்தப் பள்ளிகள், கண்ணைக் கவரும் வேறு விசித்திரப் பொருள்கள் என்றின்னோரன்னவைகள் காணப்படுகின்றன. அவைகளால் அம்மிகப் பழைய காலத்தில் ஸிந்து நதிப் பக்கத்திலிருந்த மக்களின் அறிவின் உயர்வும், மேலான நாகரிக வாழ்க்கையும் அறியப்படுகின்றன. அவர்கள் யார் என்பது பூமிக்குள் புதைந்துகிடக்கும் அவர்கள்தம் மண்டை ஓடுகள் முதலான மிச்சப் பொருள்களைக் கொண்டு ஆராயப்படுகின்றது. ஆயினும், சில ஹேதுக்களால் அவர்கள் ஆரியருக்கு முன் ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பக்கத்திலிருந்து இந்தியாவினுட் புகுந்தனராதல் வேண்டுமென்பது ஐயத்தோடு கருதப்படுகின்றது. அவர்கள் சமயம் இந்தியப் பழங்குடிகளின் பழைய சமயமாகுமென்பதும் அறியப்படுகின்றது. மற்று

அவர்கள் எத்துணைக் காலத்திற்குமுன் எவ்வழியாகப் போந்தனரென்பது மட்டும் இதுபோது கருதப்படுவதற் கியலவில்லை. இதுகாறும் இந்திய சரித்திரம் கி. மு. 1,500 இல் ஆரியர் வருகை என்பது தொடக்கமாக எழுதப்பட்டு வரலாயிற்று. இப்பொழுது அதற்கும் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட நாகரிகத்திலிருந்து இந்திய சரித்திரம் எழுதப்பட விருக்கின்றது. இச்செய்திகளெல்லாம் லண்டன் பட்டினத்தில் உள்ள இராஜ கலாசங்கத்தின் இந்தியப் பகுதி (Iudian Section of the Royal Society of Arts) யில் சென்ற டிசம்பரில் டக்டர் இ. ஜே. எச். மக்கே, எம். ஏ, என்பார் நிகழ்த்திய அரும்பெருஞ் சொற்பொழிவினின்று தொகுக்கப்பட்டவைகளாகும்.

டக்டர் ரபேந்திரநாத தாகூர் அவர்களுடைய "சாந்தி நிகேதந"த்தில், திருவனந்தபுரம் மஹாராஜாவின் கலாசாலையில் தலைமை ஆசிரியராய் உள்ள ஸ்ரீமான். கே. வி. அரங்கசுவாமி ஐயங்கார் அவர்கள் தாம் சில நாட்களுக்கு முன் 'இந்திய கலையறிவிற்குத் திராவிடர் உதவி' என்று செய்த ஒரு சொற்பொழிவில் 'மோஹென்ஜொ - தரோவில் தோண்டல் செய்தலால் அறியப்படும் பழைய உயர்ந்த நாகரிகமானது, ஆரியரது நாகரிகத்தோடு தொடர்புற்றிருப்பதினும் திராவிடரது நாகரிகத்தோடு மிக நெருங்கியிருப்பதைக் காட்டுகின்றது' என்று கூறுவாராயினமை காண்க.

பொதுவாகச் சைவசமய அறிஞராவார் சிவாகமங்கள் சிவபெருமானிடமிருந்து தோன்றின வென்றும்; சமய சரித்திர ஆராய்ச்சியாளரில் ஒரு பாலார் அவைகள் காஸ்மீர தேசத்தில் தோன்றின வென்றும்; வேறொரு பாலார் அவைகள் கங்கை நதிக் கரையில் எழுதப்பட்டன வென்றும்; மற்றொரு பாலார் அவைகள் கடலுள் மூழ்கிப் போன தமிழ் நிலத்தில் தோன்றிப் பின்னர்ப் பல மாறுதல்களோடு சமஸ்க்ருதத்தில் பெயர்க்கப்பட்டன வென்றும் தம்முள் மாறுபட்டுக் கூறிவருகின்றனர். இங்ஙன மெல்லாங் கூறப்படினும், அவ் ஆகமங்கள் காஸ்மீரத்திலிருந்து நேபாளம் வரையில் உள்ள இடங்களிலே தோன்றின வென்றும், மோஹென்ஜொ - தரோ, ஹரப்பா என்னும் இடங்களில் அகழ்தல் செய்யப்பட்டமையானது—அவைகள் தோன்றிய காலம் கி. மு. 5000 என்று கூறுவதற்கு உதவி செய்கின்றதென்றும் டாக்டர் வி. வி. ரமணசாஸ்திரியார் கருதுவாராகின்றனர். இது சைவருள் பொதுவாக எல்லாரும், சிறப்பாகச் சிவாகமத்தின் தோற்றத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்குநரும் அறிந்து கருதத்தக்கதாகும். இக்குறிப்பு சிவாகமத்தின் தோற்றம், தொன்மை, வளர்ச்சியுமென்ற இவற்றைப்பற்றி மேன்மேலும் ஆராய்ந்திடத் தூண்டல் செய்வதாகும்.

* * *

யாழ்ப்பாணம்

சரஸ்வதி விலாச சபை

இச்சபையின் இருபத்தொன்ருவது வருடாந்தவிழா சென்ற ஏப்ரல் திங்கள் 9-ஆம் நாளில் கலாநிலைய மண்டபத்தில், சிற்றுண்டி சங்கீதம் ஆகிய இவற்றுடன் சிறப்பாக நடைபெற்றது. அதுபோது, 'இந்துசாதன' உதவி ஆசிரியரும், இச்சபையின் பிரதிக்காரியதரிசியுமாகிய திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்களால் வாசிக்கப்பட்ட ஆண்டு அறிக்கையினுல் 'மனோகரன்', 'வேதாள உலகம்', 'உருக்குமாங்கதன்', 'நமசிவாயம்' என்ற நாடகங்கள் இச்சபையினுல் நடிக்கப்பட்டனவென்பது அறியப்பட்டது.

நாடகக்கலையானது பண்டு தமிழ்நாட்டில் கல்வியாளரால் வளர்க்கப்பெற்றது. இடைக்காலங்களில் அன்னவரால் இக்கலை பல காரணங்களால் கைவிடப்படுவதாயிற்று. இக்காலத்தில், இது திரும்பவும் சென்னைச் 'சுகுணவிலாச சபை'யார் போன்ருரால் கையாளப்பட்டு நாகரிகமக்களுக்கு நன்மைபயந்து வராநிற்கின்றது. யாழ்ப்பாணத்தின்கண்ணும் இக்கலை கற்ருேரால் இருபத்தோராண்டுகளாகப் போற்றப்பட்டுவருதல் மகிழற்பாலது. இருபது ஆண்டுகளுக்குமுன் 'நடகாபிமானி' என்று சென்னபட்டினத்தில் நடைபெற்ற பத்திரிகையொன்றினுல் நாடகமேடையின் சீர்கேடுகள் ஒரு சிறிது திருத்தப்பட்டுவந்தன. அங்ஙனம் ஒரு சமயத்தில் நாடக அரங்கச் சீர் அமைப்புக்கள் செய்யப்படினும், நாடகத்தைப் பொருள்வருவாய்க்குரிய ஒரு தொழிலாகக் கொண்டோராலும், அதனை விளையாட்டாகப் பயில்வோராலும் புராண இதிகாசக் கதைகள் நடிக்கப்படுங்கால், நடிகராவார் முற்காலத்துக்குரிய ஆடை யணிகளுக்கு முற்றிலும் மாறுபட்ட இக்காலத்துக்குரிய நாகரிகஅடைவில் தம்மை அலங்காரஞ் செய்துகொண்டு நாடகஅரங்கினில் வருகின்றனர். சிறிதும் பொருத்தமில்லாத இம்முறை அறிவுடையாரால் இற்றைநாட்களில் எள்ளி நகையாடப்படுகின்றது. மற்ருென்று—நாடகமாக்கப்பட்டுள்ள பழைய சிற்றின்பச் சரிதைகளே திரும்பத் திரும்ப நடிக்கப்படுதலால் நாட்டிற்கு நலம் உண்டாவதாகக் காணப்படவில்லை. காலநிலைமைக்கேற்ப மக்கள் எவ்வெவ்வகையில் அறிவுடையராதல்வேண்டுமோ அவ்வவ்வகையில் நாடகக்கலை பயன்படுத்தப்படல்வேண்டும். அரசர், போர்வீரர், புலவர் முதலான முந்தையோர்தம் அரும்பெருஞ் செயல்கள் இக்காலத்துச் சரித்திரவாராய்ச்சிக் கிணங்க நாடகநூல்களாக எழுதப்பட்டு நடிக்கப்படுதல் இன்றியமையாதது. இக்காலத்து மக்கள்தம் தவருன வாழ்க்கையாலும் வழக்க வொழுக்கங்களாலும் உண்டாகும் இடர்கள் பலவும், அவற்றைக் களையும் வழிகளும், எதிர்கால இன்ப உலகமும் நடித்துக் காட்டப்படுதல்வேண்டும். இச்சபையாரால் இலங்கை உயர்தர நீதிமன்றத் தலைவராகிய பெருமைவாய்ந்த எம். ரி. அக்பார் முன்னிலையில்

நடிக்கப்பட்டு, அவர்தம்மால் புகழ் தேத்தப்பெற்ற 'நமசிவாயம் அல்லது நான் யார்' என்ற நவீன நாடகம் மக்களுக்கு ஆன்மஞானம் பயப்பதற் கேற்றதொன்றாகும். அதுபோலவே, இத்தேச நலத்திற்கு இந்நாளில் வேண்டற்பாலனவான ஒழுக்க வழக்கத் திருத்தங்கள் அமைந்த வேறுபல உயரிய புது நாடகங்கள் நாடக ஆசிரியர்களாகிய பண்டிதர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை, வித்துவான் க. இராமலிங்கம் என்றின்னோரால் புதுவழியில் புனையப்பட்டு இச்சபையில் நடித்துக் காட்டப்படுமென்று நம்புகின்றோம். நாடகத்திற் சிறந்த நாடே நாகரிகத்திலுஞ் சிறக்குமென்பது நாடகக் கவிஞர் கருத்தாகும்.

நம் யாழ்ப்பாண நாட்டில் கலைகள் பலவற்றைப் பொதுவாக வளர்த்துப் பேர்ப்பும் பொருட்டுக் கலா நிலையம் சிலவிருனும், சங்கீதத்தையும் நாடகத்தையுஞ் சிறப்பாக எடுத்து வளர்க்க முறையே சங்கீத சமாஜமும், சரஸ்வதி விலாச சபையும் செழித்து வருகின்றமை கலாவிநோதர் யாவர்க்குங் களிப்பெய்துவிப்பதாகும்.

கவிதை, சங்கீதம், நாட்டியம், நாடகம், சித்திரம், சிற்பம் என்றித் தொடக்கத்துப் பல்கலைஞானியாராகிய டாக்டர் ரவீந்திரநாததாகூர் இங்குப் போந்து, தம் கலைமாணவர்களைக் கொண்டு நடிப்பித்துக் காட்டவிருக்கும் திருந்திய நாடகநெறியைக் காணலால், சரஸ்வதி விலாச சபையார் மனமகிழ்ச்சியோடு தமது நாடகப் போக்கை இன்னும் வளர்க்க இடமுண்டாகுமென்று நினைக்கின்றோம்.

* * *

யாழ்ப்பாணம்

ஆரியதிராவிட பாஷாபிவிருத்திச்

சங்கம்

தென் இந்தியத் தமிழ்நாட்டில் சென்ற மார்ச்சுத் திங்களில் காந்தைத் தமிழ்ச்சங்கத்தின் இருபத்துமூன்றாவது ஆண்டு விழாவும், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்கள் திருநாட்கொண்டாட்டமும்; இம்மேத் திங்களில் மேலைச்சிவபுரிச் சன்மார்க்க சபையின் இருபத்தைந்தாவது ஆண்டு வெள்ளிவிழாவும் மகாமகோபாத்யாய தாக்ஷிணாத்ய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்களை அவைத் தலைவராகக் கொண்டு சிறப்பாக நிகழ்ந்தமையை அறிந்து மனமிகமகிழ்வே மாயினேம். அவ்விரு சங்கங்களின் தலைவர்களும் எமக்கு அழைப்புத் தாள்கள் அன்போடு அனுப்பினமைக்கு அவர்கள்பால் எமது அன்பும் உரிமையாக் கப்படுகின்றது.

193

இவ் யாழ்ப்பாண நாட்டிலும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தின் பன்னிரண்டாவது வருடாந்த மகாசபைக் கூட்டமும் விழாவும் மேத் திங்கள் 5-ம் நாள் மாலை 4 - மணிக்கு வண்ணார்பண்ணை வைத்தீசுவர வித்தியாலய மண்டபத்தில் உயர்திருவாளர் சுவாமி விபுலாநந்தர் அவர்கள் தலைமையில் இனிது நடைபெற்றன. சுவாமிகள் 'நீலகண்ட யாழ் மரபு' என்னும் அரும் பெரும் பொருளை எடுத்துப் பெரியதோர் விரிவுரை நிகழ்த்தினார்கள். அதில், "பண்டைக்காலத்திற் பெரும்பாலும் பாணர் என்னுந் தமிழ்க்குடி மக்களால் இசைத் தமிழ் குலவித்தையாகக் கற்கப்பட்டு வளர்ச்சியுற்றது. அரசு துறந்த இளங்கோவடிகளால் சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட கடைச்சங்க காலம் வரையிலும் அப்பாண் குடிமக்களால் இசை வள[illegible], பின்னர்ப் பௌத்த சைனத் துறவிகளால் இசை இன்பம் பயப்பதாதலின் தீது என்று கடியப்பட்டது. அத்தடையால் இசைவளர்ச்சி குன்றியது. திரும்பவும் சைவசமயத்திற் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர், பாணபத்திரர் என்ற இருவராலும் வைணவ சமயத்துத் திருப்பாணாழ்வாராலும் தமிழ் இசை புத்துயிர் பெற்றது. பின்பு, ஆரிய சங்கீதம் தமிழ் நாட்டில் புகுந்தது. பழைய இசையோ அறிதற்கு அரியது; இக்காலத்துக் கருநாடக சங்கீதம் எளியதாகும்.' பிற்காலத்தாரால் தொல்காப்பியச் செய்யுளியல் அரியதென்றும், யாப்பருங்கலக்காரிகை எளியதென்றும் நினைக்கப்பட்டு, அப்பின்னூல் கைப்பற்றப்பட்டமைபோல, பிற்காலத்துத் தமிழ்மக்களால் தமிழ் இசை அரிதென்று கைவிடப்பட்டுக் கர்நாடக சங்கீதம் கொள்ளப்படுவதாயிற்று" என்றிவ்வாறு தமிழிசையின் வரலாற்றை மிக விளக்கமாகவும் இனிமையாகவுங் கூறினார்கள். தமிழ் இசைக்கருவியாகிய யாழைப்பற்றிப் பேசியவழி, "பழைய தமிழ்நூல்களில் யாழைப்பற்றி மிகச் சிறப்பாகச் சொல்லப்பட்டுளது; இடைக்காலத்தில் வீணை என்னும் ஆரியர் இசைக்கருவி வந்தமையால், அக்காலத்துத் தமிழ்நூல்களில் யாழும் வீணையும் சொல்லப்பட்டுள்ளன. பிற்காலத்தில் 17-வது நூற்றாண்டில் தஞ்சை மஹாராஷ்ட்ர சமஸ்தான சங்கீதவித்துவான்களால் யாழ் அழிக்கப்பட்டிருத்தல்வேண்டும். சிலப்பதிகாரத்துக் 'கானல்வரி' உரை இப்போது இருப்பின், யாழின் உருவமும் அளவும் செவ்விதின் அறியப்படலாகும். அதுவும் அன்னியமக்களால் அரிக்கப்பட்டிருத்தல்வேண்டும்" என்று சுவாமிகள் குறித்தார்களாயினும், பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப்படை, பொருநராற்றுப்படை என்னும் பழைய பாட்டுக்களின் அடிகள் சிலவற்றின் துணைகொண்டு சகோடயாழ், செங்கோட்டியாழ் என்பவற்றின் உருவங்களைப் படத்தில் கணக்காகவும், அழகாகவும் அமைத்துக் காட்டினார்கள். சுவாமிகள்தம் ஆழ்ந்த ஆராய்ச்சிநிறைந்த இவ்விரிவுரையும், அவர்கள் வரைந்து காட்டிய இரண்டு யாழ்களின் உருவங்களும் அவையில் இருந்த தமிழ்ப்புலவர், ஆங்கிலவிற்பன்னர், சங்கீதஞானிகள் என்ற இவர்தம் உள்ளத்தைச் சாலவும் மகிழச்செய்தன.

அதன்மேல், சுவாமிகள் தாம் சங்கத்தின் ஆண்டுவிழாவினைப்பற்றிக் கூறிய முடிவுரையில், இச்சங்கத்தின் பரீட்சைகளில் தேறிய மூவகைப் பண்டிதர்களும் அரசினரால் தேர்ச்சி இதழ் (Certificate) கொடுக்கப்பெறுவதோடு ஆண்டுவிழாவில் கூடும் அவையினர்க்கும் அறிமுகப்படுத்தப்படுதலும் வேண்டும் என்று குறிப்பிட்டார்கள்.

சுவாமிகள் திருவாயினின்று வெளிவந்த 'நீலகண்டயாழ் மரபு' என்னும் இவ்வரியபெரிய ஆராய்ச்சிப்பொருள் மாயமாகிப்போகாமல், இலங்கை நாட்டிலும் தென்இந்தியத் தமிழ்நாட்டிலும் உள்ள தமிழ்ப் பெருமக்கள் பலரும் அறிந்து இன்புறுமாறு 'நீலகண்டயாழ் மரபு' அல்லது 'பெரும்பாணர் இசைநூல்' என்னும் பெயரொடு --பாணர்வரலாறுரைத்தது, யாழ் உறுப்புரைத்தது, பண்ணுந் திறமு முரைத்தது, இசைப்பாட் டிலக்கண முரைத்தது, தேவாரப்பண்ணடைவு உரைத்தது, பிறநாட்டிசைமர புரைத்தது என்றித் தொடக்கத்த அதிகாரங்கள் பதினைந்து கொண்டு விரைவினில் நூல்வடிவாக வெளிவரும். இத்தகைய அரிய பெரிய இசைநூல் தமிழிசைக்கலை மீண்டும் வளர்ச்சியுறுதற்கு இன்றியமையாத் துணையாகும்.

* * *

டக்டர் ரவீந்திரநாத தாகூர்

வங்காளக் கவியரசர் ரவீந்திரநாத தாகூர் இலங்கைக்கு வருகின்றாரென்பது யாழ்ப்பாணத்தில் அறியப்பட்டவுடன், அவரை இங்கும் வரவழைக்கவேண்டுமென்னும் அவாவோடு சென்ற ஏப்ரல் 30-ஆந் தேதி கலாநிலையத்தினதும், சங்கீதசமாஜத்தினதும் ஆதரவில் கனம் டக்டர் ரி. ஐசக் தம்பையா அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணத்துப் பொதுமக்கள் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் கவியரசர் தாகூரை இங்கு வரவழைக்கவேண்டுமெனச் செய்யப்பட்ட முடிவுக்கிணங்க, அவர் ஜூன்திங்கள் 11-ஆம் தேதி திங்கட்கிழமை இங்குச் சிறப்புடன் வரவேற்கப்பெறுவார்.

இப்பொழுது அவர் தென்இலங்கையில் பல இடங்களில் கல்வியின் உட்கிடை, மனித இயல்பு, வாழ்க்கையின் இரகசியம், மேற்றிசைக் கீழ்த்திசை நாகரிகங்கள், இந்தியக்கலையின் கருத்துக்கள், சாந்தி நிகேதநத்தின் நோக்கங்கள், அதையொட்டி நிறுவப்பெற்றுள்ள கலாபவநத்தின் கலைத் தொழில்கள் என்றின்ன பொருள்களைப்பற்றி அழகிய சொற்பொழிவுகள் செய்து, தம்மால் வரையப்பட்ட இயற்கைச் சித்திரப் படங்களையும், தம் மாணவ மாணவிகைகளால் மரம், தோல் முதலானவற்றில் செய்யப்பட்ட சிற்பங்களையுங் காட்டி இந்தியக் கலைஞானத்தையும் நாகரிகத்தையும் நன்கு விளக்கி வாராநிற்கின்றார். அக்கலாவிநோதருடைய இனிய சொற்பொழிவுகளால் பழைய சிங்களக்கலைகள் செம்மையான இந்தியமுறையில் வளர்ச்சியடைய முயற்சி செய்யப்படுமென்பது தெரிகிறது.

இந்தியாவும் இலங்கையும் இந்நாளில் அரசியல்பற்றி வேறுபடுத்தப்பட்டிருப்பினும், இந்தியருக்கும் இலங்கையருக்கும் கலைஞானம் ஒன்றே; இலங்கையர் உண்மையில் இந்தியரேயாவர் என்று பலகாலும் வற்புறுத்தும் கவிவாணர் ரவீந்திரர் வட இலங்கையில் உள்ள யாழ்ப்பாணத்திற்கும் போதருவதால் தமிழ்மக்கள்பால் உள்ள வேறுபட்ட உணர்ச்சிகளெல்லாம் நீங்கி, பலவகையிலும் ஒற்றுமை யுணர்ச்சியும் தமிழ்க்கலைகளின் வளர்ச்சியில் பேர் ஊக்கமும் உண்டாகுமென்பது நம்பப்படுகின்றது.

பாட்டு, இசை, நாட்டியம், நாடகம், சித்திரம், சிற்பம் என்னும் இன்பக்கலைகளில் மிக வல்லுநராகிய ரவீந்திரர் வருகைக்குக் காரணமாகவிருக்குங் கலாநிலையமும், சங்கீத சமாஜமும், மற்றைய சரஸ்வதி விலாச சபையும், ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கமும் அப்பெரியாரால் புத்தூக்கமும் புதுமலர்ச்சியும் அளிக்கப்பெற்று இந்நாட்டினர்க்குக் கலைகள்பலவற்றின் இனிய நலங்களை நனிமிகத் தரவல்லன வாகுமென்று நம்புகின்றேம்.

*　　*　　*

சென்னை மாகாணத் தமிழர் மாநாடு

சென்ற ஆண்டு டிசம்பர்த் திங்களில் சென்னபட்டினத்தில் கூட்டப்பட்ட தமிழ் அன்பர் மகாநாட்டில் தமிழ் மொழியின் மாபிற்கு மாறாகச் சில தீர்மானங்கள் செய்யப்பட்டனவென்று கண்ட திருநெல்வேலித் தமிழ்மக்களும், பிற ஜில்லாக்களில் உள்ள தமிழ்மக்கள் சிலரும் தமிழ்மொழி நலமும் தமிழ்மக்கள் முன்னேற்றமுங் கருதித் திருநெல்வேலியில் இவ்வாண்டு மார்ச்சுத் திங்கள் கடைசியில் சென்னை மாகாணத் தமிழர் மாநாடு கூட்டி, "சென்னை மாகாணத் தமிழர் சங்கம்" என ஒன்று அமைத்து, அதன் வாயிலாகச் செய்யுளும் உரைநடையுமான நூல்களும், மொழிபெயர்ப்பு நூல்களும் தூய்மையான தனித்தமிழில் எழுதி வெளியிடல், செந்தமிச் சீரிய கலைகளாகிய இசைக்கலை, மருத்துவக்கலை முதலியவற்றை வளர்த்தல், மேலைநாட்டு அறிவியற்சொற்களுக்கு ஏற்ற சொற்களைப் பழந்தமிழ் நூல்களில் ஆய்ந்து திரட்டல், தமிழ்ப் பகுதிகளை அடிப்படையாகக் கொண்டு புதுச் சொற்களை ஆக்கித் தமிழ்ச் சொற்றொகுதியை வளம்படுத்தல் என்னும் இவ் அரும்பணிகளைச் செய்யுங் கடமை பூண்டார்கள்.

நம் அரிய செந்தமிழ் மொழியைப் பேணி வளர்ப்பான் இவ் அரிய பெரிய கடமைகளை மேற்கொண்டு முற்பட்ட அம்மாநாடு முதலில் குறித்த மார்சுத் திங்களில் கூடாமல், மேத்திங்களில் கூடுமென வெளியிடப்பட்டது. பின்னும் அது ஜூன் திங்கள் 10, 11 ஆம் தேதிகளில் நிகழுமென முடிவுசெய்யப்பட்டதென்றும், அதில் தமிழ்ப்புலவர் பெருமக்

களும் தமிழ்ப் பெரியார்களுமாகிய தக்கார் பலர்தம் வருகை எதிர்பார்க்கப் படுகின்றதென்றும் அறிகின்றேம்.

அம்மாநாட்டைக் கூட்ட முயலுநருடைய தமிழ்ப்பற்று எம்மனோ ரால் பெரிதும் வியக்கற்பாலதாம். அதன் நிகழ்ச்சி விவரங்களை விழை வோடு எதிர்பாராநிற்கும் யாம், அம்மாநாடு பெருஞ் சிறப்புற நிகழ்வதாக வெனவும், அதில் தோன்ற விருக்கும் "சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்" தக்கமுறையில் நடத்தப்பெற்று நம் இனிய தமிழ்மொழியை வளர்த்து, தமிழ்மக்களுக்கு நலஞ் செய்திடுவதாக வெனவும் எல்லாம் வல்ல கடவுள் அருளை வேண்டுகின்றோம்.

தமிழ்மொழிப் புலமைக்கும், தமிழ்மொழி யாராய்ச்சிக்கும் சம்ஸ்க்ருத மொழியின் புலமையும், ஆராய்ச்சியும் உறு துணையாக இன்றியமையாதன வாதலின், அம்மொழியினிடத்தும் அம்மொழியாளராகிய தமிழன்பரிடத் தும் அம்மாநாட்டினர்க்கு வெறுப்புண்டாகாமல், அம்மொழியும் அம்மொழி யாளருஞ் சிறப்பிக்கப்படுதலே பெரிதும் விரும்பற்பாலதாகும்.

——:O:——

மதிப்புரைகள்

கல்வளை அந்தாதி.—யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் இயற்றியது; இந்துக்கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியரும், 'இந்துசாதன'ப் பத்திரிகாசிரியருமாகிய திருவாளர் ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் எழுதிய புத்துரை கொண்டது. [யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் தமது சைவப்பிரகாச யந்திரசாலையில் புதிதாகப் பதிப்பிக்கப்பெற்று, சபையின் 44-வது பிரசுரமாக வெளிவந்துளது. விலை சதம் 50.]

அந்தாதி என்பது அந்த+ஆதி என்று பிரிக்கப்படும்: அந்தத்தை ஆதியாகக்கொண்டு தொடுக்கும் தொடையாகிய அந்தாதித் தொடையான் இயலும் தொடர்நிலைச் செய்யுள் எனப் பொருள்படும். அஃதாவது, முன்னின்ற செய்யுளின் அந்தத்தில் நிற்கும் எழுத்தாவது, அசையாவது, சீராவது, அடியாவது பின்வருஞ் செய்யுளின் ஆதியாக வரவும், இவ்வாறு நூறு செய்யுட்கள் தொடர்ந்து அமைந்து, நூலின் அந்தமும் அந்நூலின் ஆதியும் மண்டலித்து முடியவும் தொடுக்கப்படுந் தொடையையுடைய ஒருவகை நூல் என்பதாம். இது தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்களில் ஒன்று. இது மிகப் பழைய தமிழ் இலக்கண நூலாகிய 'தொல்காப்பிய'த்தின்படி 'விருந்து' என்னும் வனப்பு அமைந்த தொடர்நிலைச் செய்யுளின்பாற்படும். விருந்து என்பது பழங்கதை மேற்றன்றிப் புதுமையாகப் படைத்துச் செய்யப்படும் தொடர்நிலைச் செய்யுளிலக்கணமாகிய வனப்புவகையுள் ஒன்று. இந்நூல் பொருட்டொடர்பு நோக்காது சொற்றொடர்பு ஒன்றே கொண்டு அமைவதாகலின், சொற்றொடர் நிலைச் செய்யுள் எனவுஞ் சொல்லப்படும்.

கல்வளை யந்தாதி என்னும் இது யாழ்ப்பாணத்தின்கண் சண்டிருப்பாயில் பழைய தலமாகிய கல்வளையில் திருக்கோயில்கொண்டருளியுள்ள விநாயகப்பெருமான் மீது நூறு கட்டளைக்கலித்துறையால் இயற்றப்பட்டதாகும். இந்நூலாசிரியராகிய சின்னத்தம்பிப்புலவர்தம் வரலாறு இந்நூற் பதிப்பில் சேர்க்கப்பட்டுளது. இவர் வரலாறு பொன். குமாரவேற்பிள்ளை என்பவராலும் 'கலைமகள்' தொகுதி 5, பகுதி 2-ல் எழுதப்பட்டிருக்கின்றது. இந்நூற் பாட்டுக்கள் சொல்வளமும் பொருள்வளமுஞ் செறிந்து, அகமும் புறமுமாகிய இன்பந் தருந் துறைகள் அமைந்து, அன்பு நெறியிற் சிறந்து நிற்கின்றன. இவையிற்றில் ஆங்காங்கு விநாயகபுராணம், கந்தபுராணம், இராமாயணம், பாரதம், பாகவதம் என்பவைகளின் கதைக்குறிப்புக்களும் வந்துள்ளன. தேவாரப் பாக்களின் கருத்துக்களும் ஆளப்பட்டிருக்கின்றன.

இந்நூலாசிரியர் வேதாரணியேசுவரரைக் குறித்துப் பாடிய மறைசை யந்தாதியானது நாற்பது ஆண்டுகளுக்குமுன் சென்னபட்டணத்தில் தமிழ் மாணவர்க்குச் சிறந்த அந்தாதி நூலாகக் கருதப்பட்டுப் பெரும் வித்து வான்கள்பால் பாடங்கேட்கப்பட்டுவந்தது. சிறந்த அந்தாதிகள் சிலவற்றில் ஒன்ருகிய இக்கல்வளையந்தாதி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்து 1935-ம் ஆண்டுக்குரிய பிரவேசபண்டித பரீட்சைக்கு ஒரு பாடமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இந்நூலுக்குப் பழைய உரை ஒன்றிருப்பினும், அவ்வுரையைத் தழுவி, தமிழ்மொழிப் பயிற்சி யுடையார்க்கேயன்றி அது மிக வாயாதார்க்கும் நன்கு விளங்குமாறு திருவாளர் திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்களால் பதவுரை, கருத்துரை, விசேடவுரையும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வகைகளைக் கொண்ட இப்புத்துரையின்கண் 36-வது பாட்டிற்குப் பழைய உரையி னின்றும் வேறுபட்டதோர் இசைந்த உரை ஒன்று இனிது கூறப்பட் டிருக்கின்றது. இவ் உரையாசிரியர் 25 ஆண்டுகளாகப் போதகாசிரியர் தொழிலில் அமர்ந்திருக்கின்ருராதலின், இவ்வுரையில் மாணவ மாணவிகை களுக்கு இன்றியமையாதனவாகவுள்ள தெளிவான இலக்கணக் குறிப்புக் களையும் எழுதியிருக்கின்ருர். இவ்வுரை பிரவேசபண்டிதத் தேர்வுக்குப் படிப்பார்க்குப் பெருந்துணை செய்வதாகும்.

இத்துணைச் சிறந்த அந்தாதிநூலைப் புத்துரையுடன் வெளியிட்ட யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் தமிழ் உலகிற்கும் சைவ உலகிற் கும் நலஞ்செய்தவராவர். இந்நூல் வெளியீட்டைச் சைவருள் தமிழ்வல் லாரும் பிறரும் ஏற்றுப் படித்து விநாயகக்கடவுளின் திருவருள் பெற்று இன்புறுவாராக.

ஈழமண்டலத் திருத்தல தேவாரமும் திருப்புகழும்.—அடக்க விலைப்பதிப்பு - 1. திருமகள் அழுத்தகத்தில் அழுத்திடப்பெற்றது. [கிடைக்குமிடம்: தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம், யாழ்ப்பா ணம். விலை சதம் 5.]

இச்சிறு நூல், இலங்கை எனப்படும் இவ் ஈழநாட்டிலே உள்ள திருக் கோணமலை, திருக்கேதீச்சுரம் என்னுஞ் சிவத்தலங்களின்மீது திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரும் சுந்தரமூர்த்தி நாயனரும் பாடிய திருத்தேவா ரப்பதிகங்களையும்; கதிர்காமம் என்னுங் கந்தர்கோட்டத்தின்மீது அருண கிரிநாதனர் பாடிய திருப்புகழ்ப் பாட்டுக்களையுங் கொண்டுள்ளது. இவை களை ஓதுவார் பொருள் அறிந்துகொள்ளுமாறு காலஞ்சென்ற திருக்கோண மலை த. கனகசுந்தரம்பிள்ளை அவர்கள் எழுதிய உரைக்குறிப்புக்களும் இதன்கண் அடங்கியிருக்கின்றன. கந்தவனத் திருப்புகழும் இப்பதிப்பிற் சேர்த்துக்கொள்ளப்பெற் றிருக்கின்றது. இவைகளை இக்காலத்தினர் பலர்

அறியாதிருக்கின்றமையால், அவர்களும் இவைகளை ஓதி நலம்பெறவேண்டு மென்னும் நற்கருத்தோடு 'ஈழகேசரி'ப் பத்திராதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள் நல்ல தாளில் அழகுற அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்கள். தேசத்தொண்டுகளுக்கிடையில் இச்சமயத்தொண்டினையும் ஆற்றிய அன்னார்க்குச் சைவ உலகம் கடமைப்பட்டுள்ளதாகும்.

பயிற்சிமாலை, க-ம் மலர், பாஷையும் வியாசமும் (மாதிரி விடைகளுடன்). ஆக்கியோர்: பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள். திருமகள் அழுத்தகத்தில் அழுத்தப்பெற்றது. [கிடைக்குமிடம்: மானேஜர், நாவலர் அச்சுக்கூடம், யாழ்ப்பாணம். விலை சதம் 35.]

இதில் தமிழ்ப்பாடசாலை உயர்தர வகுப்புத் தேர்வுக்குரிய இலக்கிய இலக்கண பாடங்களில் இருபது பயிற்சி வினாக்களும், மாதிரி விடைகள் சிலவும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவைகளால் மாணாக்கர் வினாத்தாள்களுக்குச் செவ்விதின் விடை இறுக்கும் வல்லமை யுடையராவர். இஃதன்றியும், இப்புதியநூலால் மாணாக்கர் கட்டுரைவரைவதில் பயிற்சி பெறுவதோடு, சொற்களின்கண் ரகர றகர, ழகர ளகரங்களின் வேறுபாடுகளால் பொருள் வேறுபடுதலையும், உரைநடைக்கு இன்றியமையாத குறியீடுகளை அமைக்கும் முறைமையையும் நன்கு அறியலாவர். ஆதலின், மாணவர்களும் ஆசிரியர்களும் இதனை ஏற்று ஆக்கியோருக்கு ஊக்கமளித்து, இதுபோலும் பல நூல்களை எழுதிப் போதருமாறு செய்வார்களாக. இந்நூலாசிரியர் எந்தம் 'ஞாயிற்றிற்'றினுக்குஞ் சிறந்த கட்டுரைகள் எழுதிவருகின்றனர். இவர் தம்முடைய இவ்விளம்பருவத்திலேயே இன்ன தமிழ்த் தொண்டுகளை மேற்கொண்டு முன்வருதல் எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகின்றது.

புகழேந்திப்புலவர் வரலாறு, விலை அணா 8; பொய்யாமொழிப் புலவர் சரிதம், விலை அணா 6; ஸ்ரீ வில்லிபுத்தூரார் சரிதம், விலை அணா 10; [கிடைக்குமிடம்: 'கலைமகள் தமிழகம்', 139, தாமஸ் வீதி, கோயமுத்தூர்.]

இந்நூல்களை எழுதியவர் திரு. சி. கு. நாராயணசாமி முதலியார் ஆவர். இவர், இடைக்காலத்தில் விளங்கிய தமிழ்ப்பெரும்புலவர் பலர்தம் வரலாறுகளைப்பற்றி இக்காலத்தில் பலரால் எழுதப்பெற்று அச்சில் வழங்கும் நூல்களில் நல்லறிவாளரால் அருவருத் தொதுக்கப்படுமாறு பல காரணங்களால் புகுந்துகிடக்கும் பொய்க் கோள்கள், பொய்ச் செய்திகள், பொருந்தாப் புனைந்துரைகள், பொறாமைக் கூற்றுக்கள், உயர்வு தாழ்வுகள், வசைமொழிகள், முரண்பாடுகள், ஐயப்பாடுகள், அவைகளுக்கு

ஆதாரங்களாகக் காட்டப்பட்டுள்ள தனிநிலைப்பாக்கள் என்றின்னோரன்ன வைகளையெல்லாம் பலவகையிலும் நுணுகி நோக்கி ஆராய்ந்து களைந்து, உண்மை வரலாறுகளைக் காலவரையறைகளுடன் தக்க அகப்புறச் சான்று களால் நிறுவி, யாவர்க்கும் விளங்கத்தக்கவாறு எழுதி வெளிப்படுத்தும் ஆற்றல் சான்றவ ரென்பது தமிழுலகத்தவரால் நன்கு அறியப்பட்டிருக் கிறது.

மேற்குறிக்கப்பட்ட நூல்கள் மோனை எதுகை யென்னுந் தொடை நயங்கொண்ட சொல்லழகும், பொருளழகும் பொருந்த இனிய நடையில் இயன்றுள்ளன. ஓரோவிடங்களில் அச்சுப்பிழைகளும் பிற பிழைகளும் இருப்பினும், அவை படிக்குநரால் கருதற்பாலனவல்ல. அவைகள் இரண் டாம் பதிப்பில் திருத்தஞ்செய்யப்பெறலாகும். இந்நூல்களின்கணுள்ள ஆராய்ச்சித்திறங்களையும் நுணுக்கங்களையும் ஒரு சிறு மதிப்புரையில் எடுத் துக் காட்டற்கு இயலாதாயினும், ஒருசிலவேனுங் கூறக் கடமைப்பட் டுள்ளோம்.

'வில்லிபுத்தூரார் சரித'த்தில்; அவ்வரும்பெரும் புலவரின் பாரதத்தின் கதை யமைதிகளும், கருத்துச் சீர்மைகளும், செய்யுட்களின் நயமும், சந்த நலமும், வீரச் சுவையும், நடை யழகும் இனிமைபெற எடுத்துக் காட்டப்பட்டிருப்பது படிப்பவருக்கு இன்பந் தருவதாகும். இராமாய ணத் தமிழ் மொழிபெயர்ப்பிலும், பாரதத் தமிழ் மொழிபெயர்ப்பிலும் உள்ள ஒப்புமை வேற்றுமைகள் தெளிவுற எடுத்துக் காட்டப்பட்டிருக் கின்றன. மொழிபெயர்ப் பாசிரியர்களாகிய கம்பரும் வில்லிபுத்தூராரும் பொதுவாக உயர்வு தாழ்வில்லாதவர் என்பது இந்நூலாசிரியர்தம் நற்கருத் தாகும். வில்லிபாரதமும் வடசொல்லாட்சியும் என்ற பகுதியில், வில்லி யார், வடசொற்களைத் திரியாத தனிமொழிகளாகவும், தொடர்மொழிக ளாகவும், திரிந்தனவாகவும், மொழிபெயர்க்கப்பட்டனவாகவும் பெருஞ்சது ரப் பாட்டுடன் ஆண்டிருத்தலும்; மேலும், தத்திதாந்தச்சொற்கள், கிரு தந்தச்சொற்கள், அவ்வியயச்சொற்கள், சமாசச்சொற்கள் என்ற இவைக ளைப் பொருத்தியிருத்தலும் காட்டப்பட்டிருக்கின்றமை தமிழ்மாணவர்க்குப் பெரிதும் பயன்படும். 'புகழேந்திப்புலவர் வரலா'ற்றிலும் இவ்வாறே இவ் வாசிரியரால் 'நளவெண்பா'வின் சிறப்பு மாணவர்பொருட்டு நுட்பமாக ஆராய்ச்சிசெய்து காட்டப்பட்டுளது. வில்லிபுத்தூராரும் அருணகிரிநாத ரும் கி. பி. 15-ஆம் நூற்றாண்டில் ஆந்திர அரசன் பிரபுடதேவராயன் தலைமையில் கூடிய அவையில் கல்விப்போர் நிகழ்த்திய செய்தி ஓரமின்றி மிக இனிமையாகக் கூறப்பட்டிருக்கின்றது. இங்ஙனமே இவரால் புக ழேந்தி - ஒட்டக்கூத்தர் அளவில், இயற்கைக்கு மாறாய், அறிவின் மிக்கார் நகைப்பிற்கிடமாய் வழங்கிவாராநிற்குங் கட்டுக்கதைக் கஞ்சல்களெல்லாம் நீக் கப்பெற்று, பண்டைக் கபில - பரணரைப்போலவே கல்விபற்றித் தம்மில் வாதுசெய்த அவ்விரு பெரும் புலவர்தம் சிறப்புக்கள் ஏற்றத்தாழ்வின்றிப்

புலப்படுத்தப்பட்டிருக்கின்றன. 'தஞ்சைவாணன்கோவை' பாடிய பொய்யா மொழிப்புலவர் என்ற பெரியார்க்கும் சீநக்கன் என்ற சீமானுக்கும் இருந்த உயர்ந்த நட்பின் உரிமையும் உணர்ச்சியும் எவரது உள்ளமுங் கரைந்துருகக் கண்ணீர்மல்குமாறு அத்துணைத் திறமையாக எழுதப்பட்டுள்ளன. அப்பகுதி மாணவரை உண்மைநட்பின் இயல்பை நன்கு அறிந்திடச்செய்வதாகும். இவைகளால் இந்நூல்களின் ஆசிரியர் தமிழ்நூல்கள் பலவற்றிலும் பிறவற்றிலும் நனிபயின்று நடுவுநின்று உண்மை காணும் நற்புலவர் என்பது அறியப்படும்.

சிறந்த புதுமுறையில் எழுதப்பெற்றுள்ள முப்பெரும்புலவர் மெய் வரலாறுகளாகிய இந்நூல்களைக் கோயமுத்தூர் ராவ் சாஹிப் திரு. சி. எம். இராமச்சந்திரஞ்செட்டியார், பி. ஏ., பி. எல்., வழக்கறிஞர் திரு. சி. கே. சுப்பிரமணியமுதலியார், பி. ஏ., திரு. எல். ஸ்ரீநிவாஸஐயர், சென்னை திரு. வ. சு. செங்கல்வராயபிள்ளை, எம். ஏ. என்றித்தொடக்கத்துத் தமிழ் நூல் ஆராய்ச்சியாளர் வியந்து பாராட்டியிருக்கின்றனர். இவை கல்விச் சாலைப் பாடநூற் கழகத்தினது உடன்பாட்டையும் பெற்றுள்ளன. எனவே, இந்நல்ல நூல்கள் இலங்கையில் யாழ்ப்பாணத்திலும், பிற ஊர்களிலுமுள்ள கல்விச்சாலைகளில் மாணவர்களுக்கும் மாணவிகைகளுக்கும் பாடப்புத்தகங்களாக அமைக்கப்படத் தக்கவைகளாகும். 'வில்லிபுத்தூரர்சரிதம்' என்பது ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்துப் பிரவேச பண்டித பரீட்சைக்குரிய பாடவகைகளுள் சேர்க்கப்படலாம். இந்நூல்களால் மாணவ மாணவிகைகள் இடைக்காலத்துத் தமிழ்ப்பாவலர் பெருமக்கள்தம் உண்மை வரலாறுகளை அறிவதோடு, பகுத்தறிவும், ஆராய்ச்சி ஆற்றலும் வளரப்பெறுவர். ஆதலின், கல்விச்சாலைத் தலைவர்களும், ஆசிரியர்களும் இந்நூல்களைத் தெரிந்தெடுத்து, நூலாசிரியர்க்கு ஊக்கம் அளிப்பார்களாக.

பண்டைத் தமிழ்மக்கள் வரலாறு.—இந்நூல் எழுதியவர் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து ஸ்ரீ சுவாமி பரிபூரணாநந்தர் ஆவர். தூத்துக்குடிச் சைவப்பிரகாச அச்சியந்திரசாலையில் அச்சிடப்பட்டது.

இச்சிறுநூலில் தமிழ்மக்கள்தம் தோற்றம், நாகரிகம் முதலாயினவும், தமிழ்மொழியின் இயற்கையான தோற்றமும், ஒலியும், இனிமையும், வரிவடிவும் என்றின்னவையும் சரித்திர ஆராய்ச்சியாளர் பலர்தம் கருத்துக்களோடு சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன. ஆரியரிடமிருந்தே தமிழர் நாகரிகம் கற்றனர் என்ற கருத்துப் பிழைபட்டதெனக் காட்டவே இஃது எழுதப்பட்டதாகப் புலப்படுகின்றது. இது திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி தேவஸ்தான மேற்பார்வையாளர் திரு. சண்முகசுந்தரம் அவர்களது முகவுரையைக் கொண்டுளது. இது தமிழ்ப் பொதுமக்கள் யாவரும் மகிழ்ந்து படிக்கற்பாலதாகும். சுவாமிகள் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்து வாயிலாக இவ்வகையிலும் தொண்டு செய்ததை நாம் மிகவும் மகிழ்ந்து பாராட்டுகின்றோம்.

202

கலைமகள்.—இது தென் இந்தியத் தமிழ் நாட்டில் ஓர் உயரிய மாதப் பத்திரிகையாகும். இதன் நிர்வாகப் பத்திராசிரியர்: திரு. டி. எஸ். இராமச்சந்திர ஐயர், பி. ஏ., உதவிப்பத்திராசிரியர்: வித்துவான் கி. வா. ஜகந்நாதையர்; இவ்விருவருமேயல்லாமல், இதற்குக் கௌரவப் பத்திராசிரியர்களாகத் தமிழ்வல்ல பெரியார் பலர் குழுமி இருக்கின்றனர். [கிடைக்குமிடம்: கலைமகள் ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை. வருடசந்தா: இந்தியா, இலங்கை ரூ. 4-0-0; தனிச்சஞ்சிகை: அணா 6. (35 சதம்). பிற விவரங்களைப் பத்திரிகையிற் காணலாம்.]

இப்பத்திரிகை மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வாராநிற்கின்றது. இதன் ஐந்தாந் தொகுதியின் ஐந்து பகுதிகள் 'ஞாயிற்'றின் மாற்றாக அன்போடு இங்கு அனுப்பப் பெற்று மகிழ்வெய்தினோம். இதன்கண் ஆசிரியர், மாணவர், ஆராய்ச்சியாளர் என்றின்னோர்க்குப் பெரிதும் பயன்படத்தக்க பழமையான தமிழ்க்கலைப் பொருள்கள், இஞ்ஞான்றைப் புதிய நுண்கலை ஆராய்ச்சிகள், இன்னும் பலதுறைப்பட்ட கலைநூல் நுட்பங்கள் என்பனவற்றைப் பற்றிய விழுமிய கட்டுரைகள் தமிழ்ப் பெரும் புலவர்களாலும், சம்ஸ்கிருத பண்டிதர்களாலும், ஆங்கில விற்பன்னர்களாலும் வரையப்பெற்று விளங்குகின்றன. அன்றியும், பொதுமக்களுள் ஆடவர், பெண்டிர், சிறுவர் ஆகிய யாவர்க்கும் பலவகையில் நல் அறிவூட்டும் பலபல பொருள்களும், உயர் கருத்தும் இன்பச் சுவையும் பொருந்தி, வியப்பையும் நகைப்பையும் விளைக்கும் புதிய கற்பனைக் கதைகளும், நாடகங்களும், பாட்டுக்களும் இனிய தமிழில் எளிய நடையில் அமைந்து, அழகிய சித்திரப்படங்களுடன் விளக்கமுறுகின்றன. இவ்வைந்து பகுதிகளிலும் மகாவைத்தியநாதையர் அவர்களைப்பற்றி மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களால் சங்கீதாவிகர்கள் வியந்து இன்புறுமாறு எழுதப்பட்ட அரிய பெரிய கட்டுரை ஒன்று தொடர்ச்சியாக வந்துளது. சுருங்கச் சொல்லுமிடத்து, இதனைக் கலைமகள் நடஞ் செய்யும் பத்திரிகை யென்றுஞ் சொல்லலாம். இஃது உயர்ந்த பளபளப்புள்ள காகிதத்தில் கவினுற அச்சிடப்பட்டு வெளிவருகின்றது.

வித்தகம்.—இஃது ஒரு வாரப் பத்திரிகை. இதன் ஆசிரியர்: யாழ்ப்பாணத்தைச் சார்ந்த தென்கோவைத் தமிழ்ப்பண்டிதர் திருவாளர் ச. கந்தையாபிள்ளை அவர்கள். [கிடைக்குமிடம்: 'நந்தி வெளியீட்டு மன்றம்', புதுச்சேரி, ப்ரென்ச் இந்தியா; சந்தா: உள்நாட்டிற்கு ரூ. 3; வெளிநாட்டிற்கு ரூ. 4.]

இப்பத்திரிகை வியாழக்கிழமைதோறும் வெளிவருவதாகும். தொகுதி 1 - இல், 25 பகுதிகள் இதுகாறும் வெளிவந்துள்ளன. இவ் இருபத்தைந்து பகுதிகளையும் தத்துவஞானப்பொருண்மேல் உள்ள ஆர்வத்தால் நாம் ஊன்றிப் பார்த்தோம்.

மக்களுள் சமயஞானமுடையார் சிலர், கடவுளோடு கலத்தலாகிய முத்திப்பேற்றில் அவாவுள்ளாராய், அதற்குரியனவாய முயற்சிகளுஞ் செய்கின்றனர். அஃது ஒருபுறம் இருப்ப, இவ்வுலகில் தோன்றிய பல்வேறு சமயத்தவர்களாலும் முத்திநிலையின் இலக்கணம் பலவாறாகக் கூறப்பட்டிருக்கின்றது. அதனால், இந்தியாவில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் — துவிதம், விசிட்டாத்துவிதம், சிவாத்துவிதம், கேவலாத்துவிதம், சுத்தாத்துவிதம் என்றின்ன சமயவாதிகள் முத்தியிலக்கணத்தின் பேதங்களைப்பற்றியும், அவற்றுள் உண்மையானது எதுவென்பதைப்பற்றியும் தம்முள் ஒருவரோடொருவர் பெரிதும் மாறுற்றுத் தத்தஞ் சமய சாஸ்திர வியாக்கியானங்களைக்கொண்டு விஸ்தாரமாயுங் கடுமையாயும் வழக்குகளும் எதிர்வழக்குகளுமிட்டு, தத்தஞ் சமயத்தில் பேசப்படும் முத்தியிலக்கணமே உண்மையானதென்றும், பிறவெல்லாங் குற்றமுடையனவென்றுந் துணிந்து நுவலுவாராயினர்.

அங்ஙனமாயினும், இதுபோது வெளிவரும் ‘வித்தகம்’ எனும் பெயர் பூண்ட இப்பத்திரிகையின்கண் அரும் பெருஞ் சாதனங்களால் உலகத்தார் காணுமாறு தூல உடலோடு மறைந்து சிவம் எனுஞ் செம்பொருளாதலே உண்மை முத்தி யென்பதும், அதுவே மீண்டு வாராநெறி யென்பதும், அதுவே பழைய சைவசமயக் கொள்கை யென்பதும், அவ்வாறன்றி, தூல உடல்—கட்டைமேல் வைத்துச் சுட்டுவிடப்படுமாறும், அல்லது கள்ளக் குழியினுள் புதைத்துவிடப்படுமாறும்—பிணமாக, உயிர் பிரித லென்னும் மரணம் முத்திநிலையன் றென்பதும், அது பிறவிக்கேது வென்பதுமாகிய இவ்வற்புதப்பொருள்கள் சிவஞானிகளாகிய மாணிக்கவாசகசுவாமிகளும், திருமூலயோகிகளும் திருவாய்மலர்ந்தருளிய திருவாசக திருமந்திர நூல்களினின்றும், ஔவை குறள் முதலான ஏனைய நூல்களினின்றும் பிரமாணங்கள் எடுத்துக் காட்டிச் சாலவும் உறுதிப்படுத்தப்படுகின்றன. மேலும், ‘மெய்’ என்னும் பெயருடைய ஆக்கையானது, பிணமாகி அழிந்து பொய்யாகிப் போகாது, உயிரொடு ஒன்றிச் சிவத்தையே சார்ந்து, ‘மெய்’ என்னுந் தன் பெயர்க்காரணத்தை உண்மையால் புலப்படுத்துமாறு செய்வதே சைவசமயத்திற்கு மாண்பாகுமென்று சொல்லும் நெறிப்பாடு இவ்‘வித்தக’ப் பத்திரிகையில் பரக்கக் காணப்படுகின்றது. இவ்வாறு விதந்தெடுத்துரைக்கப்படும் முத்திநெறியானது, பிற்காலத்தில் குமாரதேவராலும், தாயுமானசுவாமிகளாலும், வடலூர் இராமலிங்கசுவாமிகளாலும் வலியுறுத்திக் காட்டப்பட்டவாற்றானும் நன்கு அறியப்படும்.

இதற்கேற்பவே, முன்னைப் பெரியார் சிலர் தம் தூல உடலம் பிணமாகி விழுதலிலதாய் அதனோடு மறைந்து சிவமாகிச் சித்திபெற்றனரென்பது புராணநூல்கள் சிலவற்றில் குறிப்பிடப்பெற்றுளது. சீவர்கள் சடபேதம், கர்மபேதம் உடையனவென்று இப்பத்திரிகையின்கண்ணே ஆங்காங்குச் செவ்விதின் எடுத்துக் காட்டப்படுதலால், தூயஉடலும் வினை

முடிவும் அதிதீவிர பக்குவமும் அடைந்த உயிர்கள் சில முன்னரே அவ்வித சதேகமுத்தி பெற்றிருக்கலாம். இனியும் பெருந்தவப்பேற்றால் அப்பெற்றியனவாகும் சில உயிர்கள் அம்முத்தியைப் பெறலாம். தேகம் சூக்குமத்தன்மை யடைந்து மறைதலாகுமென்பது இக்காலத்து விஞ்ஞான நூற் பரிசோதனைகளின் ஆதாரத்தினாலும் இப்பத்திரிகையில் நன்கனம் விளக்கப்படுதல் இன்றியமையாததாகும்.

அவ்வியல்பினதாம் முத்திப்பேற்றிற்குரிய உயிர்ச்சாதனங்களும் உடற்சாதனங்களுமாகிய அதிநுட்ப ரகசியப்பொருள்கள் சிலவும் இந்நாளில் அனைவரும் அறியும் வண்ணம் இப்பத்திரிகையின் பகுதிகளில் ஒரோவிடங்களில் 'தேவாரம்', 'திருவாய்மொழி', 'சூதசம்ஹிதை', 'சித்தாந்த சிகாமணி', 'ஞானவாசிட்டம்', 'சித்தர் பாடல்கள்' என்றின்ன நூல்களின் மேற்கோள்களால் விளக்கப்படுகின்றன. சீவன்முத்தி, விதேகமுத்தி, சதேகமுத்தி என்பனவற்றின் பொருள்களுஞ் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில், இடையிடையே, சில கட்டுரைகளில் தெளித்துக் காட்டப்படும் உண்மைத்துறவு, ஐம்பொறி அடக்கு முறை, உண்மைச் சத்துவகுணம், உண்மை மௌனம், முதலானவைகள் உலகினர் மயக்கங்களை அறவே களைந்து, பகுத்தறிவை மிகுதிப்படுத்தி, அவரை உயரிய இன்பவாழ்வில் செலுத்தும் பான்மையனவாகும். இவ்விஷயங்களெல்லாம் சிவசமாதிநிலை தலைக்கூடிப் பரமுத்தியடையவல்ல பக்குவர்களால் சூக்கும வகையான் ஆராய்ந்தறிதற்பாலன வெனக் கூறலாம். பொதுவாகப் பிறசமயிகள் பலரும், சிறப்பாகச் சுத்தாத்துவித சித்தாந்த சைவருள் எவரேனும் ஒருபாலாரும், வேதாந்தியருள் எவரேனும் ஒருபாலாரும் உடலும் உயிரும் ஒன்றி மறைந்து சிவாங்கமாதலே உண்மை முத்தியாகுமென்னும் இக்கொள்கை தமக்குப் பொருந்தாமல், இதனொடு மிக மலைந்து, இன்ன முத்திப்பேறு இயலுவதன்றென வாது செய்யலாம். ஆயினும், சமயக்கொள்கைகளின் மாறுபாடுகளில் அறிவுடையார் ஒருவரை யொருவர் வெறுத்து வசைச்சொல் வழங்கி இன்னல் படாமல் அன்பும் பொறையும் பாராட்டி, அம்மாறுபாடுகளை நுணித்து ஆராய்ந்து மேன்மேலும் உண்மை கண்டு இனிது வாழ்வதே சால்புடைத்தாகும். இதுநிற்க.

'வித்தகம்' என்னும் இச்சொல்லிற்கு, அறிவாற்றல், சதுரப்பாடு, திருத்தம் முதலான பொருள்கள் நிகண்டு நூல்களிலும், இலக்கிய நூல்களின் உரைகளிலுங் காணப்பட்டிருப்ப, இப்பத்திரிகாசிரியரால் இதற்கு 'எல்லா உடலுயிர்க்கும் வித்தாயும், அவ்வுடலுயிர் ஆக்கமுறுதற்கு இடமாயும் இருப்பது' என்று பொருள் செய்யப்பட்டிருக்கின்றது. இவ்வாறே 'கந்தழி', 'கற்பூரம்', 'ஞானி', 'துப்புரவு', 'உபநிசத்து' என்றற்றொடக்கத்துப் பல சொற்களுக்குத் தத்துவஞானப் பொருள்கள் செய்யப்பட்டிருத்தல் வியக்கற்பாலதுஞ் சிந்திக்கற்பாலதுமா மென்பது சொல்லாமே அமையும். இவ்வாசிரியர் நம் செந்தமிழ் மொழியில் வித்தகம் நிரம்பிய வித்துவப்

பெரியாராதலின், இவர்தம் அரிய பெரிய தத்துவ நுண்பொருட் கட்டுரைகளில் ஆங்காங்கு வியத்தகு சொற்களும் சொற்றொடர்களும் மிளிர்ந்து காணப்படுகின்றன.

'ஞானம் பலபல திறத்தினதாகும். அதனால் ஞானியரும் பலபல திறத்தினராவர். எனவே, இப்பத்திரிகை ஒருசார் அநுபவ ஞானிகளுக்கு மிகவும் பயன்படற்பாலதாகும். ஆயினும், முத்திப் பேற்றில் இத்துணைப் பெருநோக்கமுடைய இந்த ஞானப்பத்திரிகையைச் சுத்தாத்துவித சித்தாந்த சைவரும், சிவாத்துவித சைவரும், ஐக்கியவாத சைவரும், வைணவரும், வேதாந்தியரும், ஏனைய பல்வேறு சமயத்தவரும் பெற்றுப் படித்து ஆனந்தக் களிப்புறுவாராக,

---

யாழ்ப்பாணம் ஹே. கார்த்திகேய ஐயர் பாவ வருஷ திருக்கணித பஞ்சாங்கம்.—இது சென்னையில் உள்ள ஜ்யோதிர் பூஷணம் ப்ரஹ்மஸ்ரீ டி. எஸ். விசுவநாத சிரௌதிகள், பி. ஏ., என்பார் பார்வையில் ப்ரஹ்மஸ்ரீ சி. சுப்பிரமணிய ஐயர் அவர்களால் சாஸ்த்ரீயமாகவும் சுத்தமாகவுங் கணிக்கப்பட்டதாகும். [கிடைக்குமிடம்: ப்ரஹ்மஸ்ரீ சி. சுப்பிரமணியஐயர், 'தில்லைவாஸம்', மட்டுவில், சாவகச்சேரி, இலங்கை. வேறு பல இடங்களிலும் பெறப்பாலது. விலை: சதம் 25 (அணா 4). பிற விவரங்களைப் பஞ்சாங்கத்திற் காணலாம்.]

இதன்கண் வேறு பஞ்சாங்கங்களுக்கும் இதற்குமுள்ள வேறுபாடுகளும், இதன் ஆராய்ச்சி நுட்பங்களும், பாவ வருஷம் பிறந்த நேரமும் விளக்கப்பட்டிருக்கின்றன. அன்றியும், ஜ்யோதிஷர்களுக்கும், சைவ - வைஷ்ணவ - ஸ்மார்த்த சமயத்தவர்களுக்கும் வேண்டுவனவும், வேறு பல பொதுவான விஷயங்களும் அடங்கியுள்ளன. இது உண்மையான வானசாஸ்திர கணித முறையை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றமையால், இதுவே மற்றைய பஞ்சாங்கங்கள் எல்லாவற்றினுஞ் சிறந்ததென்பது கணிதப் பயிற்சியில் மிக்கார்தங் கருத்தாகும்.

நூல்கள் வரவு

1 இரகுவம்மிசப் புத்துரை (இரண்டு பாகங்கள்) —வித்துவான் சி. கணேசையர் அவர்கள்

2 மண்ணியல் சிறுதேர் (மிருச்சகடிகம்) —பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள்

3 கன்றுங் கனியுதவும் (மூன்றாம் பதிப்பு) —பண்டிதர் எல். உலகநாதபிள்ளை அவர்கள்

4 சிவஞானபோத வினாவிடை —சுவாமி விருதை. சிவஞானயோகிகள்

5 தகராலய ரகசியம் முதலான 13 நூல்கள் —ஸ்ரீமத் பாம்பன் குமரகுருதாச சுவாமிகள்

6 தரிசனத் திரயம் —ஸ்ரீ முத்துக்கிருஷ்ணபரமஹம்ஸ சுவாமிகள்

7 கொடுமளப்பதி குமரக்கடவுள் ஞானவுலா —ஸ்ரீ ஸ்வாமி பாலானந்தஸரஸ்வதி வெளியிட்டது

8 முருகன் புகழ்ப் பாமாலை —காந்தம் டி. ஆர். விசுவநாதசாஸ்திரியார்

9 அன்னபூர்ணாலயம் —திரு. டி. இராமலிங்கம்பிள்ளை அவர்கள், எம். ஏ.

10 திருவிதாங்கோட்டு அன்னைமகாராணியார் — ,, ,, ,, ,, ,,

11 மாவை மும்மணிமாலை —கரணவாய் - பண்டித திரு. செவ்வந்திநாததேசிகர் அவர்கள்

12 நாடி ஞான தரங்கிணி —திரு. ஆ. சிதம்பரநாதவைத்தியர் அவர்கள், தெல்லிப்பழை மேற்கு

13 நாடி தர்ப்பணம் — ,, ,, ,, ,, ,,

14 தாயும் பிள்ளையும் —திரு. ச. இராசரத்தினம் அவர்கள் [இலங்கைஅரசினர் வைத்தியப்பகுதி]

15 பாலர் சங்கீத விளக்கம் —திரு. கா. வல்லிபுரம் அவர்கள்

16 *Essays and Speeches* (கட்டுரைகளும் சொற்பொழிவுகளும்) —ஸ்ரீமான் ஜி. வி. பட்டே, எம். ஏ., புனா, பம்பாய்.

இதழ்கள் வரவு

கொங்குமலர், மலர் 1, இதழ் 1 —கோவைத் தமிழ்ச்சங்க வெளியீடு, கோயமுத்தூர்

வர்த்தகஊழியன், மலர் 2, இதழ் 22 —திரிசிராப்பள்ளி

அரசகேசரி, மலர் 1, இதழ் 1-8 —யாழ்ப்பாணம்

வாலிபர் தூதன், மாலை 1, மணி 1 —வயாவிளான் வாலிபர்சங்க வெளியீடு, யாழ்ப்பாணம்.

கலா நிலையம்

யாழ்ப்பாணம்

மூன்றும் ஆண்டின் அறிக்கை

தமிழ்க்கலை முதலானவற்றின் ஆக்கத்தை நோக்கமாகக் கொண்டுள்ள இந்நிலையம் சென்ற மூன்று ஆண்டுகளாகக் கல்வியுஞ் செல்வமுமுள்ள நன்மக்கள் உதவியினால், இந்நாட்டு மக்களின் அறிவு வளர்ச்சிக்குரிய பலதுறைகளிலும் பணியாற்றி வாராநிற்கின்றது. இப்போது நிலைய உறுப்பினராக உள்ளோர் தொகை 117. இவ்வாண்டிற் சேர்ந்த புதிய உறுப்பினர் தொகை 27.

இவ்வாண்டில் நிலையஞ் செய்துள்ள பணிகள் பின்வருவன:

விரிவுரைகள்

இவ்வாண்டில் 12 தமிழ் விரிவுரைகளும் 6 ஆங்கில விரிவுரைகளுங் கீழ்க் குறிப்பிட்டவாறு நிகழ்த்தப்பட்டன.

தமிழ் விரிவுரைகள்

1. திருவாசகம்—
   பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார்
2. நக்கீரரும் தமிழறிவாளரும்—
   பாகவதர் எல். எஸ். சாமுவேல், B. A.
3. குறிஞ்சிப்பாட்டு—
   திரு. சோ. இளமுருகனார்
4. அருணகிரிநாதர் அநுபூதி—
   திரு. சு. நடேசபிள்ளை, B. A., B. L.
5. செய்யுள் நலம்—
   பண்டிதர் வ. சு. இராசஐயனார்
6. இந்திய கலைஞான வளர்ச்சிக்கு இஸ்லாஞ் செய்த உதவி—
   திரு. B. தாவுத்ஷா ஸாஹிப் பஹதூர், B. A.
7. தாயுமானர் அநுபூதி—
   திரு. K. S. முருகேசு, B. A., L. T.

8. கம்பராமாயணம்: பரதன் பக்தி—
திரு. வை. இராமசாமிசர்மா
9. சேக்கிழாரும் பெரியபுராணமும்—
திரு. ஐ. பொன்னையாபிள்ளை
10. உள்ளொளி—
உயர்திரு சுவாமி விபுலாநந்தர்
11. வித்வசிரோமணி பொன்னம்பலபிள்ளை—
பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை
12. நாவலரும் தமிழும்—
பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை

ஆங்கில விரிவுரைகள்

1. The Aim of Religion—
The Hon. Mr. M. T. Akbar, K. C.
2. Agricultural Developments in the West and a Lesson for Ceylon—
A. V. Richards, Esqr., B. Sc.
3. The Taj Mahal and Its Antecedents—
K. P. S. Menon, Esqr.. M. A., I. C. S
4. St. Francis of Assissi—
Rev. John Bicknell, B. A., B. D.
5. Credit—
J. A. Maybin, Esqr., C. C. S.
6. Philosophy of Fine Arts—
Prof. G. C. Bhate, M. A.

வகுப்புக்கள்

பாலபண்டித வகுப்பு

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கத்தினரால் நடத்தப்படும் பாலபண்டித பரீக்ஷைக்காகக் கற்கும் மாணவர்பொருட்டு வித்துவான் திரு. ந. சுப்பையாபிள்ளை அவர்களால் இவ்வகுப்பு செவ்விதின் நடத்தப்பட்டுவருகின்றது. இவ்வகுப்பில் 6 மாணவர் கற்பிக்கப்பட்டு வருகின்றனர். சென்ற ஆண்டுப் பரீட்சையில் ஒரு மாணவர் தேர்ச்சிபெற்றனர்.

சைவசித்தாந்த வகுப்பு

இவ்வகுப்பில், 'சிவஞானசித்தியார்' என்பது திரு. K. S. முருகேசுப்போதகர், B. A. அவர்களின் தலைமையில் கற்கப்பட்டுவந்தது. இவ்வகுப்பு ஆறுமுறை கூடிற்று. போதகரவர்கள் மன்னூருக்கு மாற்றப்பட்டதன் காரணமாக இவ்வகுப்புத் தொடர்ந்து நடைபெறாது விடப்பட்டது.

திருக்குறள் வகுப்பு

தமிழிலுள்ள சிறந்த நீதிநூலாகிய திருக்குறளை முறையே நன்கு கற்கும்பொருட்டு உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கள் தலைமையில் ஓர் வகுப்பு சென்ற மாசித்திங்கள் தொடக்கம் நடைபெறுகின்றது. இவ்வகுப்பு மும்முறை கூடிற்று.

நூல்நிலையம்

நூல்நிலையத்தில் 1133 நூல்கள் உள்ளன. இவற்றுள் தமிழ் நூல்கள் 469. ஆங்கில நூல்கள் 664.

ஏட்டுப்பிரதிகள் 42.

அச்சில் இல்லாத தமிழ் நூல்கள் 90; ஆங்கில நூல்கள் 139.

இவ்வாண்டிற் புதிதாகச் சேர்க்கப்பட்ட தமிழ் நூல்கள் 48; ஆங்கில நூல்கள் 50.

எமது நிலையத்திலுள்ள நூல்களைப் போதிய பொருளில்லாதவர்களும் எளிதிற் பெற்று நன்மையடையுந் நோக்கத்தோடு இவ்வாண்டில் நூல்நிலைய ஒழுங்குகளிற் சில மாறுதல்கள் நிர்வாகசபையாரால் செய்யப்பட்டன. மாதந்தோறுங் கட்டணங் கொடுக்கும் உறுப்பினராதற்கு இயலாதவர்களாயுள்ளோர், நிலையத்திற்கு வெளியில் நூல்களைக் கொண்டுசெல்லுதல் கூடாதென இருந்த ஒழுங்கு மாற்றப்பட்டிருக்கின்றது. பொருள் வருவாய் இல்லாதவர்களாய்த் தம் கல்வியறிவின் வளர்ச்சியிற் சிரத்தைகொண்டுள்ளோர் 'வாசகர் சிட்'டை ரூபாய் 5 மாத்திரம் பிணைப்பணமாகக் கட்டிப் பெற்றுக்கொண்டால், நூல்நிலையத்திலுள்ள நூல்களை உறுப்பினராகவுள்ளோர் உபயோகிக்கும்விதமே தாமும் உபயோகித்துக்கொள்ளலாம். இவ் 'வாசகர் சிட்'டைப் பெற விரும்புவோர் அதற்கென அச்சிடப்பெற்றிருக்கும் பத்திரத்திற் கையொப்பமிட்டு விண்ணப்

210

பஞ் செய்தல்வேண்டும். இவ்வொழுங்கு பொருள்வருவாய் இல்லாத மக்களின் நலத்தைக்குறித்துச் செய்யப்பட்டதனால், இதனை இம்மகாசபை அங்கீகரிக்குமென நம்புகின்றோம்.

வாசகசாலை

எமது வாசகசாலைக்குக் கீழ்க் குறிக்கப்பட்டுள்ள பத்திரிகைகள் வருகின்றன.

தமிழ்த் திங்கள் வெளியீடுகள்

1. செந்தமிழ்ச்செல்வி
2. தமிழ்ப்பொழில்
3. கலைமகள்
4. சித்தாந்தம்
5. இராமகிருஷ்ணவிஜயம்
6. நவசக்தி
7. பாரதி
8. ஆனந்தவிகடன்

தமிழ்க் கிழமை வெளியீடுகள்

1. இந்து சாதனம் (வாரம் இருமுறை)
2. ஈழகேசரி
3. தாருல் இஸ்லாம்
4. வித்தகம்

ஆங்கிலத் திங்கள் வெளியீடுகள்

1. Modern Review
2. Prabuddha Bharatha
3. Royal Magazine
4. The Hindu Mission
5. The Health

ஆங்கில இருதிங்கள் வெளியீடு

1. Triveni

ஆங்கில வார வெளியீடுகள்

1. Harijan
2. The Hindu Organ (Bi-Weekly)

ஆங்கிலத் தினசரி வெளியீடுகள்

1. The Ceylon Daily News
2. The Ceylon Observer

உருவப்படத் திறப்புவிழா

இவ்வாண்டில் ஸேர் பொன்னம்பலம் இராமநாதர் அவர்களினதும், சுன்னாகம் திரு. குமாரசுவாமிப்புலவர் அவர்களினதும் உருவப்படங்கள் நிலைய மண்டபத்தில் திறந்து வைக்கப்பெற்றன.

ஸேர் பொன். இராமநாதர் திருநாள்

இலங்கை மக்களின் தலைவர் திலகமாக விளங்கிய சேர் பொன். இராமநாதர் அவர்கள் சிவபதம் அடைந்த தினம் எம்மால் நவம்பர் மாதம் 26-ம் தேதி மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அவர்கள் மருகர் திரு சு. நடேசபிள்ளை அவர்கள் உபகரித்த திருவுருவப்படம், திரு வை. துரைச்சுவாமி அவர்களால் நிலைய மண்டபத்தில் திறந்து வைக்கப்பட்டபின்னர், வைத்தியேஸ்வரவித்தியாலய மண்டபத்தில் நிலையத்தின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் திரு வை. துரைசுவாமி அவர்களின் தலைமையிலேயே நடைபெற்றது. அத்தருணம் உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்களும், திரு. நெவின்ஸ் செல்வத்துரைப்பிள்ளை அவர்களும் ஸேர் பொன். இராமநாதனார் அவர்கள் எமது நாட்டிற்கும், சிறப்பாகக் கலைவளர்ச்சிக்குஞ் செய்த அரும் பெருந் தொண்டுகளைப்பற்றியும், அவரிடத்தே விளங்கிய கல்வி, ஒழுக்கம், வீரம், பொறுமை, பொதுநல விருப்பு முதலிய நற்குணங்களைப்பற்றியும் நன்கு எடுத்துக் காட்டினார்கள்.

குமாரசுவாமிப்புலவர் திருநாள்

தமிழுலகத்தில் என்றுமழியாப் புகழ்படைத்த சுன்னாகம் திரு. அ. குமாரசுவாமிப்புலவரவர்கள் சிவபதமடைந்த திதி ஸ்ரீமுக ஆண்டு, மாசித் திங்கள், 12-ம் நாள், வெள்ளிக்கிழமை மிகவுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்று புலவரவர்களின் திரு

வுருவப்படம் நிலைய மண்டபத்தில் டக்டர் ஐசக் தம்பையா அவர்களால் திறந்து வைக்கப்பட்டபின், திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் தலைமையில் வித்தியாலய மண்டபத்தில் ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. அத்தருணம் பிரமஸ்ரீ சி. கணேசையர் அவர்களாலும், பிரமஸ்ரீ இராமசாமிசர்மா அவர்களாலும், பண்டிதர் ச. கணபதிப்பிள்ளை அவர்களாலும் புலவரவர்களின் சீவியசரித்திரத்தைப்பற்றியும், அவரது புலமையைப்பற்றியும், கல்வி ஒழுக்கம் முதலானவையைப்பற்றியும் முறையே விரிவுரைகள் நிகழ்த்தப்பட்டன.

புலவர் அவர்களின் திருவுருவப் படத்திற்கும், திறப்புவிழாவின் செலவிற்கும் வேண்டிய பணத்தை எமக்கு அன்புடன் தந்துதவிய "ஈழகேசரி"ப் பத்திராசிரியர் திரு. நா. பொன்னையா அவர்களின் தமிழ்மொழிப் பற்றும், தேசாபிமானமும், பரோபகாரமும் எம்மால் என்றும் மறக்கற்பாலனவல்ல.

இவ்வாண்டில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களதும், வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை அவர்களதும் திருநாட்கள் எம்மாற் கொண்டாடப்பட்டன. சைவத் திருவாளர் நல்லூர் த. கைலாசபிள்ளை அவர்கள் திரு. பொன்னம்பலபிள்ளை அவர்களது திருவுருவப்படம் ஒன்றினை நிலையத்திற்கு மிக அன்புடன் உபகரித்தார்கள். அவர்கள் நிலைய முயற்சிகளிற் காட்டிவரும் அன்பிற்கு நாம் என்றும் நன்றியுடையேம்.

ஞாயிறு

நிலையத்தின் தமிழ் வெளியீடாகிய "ஞாயிற்"றின் நான்கு இதழ்கள் வெளிவந்திருக்கின்றன. ஐந்தாம், ஆறும் இதழ்கள் வெளிவரும். எமது "ஞாயிறு" தமிழ் உலகத்திற் சிறந்த வெளியீடுகளுள் ஒன்றெனப் பேரறிவாளரும், பத்திரிகையாசிரியர்களும் ஆகிய பலர் கருதுகின்றனர் என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

"ஞாயிற்"றின் இதழ்கள் நாம் விரும்பியவண்ணம் குறித்த காலங்களில் வெளிவாராதது மிகுந்த விசனத்திற்கிடமான ஓர் நிலை

யாகும். "ஞாயிற்"றின் கையொப்பக்காரராகச் சேர்ந்த அன்பர்கள் தங்கள் கட்டணப்பணத்தை ஒழுங்காக அனுப்பிவையாத குறையே, இந்நிலைக்குப் பெருங்காரணமாகும். "ஞாயிற்"றை அச்சிட்டு வெளியிடுவதற்கான செலவுகள் யாவையும் நிலையம் முன் கொடுத்துக் கையொப்பக்காரரிடமிருந்து வரவேண்டிய பணத்தைப் பின் பெறுதற்கு நிலையத்தில் போதிய பணம் இல்லாததினாலன்றோ எமக்கு இக்கஷ்டம் ஏற்பட்டது!

புதிய ஆண்டில் "ஞாயிறு" முறையாக வெளிவருவதற்கேற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றின் பயனாக "ஞாயிறு" குறிக்கப்பட்ட காலங்களில் வெளிவரும் என நம்புகிறோம்.

"ஞாயிற்"றின் சார்பாகத் தொண்டாற்றிவருபவர்களுள் உயர்திரு சுவாமி உருத்திரகோடீசுவரர் அவர்கட்கும், திரு. சு. நடேச பிள்ளை அவர்கட்கும் நாம் பெரிதுங் கடப்பாடுடையேம். உயர்திரு சுவாமியவர்கள் "ஞாயிறு" வேலையில் இரவு பகலாகக் கண்ணுங் கருத்துமாகவிருந்து தொண்டாற்றிவருகின்றனர். தம் உடல்நலங் குன்றியும், வயது முதிர்ந்துமிருப்பதைபுங் கவனியாது ஆர்வத்துடன் அவர்கள் "ஞாயிறு" அலுவல்களைப் பார்த்துவருவது பெரிதும் பாராட்டத் தக்கதோர் தொண்டாகும்.

திரு. சு. நடேசபிள்ளையவர்கள் "ஞாயிற்"றிற்கு அவ்வப்போது ஏற்படும் பணமுடையைத் தம்மால் இயன்ற அளவு தீர்த்து எமக்குப் பெரும் ஊக்களித்துவருகின்றனர். இவரது பெருந்தகைமை எம்மால் மறக்கற்பாலதன்று.

சொந்த இடம்

நிலையம் பலவிதத்திலுங் காலத்திற்குக்காலம் வளர்ச்சியடைய வேண்டிய ஓர் கழகமாதலின் இதற்கேற்ற ஓர் இடம் அத்தியாவசியம். இப்போது உபயோகித்துவரும் மண்டபம் எமது நிலைய வளர்ச்சிக்கேற்ற அளவினதாகக் காணப்படாமையால், இதனிலும் பெரியதோர் மண்டபத்தை நமக்குரியதாகத் தேடிக்கொள்ளுதல் வேண்டுமென நிர்வாகசபை அபிப்பிராயப்படுகின்றது. புதிய ஆண்டு

முடிவதற்கு முன்னர் நாம் ஒரு சொந்த இடத்தைத் தேடிக் கொள்ளும் வகையில் உறுப்பினர் யாவரும் உழைத்தல் வேண்டும். இன்றே நாம் ஓர் கட்டிட நிதியை ஏற்படுத்தி அதற்கான பல முயற்சிகளையுஞ்செய்து புதிய ஆண்டு முடிவதன்முன்னர் எமக் கேற்ற ஒரு சொந்தக் கட்டிடத்தை ஆக்கிக்கொள்ளுதல் நிலையத் தின் வளர்ச்சிக்கும் சிறப்பிற்கும் ஏற்ற ஓர் செயலாகும்.

சிறப்புவகை அங்கத்தினர்

கலையாக்கத்தின் பொருட்டுத் தொண்டாற்றியுள்ள கல்வியாளர் களைச் சிறப்புவகை அங்கத்தினராகத் தெரிவு செய்வது நிலைய விதிகளில் ஒன்றாகும். நிர்வாகசபை பின்வரும் பெரியார்களைச் சிறப்புவகை அங்கத்தினராகத் தெரிவுசெய்ப அநுமதி பெற்றிருக் கின்றது.

உயர்திரு சுவாமி விபுலாநந்தர்
கனம். சுவாமி ஞானப்பிரகாசர்
கனம். டக்டர் ஐசக் ரி. தம்பையா
டக்டர் அன்றியாஸ் நெல்
முதலியார் செ. இராசநாயகம்

தங்கள் அன்பான அநுமதியைத் தந்து நிலையத்தைச் சிறப் பித்த இவர்கட்கு எங்கள் நன்றி உரித்தாகும்.

நன்கொடை

கனம். டக்டர் ரி. தம்பையா அவர்கள் தாம் எழுதியுள்ள இரண்டு ஆங்கில நூல்களையும், ஓர் தமிழ் ஏட்டுப் பிரதியையும் எமது நூல் நிலையத்திற்கு உபகரித்தனர். யாழ்ப்பாணத்து மது பான ஸ்டோர் தலைவர் திரு. வை. நாகலிங்கம் அவர்கள் ரூபா இரண்டு நன்கொடையாக அன்புடன் உதவினர். இவ்விருவர்கட் கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

உறுப்பினர்

உறுப்பினர் தங்கள் கட்டணத்தைக் குறித்துள்ள காலத்திற் கொடுக்காது விடுவதால், எமது முயற்சிகள் பல தடைபடுகின்றன. உறுப்பினரிடமிருந்து வரவேண்டிய பணத்தொகை ரூபா 557

ஆகும். ஆண்டுக் கணக்குத் திட்டத்தை உறுப்பினர் ஒவ்வொருவருங் கவனமாகப் பார்வையிடின் எமது பொருள்நிலை நன்கு விளங்கும். இந்நிலையிலிருந்து நீங்கி நிலையம் நன்னிலையடைதற்கு உறுப்பினர் ஒத்துழைப்பும், பண உதவியுமே பெரிதும் வேண்டப்படும்.

போது

இவ்வாண்டு எமது வேண்டுகோட்கிணங்கி நிலையத்தில் விரிவுரைகள் நிகழ்த்திய அறிவாளர்கட்கும், "ஞாயிற்"றில் வெளியிடுவதற்குக் கட்டுரைகள் எழுதி உதவிய பலருக்கும் எமது நன்றியை மிகவும் விநயத்துடன் தெரிவித்துக்கொள்ளுகின்றேம்.

நிலயத்தொண்டில் எம்மை மிகவும் ஊக்கப்படுத்தும் வண்ணம் வேண்டிய காலங்களில் தமது சிரமத்தைப் பொருட்படுத்தாது வந்து தமது புத்திமதிகளாலும், விரிவுரைகளாலும் எமக்குப் பேர் உதவிபுரிந்துவருபவராகிய உயர்திரு சுவாமி விபுலாநந்தர் அவர்களது தமிழ்மொழிப் பற்றும், கலையாக்கத்தில் அவர்கள் கொண்டுள்ள ஆர்வமும் என்றும் போற்றற்பாலனவாகும்.

நிலயத்தின் சார்பாகப் பணிசெய்பவருள் முதலியார் சு. திருச்சிற்றம்பலமவர்களது பொதுநலவிருப்பும், தமிழ்மொழிப்பற்றும் பெரிதும் பாராட்டற்குரியன. அவர்கள் நிலயத்தின் வளர்ச்சியிற் காட்டும் ஆர்வமும் விடாமுயற்சியும் ஏனைய உறுப்பினர்கட்கோர் முன்மாதிரியாகும்.

"ஞாயிறு" பத்திரிகை செவ்வனே அச்சிடப்படும் வகையில் மிக்க சிரத்தை காட்டும் சைவப்பிரகாச அச்சியந்திரசாலைப் பொறுப்பாளர் திரு. ச. அக்ஷயலிங்கம் அவர்களுக்கும் நன்றிபாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

எல்லாம்வல்ல இறைவனருளால் நிலயஞ் சென்ற ஆண்டில் மேற்கூறப்பட்ட பணிகளைச் செய்யாநின்றது. நிலயம் மேற்கொண்ட பணிகளைச் சிறப்புற நடாத்துதற்கு வேண்டப்படுஞ் சாதனங்களில் முக்கியமானவை உறுப்பினரின் ஊக்கமும், ஒத்

துழைப்பும், பொருளுதவியுமேயாகும். பொருள் இன்றேல் எம்முடைய நோக்கங்கள் நிறைவேறுதல் அரிது. ஆகவே, உறுப்பினராகவுள்ள அன்பர்கள் தங்கள் கட்டணத்தைக் குறிப்பிட்டவோர் திகதிக்குள் கொடுத்துதவி எம்மை ஊக்கப்படுத்துவதுடன், புதிய உறுப்பினரையுஞ் சேர்த்து நிலையத்தின் வளர்ச்சிக்கு வேண்டும் பல முயற்சிகளையுஞ் செய்யுமாறு வேண்டுகின்றோம்.

4-5-34.

க. நவரத்தினம்,
செயலாளன்.

217

சேர். பொன். இராமநாதன் அவர்கள்

இயற்றிய அரிய தமிழ் நூல்கள்

செந்தமிழ் இலக்கணம்

கலிக்கோ 3–00

மட்டை 2–50

ஸ்ரீமத் பகவத்கீதை

(விளக்கவுரையுடன்) 2–00

விற்குமிடம்:—

இராமநாதக் கல்லூரிப்புத்தகசாலை,

சுன்னுகம்

முதலியார்

செ. இராசநாயகம் அவர்கள்

எழுதிய

யாழ்ப்பாணச் சரித்திரம்

தற்கால ஆராய்ச்சிமுறையில் எழுதப்பட்ட

சிறந்த சரித்திர நூல்.

மாணவர்க்குப் பெரிதும் உபயோகமுடையது.

விலை ரூபா 1–8–0.

''ஞாயிறு'' பிரசுராலயம்,

கலா நிலையம்,

யாழ்ப்பாணம்

218

தனலக்ஷுமி புத்தகசாலை

சுன்னுகம்.

இலங்கையில்,

இலக்கண	இலக்கிய
இதிகாச	நூல்களும்
வேதாந்த	சித்தாந்த
சாத்திர	சம்பந்தமான
சிறந்த	நூல்களும்

ஆராய்ச்சிமுறையி லெழுதப் பெற்ற அரிய நூல்களும், டக்டர் வே. சாமிநாதையர் அவர்கள், திருவல்லிக்கேணி ஸ்ரீ வைஷ்ணவ சம்ப்ரதாய புத்தகசாலையார், தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் முதலியோரால் வெளியிடப்பெற்ற நூல்களும், ஏனைய பிற நூல்களும் ஒருங்கே கிடைக்கப் பெறுமிடம்:—

தனலக்ஷுமி புத்தகசாலை,

சுன்னுகம்.

219

யாழ்ப்பாணத்து
வைத்தியநூல் வெளியீடு.

(விலைகள் குறைக்கப்பட்டு இருக்கின்றன)

1. **வைத்தியவிளக்கம் பதார்த்தசூடாமணியுடன்:**
இருபாலைச் செட்டியார் இயற்றியது. விலை ரூபா 1-50

2. **பரராசசேகரம் 1-ம் பாகம்:**
சிரரோகநிதானம் விலை ரூபா 3-00

இதிலடங்கியுள்ளன.

1 உச்சி (கபால) ரோகம் 46
2 அமுத (மூளை) ரோகம் 16
3 செவி ரோகம் 100
4 நாசி ரோகம்
5 நயன ரோகம் 96
6 வாய் ரோகம்: 1 உதடு 2 பல்லு 3 நாக்கு
7 கழுத்து ரோகம்

3. **பரராசசேகரம் 2-ம் பாகம்:**
கெர்ப்பரோக பாலரோக நிதானங்கள் விலை ரூபா 2-00

4. **பரராசசேகரம் 3-ம் பாகம்:**
சுர், சன்னி, வலி, விக்கல், சத்தி ரோக நிதானங்கள் ,, 1-50

5. **வைத்தியத்தெளிவு:**
செட்டியா ரியற்றியது விலை சதம் 50

6 **வைத்திய சிந்தாமணி:**
அரியதொரு வசன நூல்; எட்டுப்பிரதியி லுள்ளது ,, 1-00

7. **அங்காதிபாதம்:**
பரராசசேகரத்தைச் சார்ந்தது விலை ரூபா 1-00

8. **சோக்கநாதர் தன்வந்திரியம்:**
இது, தன்வந்திரிபகவான் செய்த வடமொழி வைத்திய நூலைத் தழுவி, சொக்கநாதக்குருக்கள் என்பவரால் தமிழிலே செய்யுள்ரூபமாக இயற்றப்பெற்றது. விலைரூபா 1-50

அச்சி லிருப்பன:

பரராசசேகரம் 4-ம் பாகம்:—வாத, பித்த, சிலேற்பனரோக நிதானங்கள்.
ஷை 5-ம் பாகம்:—சுவாதம், பிரமேகம், நீரழிவு, கிரகணி, அதிசாரம் முதலியன.
ஷை 6-ம் பாகம்:—சிரைவிதி (இரத்தம் குத்திவாங்க)
இரட்சாவிதி (சுடுதல்)
சத்திரவிதி, சல்லியவிதி.

ஐ. பொன்னையா வைத்தியர்,
ஏழாலை, சுன்னுகம்